உ

கடவுள் துணை

பூதஞ்சேந்தனுர் இயற்றிய

# இனிது நாற்பது

## மூலமும்,

---

சேன்னைப் பச்சையப்பன் காலேஜ்
தமிழ்ப் பண்டிதர்

**கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள்**

இயற்றிய

## உரையும்.

**மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,**
**87, தம்புசெட்டி வீதி, சென்னை.**

---

விலை அணு 3

[All Rights Reserved]

ஸ்ரீ

கடவுள் துணை

# இனிது நாற்பது

## மூலமும் உரையும்

—இஃது இரண்டு சொல் ஒரு சந்தியா லாகிய சொற்றொடர்; இத்தொடரிலுள்ள சொற்கள் இரண்டனுள், 'இனிது' என்பது, இனிமை + து எனப் பிரிக்கப்படும். இனிமை என்னு மையீற்றுப் பண்புப்பெயர் ''ஈறு போதல்'' என்பதனால் ஈற்று மை கெட்டு 'இனி' என நின்றது. அது 'து' என்னும் ஒன்றன் படர்க்கை விகுதியோடு கூடி 'இனிது' என்றாயிற்று. இனிமையைத் தருவதாகிய செய்தி என்பது இதன் பொருள். இது குறிப்பு வினையாலணையும் பெயர். 'நாற்பது' என்பது, ஓர் எண்ணலளவைப் பண்புப்பெயர்; இது நான்கு + பத்து எனப் பிரிக்கப்படும்; இது நான்காகிய பத்து என்றாதலின் பண்புத் தொகைநிலைத்தொடர். இதில் நிலைமொழியாகிய நான்கு என்பது,

> ''எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
> ஈற்றுயிர் மெய்...கெடல்''

என்றதனால், ஈற்றுயிர்மெய்யாகிய 'கு' கெட்டு,

> ''நான்கன் மெய்யே லறவா கும்மே.''

என்றதனால், ஈற்றய லெழுத்தாகிய னகரமெய் வருமொழி முதலில் வந்த வல்லினத்தை நோக்கி றகர மெய்யாகத் திரிந்தது. வருமொழியாகிய 'பத்து' என்பது,

"முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேகல்"

என்றதனால் இடையிலுள்ள தகரவொற்று நீங்கிப் 'பது' என நின்றது. இவ் விருமொழியுங் கூடி ஒருசொல்லின் தன்மை பெய்தி ஒரெண்ணை யுணர்த்தி நின்றது. இங்ஙன மாகிய நாற்பது ஈண்டு எண்ணலளவை யாகுபெயராய் நாற்பது செய்யுட்களை யுணர்த்தியது. இங்ஙன மமைந்த இனிது என்பதும், நாற்பது என்பதும் கூடி, 'இனிதாகிய செய்தியை யுணர்த்தும் நாற்பது செய்யுள்' என்றுதலின் இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைநிலைத்தொடர் என்க. இஃது ஈண்டு இனிமையாகிய செய்தியை யுணர்த்தும் நாற்பது செய்யுட்களா லாகிய நூல் என்றுதலின், அத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் அந்நூலுக்குக் காரணப் பெயராயிற்று. இனிது என்பது நாற்பது என்பதன் இயற்பெயர்ப் பொருளாகிய எண்ணலளவையை விசேடிக்காமல் ஆகுபெயர்ப் பொருளாகிய செய்யுளை விசேடித்து நிற்றலின், இதனை அன்மொழித்தொகை என்றல் குற்றமன்றோ வெனின், நிலைமொழியானது வருமொழிப் பொருளை விசேடியாமல் நிலைமொழி வருமொழி என்னும் அவ் விருமொழிகளின் புறத்துத் தொக்கு நிற்கு மொழியை விசேடித்து நிற்குந் தொடரை அன்மொழித் தொகை என்றலே குற்றமாம்; இஃது அன்னதன்று; இதில்

நிலைமொழி வருமொழிகளின் புறத்துத் தொக்கு நின்ற மொழி நூல் என்பது. செய்யுள் என்பது ஆகுபெயர்ப் பொருளாமேனும் வருமொழிப் பொருளே. இனிது என்பது இரு மொழிகளின் புறத்துத் தொக்குநின்ற நூல் என்பதை விசேடியாமல் வருமொழியின் பொருளாகிய செய்யுள் என்பதையே விசேடித்து நிற்றலின் இத் தொடரை அன்மொழித்தொகை என்றல் குற்ற மன்றும் என்பது. இதில் உள்ள இனிய செய்திகள் பலவாதலின் இனிது என்றது சாதி ஒருமை என்க.

இந்நூலை 'இனியது நாற்பது' 'இனியவை நாற்பது' எனவுங் கூறுப. இவற்றுள், முதலதில் யகரமெய் தோன்றியது சந்தி, அகரம் சாரியை; இரண்டாவதில் அவற்றோடு 'து' என்னும் ஒன்றன்படர்க்கை விகுதிக்குப் பதிலாக 'வை' என்னும் பலவின்படர்க்கை விகுதி வந்தது.

---

## நூல்

1. கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது.

(பதவுரை) கண் மூன்று உடையான் - மூன்று கண்களையுடைய சிவபிரானுடைய, தாள் - திருவடிகளை, சேர்தல் - (மனத்தால்) அடைதல், கடிது இனிது - மிகவும் நல்லது; தொல் - பழமையாகிய, மாண் - மாட்சிமையினையுடைய, துழாய் மாலையானை - (துழாய்) பத்திரத்தினாலாகிய மாலையை அணிந்த திருமாலை, தொழல்-வணங்

குதல், இனிது - நல்லது; முகம் நான்கு உடையானை - நான்கு முகங்களையுடைய பிரம்மதேவனை, முந்துறச் சென்று - முற்படப் போய், பேணி அமர்ந்து - விரும்பி இருந்து, எத்தல் - துதித்தல், இனிது - நல்லது.

(கருத்துரை) பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னு மும்மூர்த்தி களையும் வழிபடுதல் இனிது என்பது.

(விருத்தியுரை) 'கண் மூன்று' என்பதை 'மூன்று கண்' எனவும், 'முந்துறப் பேணி முகநான் குடையானைச், சென்றமர்ந் தேத்த லினிது' என்பதை 'நான்கு முகம் உடையானை முந்துறச் சென்று பேணி அமர்ந்து ஏத்தல் இனிது' எனவும் இயைத்துக் கொள்க. மூன்று கண்கள் - சோமசூரியாக்கினிகள்.

'கண்' என்னுஞ் சொல்லை முதற்கண் வைத்தார், கண்டறி தற்குக் கண் இன்றியமையாதவாறுபோல, மாந்தர்கள் எவற்றையும் பகுத்தறிதற்குக் கல்வி யின்றியமையாததாம் என்றற்கு.

'மூன்றுகண்' என்னும் விசேடணத்தாற் சிவபிரானையும், 'துழாய்மாலை' என்னும் விசேடணத்தால் திருமாலையும், 'நான்கு முகம்' என்னும் விசேடணத்தாற் பிரம்மதேவனையும் குறித்தார்.

முதலில் அழித்தற் கடவுளாகிய சிவபிரானையும், இரண்டா வது காத்தற் கடவுளாகிய திருமாலையும், மூன்றாவது படைத்தற் கடவுளாகிய பிரம்மதேவனையுங் கூறினார். நூலறிவான் அறியா மையை அழித்து, அதனு லுணர்ந்த நல்லன காத்து, அவற்றை உலகத்தார் இனிதுணர அளித்தல் வேண்டும் என்றற்கு.

இங்ஙன மூவர் வணக்கங் கூறினாரேனும், முக்குணத்தான் அம் மூவராகிய முதற் கடவுள் ஒருவரே யாதலின் அம் முதற் கடவுள் வணக்கமே கூறினா ராயிற்று. முதற்கடவுள் ஒருவரே முக் குணத்தான் மூவராயினர் என்பதை,

(க-ம் பத்து, ரு-ம் திருவாய்மொழி)

"தானோ ருருவே தனிவித்தாய்த் தன்னின் மூவர் முதலாய
வானோர் பெருமான்" எனவும்,

(திருமங்கைமன்னர் திருநெடுந்தாண்டகம், உ-ம் பாசுரம்)

"பாருருவி நீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவின் மூவருமே என்ன நின்ற
இமயவர்"

எனவும் வருவனவற்றாலும் பிறவற்றாலும் அறிக.

(ஆரணியகாண்டம்-கவந்தப்படலம்-சஉ-ம்-செய்யுளில்)

"மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ"

என்று கம்பநாட்டாழ்வார் கூறியதும் இக் கருத்துப்பற்றிய தேயாம் என்க. இவற்றுள் 'முக்குணத்தான்' என்பது உய்த் துணர நின்றது.

அம் முதற்கடவுள் வணக்கமே நேரிற் கூறாத தென்னை எனின், அம் முதற்கடவுள்,

(க-ம் பத்து, ங-ம் திருவாய்மொழி)

"யாருமோர் நிலைமைய னெனவறியு அரியவன்"

ஆதலின், 'சிற்குணத்தருந் தெரிவரும்' அவனது 'நன்னிலை மைப்' புலங்கொள உணர்ந்துரைத்தல் கூடாமையின் என்பது.

இவ் வுலகின்கண் இறைவன் றாளை மனத்தாலன்றி அடை தல் முடியாமையின் 'சேர்தல்' என்பதற்கு மனத்தால் அடைதல் என்று.பொருள் கூறப்பட்டது.

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்."

ஆதலின், 'தாள் சேர்தல் இனிது' எனவும், "கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே" யாம் ஆதலின், 'தொழல் இனிது' எனவும்,

"இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு
இருள்சேர் இருவினையுஞ் சேரா"

ஆதலின், 'ஏத்தல் இனிது' எனவுங் கூறினர். இவ்வாற்றான் முறையே மனம், காயம், வாக்கு என்னு முக்கரணங்களாலுங் கடவுள் வணக்கங் கூறினாராயிற்று.

'கடிது' என்பது 'கடி' என்னும் உரிச்சொல்லின் திரிபு; இஃது இன்னும் வேறு வகையாகவுந் திரிந்து வரும். இது தனக்குரிய பொருள்கள் பலவற்றுள், ஈண்டு மிகுதி என்னும் பொருளில் வந்தது. 'கடி' என்னும் உரிச்சொல் இப் பொருளில் வருதலும், பல வகையாகத் திரிதலும் உடையதாம் என்பதனைத்

(தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-உரிச்சொல்லியலில்)

"கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
அச்ச முன்றேற் றாயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே."

என வரும் அ௳-ம் சூத்திரத்தானும் அதன் உரையானும் அறிக.

ஏகாரங்கள் இரண்டும் அசைகள்.

2. பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே
கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

(ப - ரை) பிச்சைபுக்கு ஆயினும்- பிச்சை எடுத்தானாலும், கற்றல் - (கற்கவேண்டிய நூற்களைக்) கற்றல், மிக இனிது-மிகவும் இனிதாம்; கற்ற - தான் கற்றனவாகிய நூற்களின் பொருள்கள், அவை - சபையின்கண், கைகொடுத்தல்-(மறதியினாற்கொள்ளப்படாமல் வந்து) உதவுதல், சாலவும் - மிகவும், முன் இனிது-முற்பட இனிதாம்; முத்து ஏர் - முத்துப்போன்ற அழகினையுடைய, முறுவலார் - பற்களை யுடையவர்களாகிய பெண்களது, சொல் - சொல்லானது, இனிது - (கேட்குந்தோறும்) இனியதாகும்; ஆங்கு-அதுபோல, மேலாயார் - மேன்மையுடையவர்கள் ஆனவர்களை, சேர்வு - சேர்தல், தெற்றவும் இனிது-தெளியுந்தோறும் இனியதாகும்.

(க - ரை) பிச்சை எடுத்தேனுங் கற்றலும், கற்ற நூற்கள் சமயத்து உதவுதலும், இளமாதரது சொல்லும், மேலோர்களுடைய சேர்க்கையும் இனியவாம் என்பது.

(வி - ரை) 'பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகவினிது' என்றமையால் மாந்தர்க்குக் கல்வி இன்றியமையாதது என்பது பெறப்பட்டது. கற்றோரே கண்ணுடையரென்று கூறப்படுவராதலானும், கற்றோர்க்கு எவ்வூரும் தம்மூராமாதலானும், தக்கவின்ன தகாதன இன்னவென் றெண்ணி யுணரும் உணர்வு கற்றோர்க்கே யுளதாம் ஆதலானும்,

> "பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
> சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்."

ஆதலானும், 'ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும், மூத்தோன் வருக வென்னா தவருள், அறிவுடை யோனாறு அரசுஞ் செல்லும்'' ஆதலானும், 'பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகவினிது' என்றார். 'பிச்சை புக்காயினும்' என்ற இழிவு சிறப்

பும்மை மிகவும் வறுமையுற்றுள்ள காலத்தினுங் கற்றல்வேண்டும் என்னும் பொருளைத் தருதலால், வறுமை யில்லாத காலத்துக் கற்றல் வேண்டும் என்பது சொல்லாமலே அமையும். அவ் வும்மையை எச்சப்பொருளோடு கூடிய இழிவு சிறப்பு உம்மை எனக் கொண்டு, 'செல்வ முள்ள காலத்துக் கற்றலே யன்றி வறுமை யுற்ற காலத்தினுங் கற்றல் வேண்டும், என் றுரைப்பினும் பொருந்துமேனும், செல்வமுடையவர்கள் கற்றலே மிகுதியுங் குறைவா யிருத்தலின், அதனை இழிவுசிறப்பும்மை எனவே கொண்டு முற்கூறியபடி கூறுதலே சிறப்புடையதாம்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுக் காயினுங் கற்கை நன்றே."

என்று இவ்வாறே பிறருங் கூறுதல் காண்க.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றநிலை முனியாது கற்றல் நன்றே."

எனப் புறநானூற்று கஅந-ம் செய்யுளிற் கூறியதனையும் ஈண்டுக் கவனிக்க. இது செல்வ முடையார்க்குப் பொருந்தும்.

'கற்ற' என்றது பலவின் படர்க்கை வினையாலணையும் பெயர்; 'கற்றனவாகிய நூற்கள்' என்பது பொருள்; அது காரணவாகுபெயராய் நூற்களால் உணர்த்தப்படும் பொருளை யுணர்த்தியது. கற்ற+அவை என்பது நிலைமொழி யீற்றகரந் தொகுத்தலாய்க் 'கற்றவை' என்றாயிற்று. 'நற்சவை' என்றும் பாடங் கூறுவர்; அதனினும் 'கற்றவை' என்பதே எல்லா வகையினும் சிறந்ததாதலை யுணர்க.

'முத்தேர் முறுவலார்' என்று பற்களின் அழகைக் கூறிய குறிப்பினால் இளம்பெண்கள் என்பதும், அவர்கள் அழகிற் சிறந்தார் என்பதும் பெறப்படும். அத்தகைய பெண்கள் கூறுஞ் சொற்கள் கேட்குந்தோறும் ஆடவர்களது மனத்துயரைக் களைந்து இன்பம்

பயக்கு மாதலின் அவர் 'சொல்லினிது' என்றார். சொல் இனிது என்றமையின், அச் சொல் இன்சொல் என்பது பெறப்பட்டது.

அவர்களது சொல் கேட்குந்தோறும் இனிமை பயத்தல் போல, மேலாயார் சேர்வு அவர் சேர்க்கையினுலாம் பயனைத் தெளியுந்தோறும் இனிமை பயப்பதாம் என்றதவின், 'முத்தேர் முறுவலார் சொல்லினிது' என்றது உபமானமாம் எனவும், 'மேலாயார்ச் சேர்வு தெற்றவும் இனிது' என்றது உபமேயமாம் எனவுங் கொள்க.

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு."

என்ற குறளிலே இங்ஙனம் உபமான உபமேயங்கள் கூறப்பட்டிருத்தலைக் காண்க.

'ஆங்கு' என்பது உவம உருபிடைச்சொல். உபமேயத்தில் தெளியுந்தோறும் என்றமையின் உபமானத்தில் கேட்குந்தோறும் என்பது வருவிக்கப்பட்டது.

3. உடையான் வழக்கினி தொப்ப முடிந்தால்
மனைவாழ்க்கை முன்னினிது மாணுதா மாயி
னிலையாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு.

(ப - ரை) உடையான் - செல்வ முடையவனது, வழக்கு - ஈகை, இனிது-இனிதாகும்; ஒப்ப-(மனையாள் உள்ளமும் கொழுநன் உள்ளமும்) ஒத்திருக்கும்படி, முடிந்தால்-(அன்பு) அமையப் பெற்றால், மனை வாழ்க்கை - (மனையாளோடு கூடிச் செய்தற்குரிய) இல்லற வாழ்க்கையானது, முன் இனிது - மிகவும் இனிதாகும்; மாணுதாம் ஆயின் - (மனை வாழ்க்கை, அவ்வித) மாட்சிமை அமையாததானால், நெடியார் - (அத்தகையோர்) நீட்டியாதவ

ராய், நிலையாமை நோக்கி - (யாக்கை முதலியவற்றின்) நிலை இன்மையை ஆய்ந்துணர்ந்து, தலை ஆக - (தமக்கு நாற்பயன்களுட்) சிறந்ததாகிய வீடு உண்டாகும்படி, துறத்தல் - (உலகப் பற்றினை) விட்டு நீங்குதல், நன்கு இனிது-மிகவும் இனிதாகும்.

(க - ரை) செல்வ முடையவர்களின் ஈகையும், தன் மனத்தோடு ஒத்தொழுகு மனைவியை உடையவனது இல்வாழ்க்கையும், இல்வாழ்க்கை சிறந்தமையாதாயின் துறத்தலும் இனியவாம் என்பது.

(வி - ரை) உடையான் - குறிப்பு வினையாலணையும் பெயர். வழக்கு - வழங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்; வழங்குதல் - ஈதல். ஈகை, கொடை என்பன ஒருபொருட் சொற்கள். முடிந்தால் என்பது ஈண்டு அமைந்தால் என்னும் பொருளது. மாணாது - மாட்சிமை அமையாதது; இஃது ஒன்றன்படர்க்கை எதிர்மறை வினையாலணையும் பெயர்; உடன்பாட்டில் மாண்டது என வரும். துறத்தலாவது உலகப் பற்றொழித்தலேயாம்; ஆதலின், துறத்தல் என்பதற்கு 'உலகப் பற்றினை விட்டு நீங்குதல்' என்று பொருள் கூறப்பட்டது. தலை - தலைமை; அஃது ஈண்டு சிறப்பென்னும் பொருளது; இது பண்பாகுபெயராய் நாற்பயன்களுட் சிறந்ததாகிய வீட்டை யுணர்த்திற்று. அறம் பொருள் இன்பங்களின் பற்றினை விட்டே அடைதற்குரியது வீடாகலின் 'தலை ஆகத் துறத்தல்' என்றதற்கு 'தமக்கு நாற்பயன்களுட் சிறந்ததாகிய வீடுண்டாகும்படி உலகப் பற்றினை விட்டு நீங்குதல்' என்று பொருள் கூறப்பட்டது. நெடியார் - முற்றெச்சம்; 'நீட்டியாதவராய்' என்பது பொருள்.

4. ஏவது மாறு விளங்கிளை முன்னினிதே
நாளுநவை போகான் கற்றன மிகவினிதே

ஏருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கோ ணட்புத் திசைக்கு.

(ப-ரை) ஏவுவது-ஏவிய வேலையை, மாறு-மறுக்காத (மறுக்காமல் செய்கின்ற), இளங்கிளை - பிள்ளை, முன் இனிது - மிகவும் இனியனுவான்; நவை - குற்றமான வழியில், போகான் - செல்லாதவனுய், நாளும் - ஒவ்வொரு நாளும், கற்றல் - (கற்க வேண்டுவனவாகிய நூற்களைக்) கற்றல், மிக இனிது - மிகவும் இனிதாகும்; ஏர் உடையான்-(சொந்தமான தாக) ஏரை உடையவனது வேளாண்மை - வேளான்மையானது, இனிது - இனிதாகும்; ஆங்கு - அவற்றைப்போல, தேரின்-ஆராயுமிடத்து, திசைக்கு-(தான் செல்லும்) திசையில், நட்பு கோள் - (அங்குள்ளாரை) நட்பினராகக் கொள்ளுதல், இனிது - இனிதாகும்.

(க - ரை) ஏவின வேலையை மறுக்காமற் செய்யும் பிள்ளைகளும், எப்பொழுதும் தீயவழியிற் செல்லாமல் கற்பன கற்றலும், ஏர் உடையவன் பயிர் செய்தலும், ஒருவன் தான் செல்லு மிடங்களில் எல்லாம் நட்பினரை உடையவனுயிருத்தலும் இனியவாம் என்பது.

(வி - ரை) 'ஏவது' என்பது ஒன்றன் படர்க்கைத் தெரிநிலை வினையாலணையும் பெயர். ஏவுவது என்பது தன் பகுதியாகிய ஏவு என்பதின் ஈற்று வகர வுகரங் கடைக்குறையாய் 'ஏவது' என்ருயிற்று; இதில் உள்ள எதிர்கால வகரவொற் றிடைநிலை ஈண்டு முக்காலத்திற்கும் பொதுவாந் தன்மையை யுணர்த்தியது. மாறுத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் ஈறுகெட்டு 'மாறு'என நின்றது. இளங் கிளை என்பது ஈண்டு இளமையாகிய சுற்றத்தினையுடையான் என்ருய்ப் பிள்ளையை யுணர்த்தியது; இது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப்பெயர். போகான் - முற்றெச்சம். திசைக்கு - எழனுருபில் நான்கனுருபு மயங்

கியது. நட்பு - பண்பாகுபெயராய்க் குற்றமான வழியை யுணர்த்தி யது.

5. யானை யுடைய படைகாண்டன் மிகவினிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

(ப - ரை) யானை உடைய - யானைகளை உடைய, படை - சேனையை, காண்டல் - பார்த்தல், மிக இனிது - மிகவும் இனிதாகும்; ஊனைத் தின்று-(பிறிதோர் உயிரின்) தசையைத் தின்று, ஊனை - (தன்) உடம்பை, பெருக்காமை - வளர்க்காமை, முன் இனிது - மிகவும் இனிதாகும்; கான் யாற்று - காட்டாற்றினது, கரை அடை - கரையைச் சார்ந்த, ஊர் இனிது-ஊர் இனிதாகும்; ஆங்கு-அவற்றைப்போல, மானம் உடையார் - பெருந்தன்மையை உடையவர்களது, மதிப்பு-நன்கு மதிப்பானது, இனிது - இனிதாகும்.

(க - ரை) யானையை உடைய சேனையைப் பார்த்தலும், மாமிசத்தைத் தின்று மாமிசத்தினு லாகிய தேகத்தை வளர்க்காமையும், காட்டாற்றின் கரையைச் சார்ந்த ஊரும், மேலோர்களால் மதிக்கப்படுதலும் இனியவாம் என்பது.

(வி - ரை) கான் யாறு - காட்டினின்று வரும் ஆறு. முற்காலத்தார்: யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட் படை என நால்வகைப் படைகளை வைத்திருந்தனர். அவற்றுள் யானைப்படை சிறந்த தென்ப. ஆதலின், 'யானை யுடைய படை காண்டல் இனிது' என்றார். அடைகரை என்பதைக் கரை அடை என இயைக்க. 'மானமுடையார் மதிப்பு இனிது' என்பதற்குப் 'பெருந்தன்மையை யுடையவர்களால் ஒருவன் நன்கு மதிக்கப்படு

தல் நல்லது' என்பது கருத்து. ஊன் என்னுஞ்சொற்கள் இரண்டனுள் பின்னுள்ளது கருவியாகுபெயராய் உடம்மை யுணர்த்திற்று. தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான் அருளாளுத லிலன் ஆதலானும்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்."

ஆதலானும், 'ஊனைத்தின் றூனைப் பெருக்காமை இனிது' என்றார். ஆற்றின் கரையிலுள்ள ஊர்: நீர் நிலவளம் பொருந்தித் தன்கண் வசிப்பார்க்குப் பலவகையானுஞ் சுகத்தை விளைக்குமாதலால் 'கான்யாற் றடைகரை யூர் இனிது' என்றார்.

6. கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

(ப - ரை) கொல்லாமை - (ஒருயிரையும்) கொல்லாதிருத்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; மா - மேன்மையினையுடைய, ராயன் - அரசன், கோல் - ஆளுகையை, கோடி செய்யாமை - முறைதவறிச் செய்யாதிருத்தல், முன் இனிது - மிகவும் நல்லது; எய்தும் திறத்தால் - (குடிகளுக்கு நன்மை) உண்டாகும் வகையினுல், செங்கோலன் ஆகுதல் - செம்மையாகிய ஆளுகையை உடையவனு யிருத்தல், நன்கு இனிது - மிகவும் இனிதாகும்; யார்மாட்டும் - எவரிடத்தும், பொல்லாங்கு-(பிறர்மீது) தீமைகளை, உரையாமை - சொல்லாதிருத்தல், நன்கு இனிது - மிகவும் இனிதாகும், என்ப - என்று அறிவுடையோர் சொல்லுவர்.

(க - ரை) ஒருயிரையுங் கொல்லாமையும், அரசன் முறைதவறுன காரியத்தைச் செய்யாதிருத்தலும், (அவன்) நீதியான

ஆளுகையை உடையவனு யிருத்தலும், யார்மீதும் தீமைகளைச் சொல்லாமையும் இனியவாம் என்பது.

(வி - ரை) கோல்: பிராணிகளை ஆளுதற் குரியதாதலின் அது காரண ஆகுபெயராய் ஆளுகையை உணர்த்திநிற்கும்; முறை திறம்பாத ஆளுகையைச் செங்கோல் என்றும், முறை திறம்பிய ஆளுகையைக் 'கொடுங்கோல்'என்றுங் கூறுவர்; ஆதலின், 'கோல் கோடிச் செய்யாமை' என்பதற்கு 'ஆளுகையை முறை தவறிச் செய்யாதிருத்தல்' என்று பொருள் கூறப்பட்டது. கோடுதல் - வளைதல்; அஃது ஈண்டு முறையினின்று மாறுதலை உணர்த்தி நின்றது; ஆதலின், 'கோடி' என்பதற்கு 'முறை தவறி' என்று பொருள் கூறப்பட்டது, மா - உரிச்சொல். ராஜன் என்னும் வடசொல் 'ராயன்' எனத் திரிந்து நின்றது.

"செங்கோல னாகுதல்,
எய்துந் திறத்தால் இனிதென்ப யார்மாட்டும்,
பொல்லாங் குரையாமை நன்கு."

என்றதிலுள்ள நன்கு என்பதனை இனிது என்பதனோடு கூட்டி 'எய்துந் திறத்தால் செங்கோல னாகுதல் நன்கு இனிது' எனவும், 'யார்மாட்டும் பொல்லாங் குரையாமை நன்கு இனிது' எனவும் இயைத்துப் பொருள் கொள்க. இவ்வாறன்றிச் செங்கோல னாகுதல் என்றதனோடு இரண்டாம் அடியிலுள்ள முன்னினிது என்பதைக் கூட்டிச் 'செங்கோல னாகுதல் முன்னினிது' எனவும், 'எய்துந் திறத்தால் யார் மாட்டும் பொல்லாங் குரையாமை நன்கு இனிது' எனவும் இயைத்துப் பொருள் கூறுதலு முண்டு.

7. ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

(ப - ரை) ஆற்றும் துணையால் - (ஒருவன் தன்னால்) கூடிய அளவினால், அறம் - தருமத்தை, செய்கை - செய்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; பால் பட்டார் - (நன்னெறி தீநெறி என்னும் இரு பகுதிகளுள், நன்னெறியாகிய) பகுதியிற் பொருந்தியவர்கள், கூறும் - சொல்லுகின்ற, பயம் - நற்பயனைத் தரும், மொழி - சொற்களினுடைய, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாகும்; வாய்ப்பு உடையராகி - (நற்குணங்கள் பலவும்) பொருந்தியவர்களாகி, வலவைகள் அல்லாரை - (நாணவேண்டுவனவற்றில்) நாணுங் குணமுடையவர்களாயிருப்பவர்களை, காப்பு அடைய - (ஒருவன் தனக்குக்) காவலாகப் பொருந்தும்படி, கோடல் - கொள்ளுதல், இனிது - இனிதாகும்.

(க - ரை) தம்மாற் கூடியவரையில் தருமஞ் செய்தலும், நன்னெறியிலே நிற்பவர்களது மாண்பான சொல்லும், ஆண்மை உடையவர்களைக் காவலாகக் கொள்ளுதலும் இனியவாம் என்பது.

(வி - ரை) ஒருவன் தன் வருவாயின் அளவிற்கு மிஞ்சித் தருமஞ் செய்வானாயின் தானுந் துன்புற்றுப் பிறகு தருமஞ் செய்தற்கும் இயலாதவனாய்விடுவான்; ஆதலால், 'ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிது' என்றார்.

"ஆன முதலி லதிகஞ் செலவானான்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு." எனவும்,

"வளவ னாயினு மளவறிந் தழித்துண்." எனவும்,

"கையொத் திருந்தா லைய மிட்டுண்." எனவும்

வருவனவற்றையும் ஈண்டுக் கவனிக்க.

ஆற்றுந்துணை - கூடிய அளவு. பால் - பகுதி; மாந்தர்களின் ஒழுக்க நெறி: நன்னெறி தீநெறி என்னும் இரண்டு பகுதியின்

அடங்குவதாகும்; அவற்றுள் ஈண்டுப் பால் என்றது நன்னெறி யாகிய பகுதியை என்க; இது, இடநோக்கிக் கொண்ட பொருள் என்க. பாற்பட்டார் கூறு மொழி என்னுது பயமொழி என்று அடைகொடுத்துக் கூறியது அத்தகையோர் கூறு மொழிகள் யாவும் நற்பயன் தருவனவாகவே இருக்கும் என்பதை விளக்கு தற்காக என்றறிக. தீ நெறிப்பட்டவர்கள் சொல்லினும் வியப்பு சாதுரியம் முதலிய மாண்புகள் இருப்பினும், அவர் கூறு மொழி கள் நன்மை செய்வன வல்லவாதலால், அம் மொழிகளின் மாண்பு கள் இனிய வாகா; நன்னெறிப்பட்டார் கூறு மொழி மாண்பே இனிதாம் என்பார் 'பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பு இனிது' என்றார். பயம் என்றது ஈண்டு நற்பயனை என்க; இது, குணவான் என்றால் நற்குண முடையான் என்று கொள்வது போன்றது.

வலவைகள் - நாணிலிகள்; வலவைகள் அல்லார் - நாணிலிகள் அல்லாதவர்கள் (நாண முடையவர்கள்). கோடல்-தொழிற்பெயர்; இதில், கொள் - பகுதி, இது கோள் என்றானது விகாரம், தல் - விகுதி, பகுதியினீற்று ளகரவொற்று கெட்டதும், விகுதியின் தகரம் டகரம் ஆனதுஞ் சந்தி.

8. அந்தண ரோத்துடைமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடையா னாத லினிது.

(ப - ரை) அந்தணர்-பிராமணர், ஓத்து உடைமை-வேதத்தை (ஓதுதல்) உடையவர்களா யிருத்தல், ஆற்ற மிக இனிது - நிரம்ப இனிதாகும்; பந்தம்-சுற்றத்தினரை, உடையான் - உடையவனது, படை ஆண்மை - படையை (எடுத்து) ஆளுந்தன்மை, முன் இனிது - மிகவும் இனிதாகும்; தந்தையே ஆயினும் - (தன்)

தந்தையே ஆனாலும், தான்-அவன், அடங்கான் ஆகுமேல்-அடங்காதவனானால், கொண்டு - (அவனை) உடன்கொண்டு, அடையான் ஆதல் - (ஓரிடத்தை) அடையாதவன் ஆகுதல், இனிது - இனிதாகும்.

(க - ரை) பிராமணர்கள் வேதத்தைக் கற்றிருத்தலும், சுற்றத்தவர்களை உடையவன் போரில் ஆயுதங்களை எடுத்து ஆளும் வீரத்தன்மையும், அடக்க மில்லாதவனைச் சேராதிருத்தலும் இனியவாம் என்பது.

(வி - ரை) அந்தணர் - அழகாகிய குளிர்ந்த கருணையையுடையவர்; இஃது இப் பொருளுடையதாதலை,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கு
செந்தண்மை பூண்டொழுக லான்."

என்றதனா லறிக.

இது காரண இடுகுறிப்பெயராய் ஒரு வகுப்பினரை உணர்த்தியது. ஓது என்னு முதல்நிலை ஒத்து எனத் திரிந்து ஓதுதல் என்னும் பொருளதாயிற்று; இது முதனிலை திரிந்த தொழிற்பெயர்; இஃது தொழிலாகுபெயராய் முன்னே ஏட்டில் எழுதாமல் ஒருவர் சொல்ல ஒருவர் கேட்டு ஓதிவந்த வேதத்தை யுணர்த்திற்று. பந்தம் - தொடர்பு; அது தொழிலாகுபெயராய்ச் சுற்றத்தவரை உணர்த்திற்று. சுற்றம் - சூழ்ந்திருத்தல்; அதனை யுடையவர் சுற்றத்தவர்.

"சுற்றத்திற் கழகு சூழவிருத்தல்."

என்றதனை ஈண்டுக் கவனிக்க. படை என்பதில் படு - பகுதி, உகரங் கெட்டது சந்தி, ஐ - கருவிப்பொருள் விகுதி; பகைவரை அழித்தற்குக் கருவியாயிருப்பது என்பதுபொருள். தந்தையேஎன்பதி

லுள்ள ஏகாரம் ஆயினும் என்பதிலுள்ள உம்மையின் உயர்வு சிறப்புப் பொருளை ஒருவாறு தானுந் தழுவி நிற்கின்றது; அதனை அசை எனினுமாம். எல் என்பது எனின் என்பதன் மரூஉ.

பஃறொடை வெண்பா

9. ஊருங் கலிமா வுரனுடைமை முன்னினிதே
தாரணி மன்னர் தமக்குற்ற போர்க்களத்துக்
கார்வரைபோல் யானைக் கதங்காண்டன் முன்னினிதே
யார்வ முடையவ ராற்றவு நல்லவை
பேதுறூர் கேட்ட லினிது.

(ப - ரை) ஊரும் - (தாம் ஏறிச்) செலுத்துகின்ற, கலிமா- மிக்க குதிரைகள், உரன் உடைமை - வன்மையை உடையனவா யிருத்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; தார் அணி - (வெற்றி) மாலையைச் சூடும், மன்னர் - அரசர்கள், தமக்கு உற்ற- தமக்கு நேர்ந்த, போர்க்களத்து - செருக்களத்தில், கார் - கருமை யாகிய, வரைபோல்-மலையைப்போலத் தோன்றும், யானை-யானை களினுடைய, கதம் - கோபத்தை, காண்டல் - பார்த்தல், முன் இனிது-மிகவும் இனிதாகும்; ஆர்வம் உடையவர் - (எல்லா உயிர்க ளிடத்தினும்) அன்புடையவர்கள், பேது உறூர்-மயக்கம் அடை யாதவர்களாய், ஆற்றவும் - மிகவும், நல்லவை கேட்டல் - நல்ல கேள்விகளைக் கேட்டல், இனிது - இனிதாகும்.

(க - ரை) தாம் ஏறிச் செலுத்தும் குதிரை வன்மை உடையதாயிருத்தலும், அரசர்கள் போர்க்களத்திலே யானைகளின் கோபத்தைக் காணுதலும், உயிர்களினிடத்திலே அன்புடையவர்கள் எப்பொழுதும் நல்ல கேள்விகளைக் கேட்டலும் இனியவாம்.

(வி -ரை) ஊர்தல் - செலுத்தல், ஏறுதல். 'உரம்' என்பது மகரத்துக்கு னகரம் போலியாய் 'உரன்' என்றாயிற்று. உயிர்க

ரிடத்தில் அன்புடையவர்கள் மிகவும் நல்ல கேள்விகளைக் கேட்பா ராயின் அவர்கள் அன்பு மேன்மேலும் வளரப்பெற்று உயிர்களுக்குப் பல நன்மைகளைப் புரிவார்க ளாதலின், 'ஆர்வ முடையவர் ஆற் றவும் நல்லவை, கேட்டல் இனிது' என்றும், அவர்கள் தீயவர்க ளின் மொழிகளைக் கேட்டு மன மயங்காதிருத்தல் வேண்டுமென் பார் 'பேதுறார்' என்றுங் கூறினர். பேது - மயக்கம்; உறார்-முற் றெச்சம்; உறாதவராய் என்பது பொருள்; அன்றிப் 'பேதுறார்' என்பதை ஒரு சொல்லாகக் கொண்டு 'மயங்காதவராய்' என்றுரை த்தலுமாம்; இதிற் பேதுறு-பகுதி

10. தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
அங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

(ப - ரை) தம்கண்-தம்மிடத்தில், அமர்வு உடையார்-விருப் பம் உடையவர்கள், வாழ்தல் - (செல்வமுடையவர்களாய்) வாழ் வது, முன் இனிது - மிகவும் இனிதாகும்; அம் கண் - அழகிய இடத்தையுடைய, விசும்பின் - ஆகாயத்தின்கண், அகல் - (ஒளி) பரந்த, நிலா - சந்திரனை, காண்பு - காணுதல், இனிது - இனி தாகும்; பங்கம் இல்-கெடுதலில்லாத, செய்கையர் ஆகி - செய்கை யை உடையவர்களாகி, யார்க்கும்-யாவரிடத்தும், பரிந்து-இரங்கி, அன்பு உடையர் ஆதல் - அன்புடையவர்களாயிருத்தல், இனிது- இனிதாகும்.

(க - ரை) கலை நிரம்பிய சந்திரனைக் காணுதலும், தம்மிடத் திலே அன்புடையவர்கள் சுகமாய் வாழ்தலும், தாம் குற்றமில்லாத செய்கைகளை உடையவர்களாகி எல்லா உயிர்களிடத்திலும் அன் பும் அருளும் உடையவர்களாய் இருத்தலும் இனியவாம்.

(வி - ரை) அமர்வு - விருப்பம்; சேர்தல் என்றுரைத்தலு மாம். தாம் - அசை. தங்கண் என்பதில் 'கண்' ஏழனுருபு. அங் கண் என்பதில் 'கண்' இடப்பெயர். விசும்பின் என்பதில் 'இன்' சாரியை; ஏழனுருபு தொக்கு நின்றது. அகல் நிலா - வினைத் தொகை. நிலா - சந்திரிகை; அது பண்பாகுபெயராய்ச் சந்திரனை யுணர்த்தியது. பரிதல் - இரங்குதல். யார்க்கும் என்பதில் உள்ள நான்கன் உருபு ஏழனுருபில் வந்து மயங்கியது. உம்மை முற்றுப் பொருளது.

11. கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு.

(ப - ரை) கடம் - கடனாக வாங்கிய பொருளால், உண்டு வாழாமை-உண்டு வாழாதிருத்தலை, காண்டல்-பார்த்தல், இனிது-இனிதாகும்; நிறை - கற்பாகிய, மாண்பு இல் - மாட்சிமையாகிய குணம் இல்லாத, பெண்டிரை-மனைவியரை, நீக்கல் - விலக்கிவிடு தல், இனிது-இனிதாகும்; மனம் - மனத்தின்கண், மாண்பு இலா தாரை-மேன்மையாகிய குணங்கள் இல்லாதவர்களை, அஞ்சி அகல் தல் - அஞ்சி நீங்குதல், எனை மாண்பு - மற்றெல்லா வகையாகிய மாட்சியினும், நன்கு இனிது - மிகவும் இனிதாகும்.

(க - ரை) ஒருவன் கடன்படாமல் வாழ்தலைக் காணுதலும், நற்குண மில்லாத மனைவியை நீக்கிவிடுதலும், நற்குண மில்லா தாரை விட்டு நீங்குதலும் இனியவாம்.

(வி - ரை) தான் - அசை. கடம் - கடன்; அது காரணவாகு பெயராய்க் கடனால் வரும் பொருளை யுணர்த்தியது. 'கடம் உண்டு வாழாமை' என்பது, 'கடனால் வரும் பொருளால் உண்டு வழாமை'

என்றுதலின் மூன்றன்தொகை; இதில் மூன்றனுருபு 'வாழாமை' என்றதைக் கொண்டு முடிந்தது. உண்டு - இடைப்பிறவரல்; அன்றிக் கடனால் வரும் பொருளை உண்டு என இரண்டன் தொகையாகக் கூறுதலுமாம். கடனால் வரும் பொருளை உண்ணுதலாவது அப் பொருளால் வேண்டுவன வாங்கி உண்ணுதல். நிறை - கற்பு. அகறல் - தொழிற்பெயர்; அகல் - பகுதி, தல் - விகுதி; பகுதி ஈற்று லகரவொற்றுக் கெட்டதும், தகரம் றகரமானதுஞ் சந்தி.

12. அதர்சென்று வாழாமை யாற்ற வினிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை யினிதே
உயிர்சென்று தான்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோற் பீடுடைய தில்.

(ப - ரை) அதர் சென்று - வழியிற் சென்று (பறித்து), வாழாமை-வாழாதிருத்தல், ஆற்ற - மிகவும், இனிது-இனிதாகும்; குதர் சென்று - தப்பு வழியிற் சென்று, கொள்ளாத - (ஒரு நூற்குப் பொருள்) கொள்ளாமலிருக்கும், கூர்மை-(புத்தியினது) நுட்பம், இனிது - இனிதாகும்; உயிர் சென்று படினும் - (பசியால்) உயிர் நீங்கி (உடம்பு) அழிவதாய் இருந்தாலும், உண்ணார் - உண்ணத்தகாதவர்களுடைய, கைத்து-கையின்கண் உணவை, உண்ணா-உண்ணாத, பெருமைபோல் - மேன்மையைப்போல், பீடு உடையது - மேன்மையை யுடையது, இல் - வேறொன்றும் இல்லை.

(க - ரை) வழியிலிருந்து பிறர் பொருளைப் பறித்து வாழாமையும், ஒரு நூலுக்கு முறை தவறாமல் பொருள் கொள்ளும் நுண்ணறி வுடையவர்களாயிருத்தலும், உயிர் போவதாயிருப்பினும் உண்ணத் தகாதவர்கள் கையிலே உண்ணாமையும் இனியவாம்.

(வி - ரை) அதர் சென்று என்கிற இடத்திற் 'பறித்து' என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. அதர் - வழி.

குதர்-தப்புவழி. தான் - அசை. படினும் என்பதற்கு உடம்பு என்னும் எழுவாய் வருவித் துரைக்கப்பட்டது.

13. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந் தீர்வின்றே லினிது.

(ப - ரை) குழவி - குழந்தைகள், பிணி இன்றி - நோய் இல்லாமல், வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும்; கழறும் - (தான் யாதேனும் ஒரு விஷயத்தைச்) சொல்லுகின்ற, அவை - சபைக்கு, அஞ்சான் - அஞ்சாமற் சொல்கின்றவனது, கல்வி - கல்வியானது, இனிது - இனிதாகும்; மயரிகள் அல்லராய்-மயக்க மய முடையவர்கள் அல்லாதவர்களாய், மாண்பு உடையார்சேரும்-மாட்சியாகிய குணமுடையவர்களைச் சேர்ந்திருக்கின்ற, திரு உம்-செல்வமும், தீர்வு இன்றேல் - நீங்காமல் இருக்கப்பெற்றால், இனிது - இனிதாகும்.

(க - ரை) குழந்தை நோயின்றி வாழ்தலும், சபைக்கு அஞ்சாதவனது கல்வியும், பெரியோரைச் சேர்ந்து நீங்காதிருத்தலும் இனியவாம்.

(வி-ரை) குழவி-ஆண்பெண் என்னும் இருபால் மக்களுக்கும் பொதுப்பெயர். தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியலில்

"குழவியு மகவு மாயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே."

என வரும் 22-ம் சூத்திரத்தின் விசேடவுரையில் "ஆணிளமையும் பெண்ணிளமையும் என இரண்டாகலின் அவற்றை 'அவை' எனப் பன்மை கூறுன்" என்று கூறினர் பேராசிரியர். மயரிகள் அல்லராதல் - மயக்க மில்லாதவர்களாதல்; மயரிகளல்லராய்ச் சேரும்

என இயைக்க; அன்றி அதனை மாண்புடையார் என்றதனோடு கூட்டி யுரைத்தலுமாம். இன்று எனின் என்பது இன்றேல் என மருவியது. திருவும் என்பதன் உம்மை இறந்தது தழுவிய எச்சப் பொருளோடு கூடிய எச்சப்பொருளது.

14. மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமை தானடங்கி வாழ்வினிதே
யூன மொன்றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

(ப - ரை) மானம் அழிந்தபின்-மானங் கெட்டபிறகு, வாழாமை-(உயிர்) வாழாதிருத்தல், முன் இனிது-மிகவும் இனிதாகும்; தானம்-(தன்) இருப்பிடம், அழியாமை-அழியாதவகை, தான் அடங்கி-தான் அடக்க முடையவனுய், வாழ்வு-வாழ்தல், இனிது-இனிதாகும்; ஊனம் - குற்றம், ஒன்று இன்றி - சிறிதும் இல்லாமல், உயர்ந்த - மிக்க, பொருள் உடைமை - செல்வத்தை உடையவர்களா யிருத்தல், மானிடவர்க்கு எல்லாம்-எல்லா மனிதர்களுக்கும், இனிது - இனிதாகும்.

(க - ரை) மானங் கெட்டபின் வாழாமையும், தன்னிலை கெடாமல் வாழ்தலும், குற்ற மில்லாத வழியிலே வந்த பொருளை உடையவர்களாய் இருத்தலும் இனியவாம்.

(வி - ரை) தானம் - நிலைமை என்று பொருள் கூறுதலுமாம்; தீமையான வகையில் அல்லாமல் நல்ல வழியிலே தேட வேண்டு மென்பார், 'ஊனமொன் றின்றி' என்றார். நல்ல வழியிலும் மிக்க பொருளை ஈட்டுதலாம் என்பார், 'ஊன மொன்றின்றி உயர்ந்த பொருள்' என்றார்.

15. குழவி தளர்நடையைக் காண்ட லினிதே
அவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே

வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனனஞ்சா னாகல் இனிது.

(ப - ரை) குழவி - குழந்தைகளினுடைய, தளர் நடையை - தவளும் நடையை, காண்டல் - பார்த்தல், இனிது - இனிதாகும்; அவர் - அம் மக்களுடைய, மழலை கேட்டல் - குதலைச் சொற்க ளைக் கேட்டல், அமிழ்தின் - அமுதம்போல, இனிது - இனி தாகும்; வினை உடையான்-(முன் செய்த) தீவினைக்குச் சொந்த மானவன், வந்து அடைந்து - (அது தன்னை) வந்து சார்ந்து, வெய்து உறும்போழ்து - (அதனால் அதன் பயனாகிய) துன்பத் தைத் தான் அநுபவிக்கும்பொழுது, மனன் அஞ்சான் ஆகல் - மனத்தில் அச்சங்கொள்ளாதவனாயிருத்தல், இனிது-இனிதாகும்.

(க - ரை) குழந்தைகளின் தளர் நடையைக் காணுதலும், அவர்களின் மழலைச் சொற்களைக் கேட்டலும், துன்பம் வந்த காலத்திலே மனம் தளராதிருத்தலும் இனியவாம்.

(வி - ரை) மழலை - நிரம்புதலில்லாத மென் சொற்கள். அமிழ்தின் என்றதில் இன் ஒப்புப்பொருளதாகிய ஐந்தனுருபு; 'அமுதத்தினும் இனிது' என்று பொருள் கூறினால் இன் உறழ்வுப் பொருளதாம் 'மனனஞ்சானுதல்' ஆவது 'மன உறுதியுடையவனா யிருத்தல்.' துன்பமுற்ற காலத்து மனந் தளராதவனிடத்து உற்ற துன்பமே துன்பத்தை அடையுமாதலின், 'வெய்துறும் போழ்து, மனனஞ்சா னாகலினிது' என்றார்.

"அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும்."

என்றார் திருவள்ளுவதேவர். வெய்து - வெப்பமானது; அது துன்பம்; இதில் வெம்மை - பகுதி, இஃது "ஈறுபோதல்" என்றதனால் ஈற்று மை கெட்டு, "முன்னின்ற மெய்திரிதல்" என்றத

னால் மகர ஒற்று யகர ஒற்றாகத் திரிந்து நின்றது; து - ஒன்றன் படர்க்கை விகுதி. போழ்து-பொழுது என்பதன் மரூஉ.

**16.** பிறன்மனை பின்னோக்காப் பீடினி தாற்ற
வறலுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே
மறமன்னர் தங்கடையின் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்ட லினிது.

(ப - ரை) பிறன் மனை - பிறனுடைய மனையாளை, பின் நோக்கா - பின் திரும்பிப் பார்க்காத, பீடு - பெருமை, ஆற்ற இனிது - மிகவும் இனிதாகும்; வறல் - நீரின்மையால், உழக்கும் - வருந்துகின்ற, பைங்கூழ்க்கு - பசிய பயிர்களுக்கு, வான் - மேகமானது, சோர்வு-(மழையைச்) சொரிதல், இனிது-இனிதாகும்; மறம் மன்னர் - வீரத்தையுடைய அரசர்கள், தம் - தம்முடைய, கடையில் - வாயிற்கடையில், மா மலைபோல் - (தோற்றத்தினால்) பெரிய மலைகளைப்போன்ற, யானை - யானைகள், மதம் - மதத்தினால், முழக்கம் - முழங்கும் முழக்கத்தை, கேட்டல் - கேட்குதல், இனிது - இனிதாகும்.

(க - ரை) பிறர் மனைவியை நோக்காமையும், நீரின்றி வாடிய பயிருக்கு மழை பெய்தலும், அரசர் முற்றத்தில் யானை முழங்குதலும் இனியவாம்.

(வி - ரை) வறல்-முதனிலைத் தொழிற்பெயர்; இது விகுதி பெறின் வறலல், வறலுதல் என்றாம்; வறலல் - நீர் வற்றிப்போதல்; இஃதீண்டு நீரின்மையை யுணர்த்தியது. பைங்கூழ் - பசுமையாகிய பயிர். வான்-இடவாகுபெயராய் மேகத்தை யுணர்த்தியது.

**17.** கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே

எட்டுணை யானு மிரவாது தானீத
லெத்துணையு மாற்ற வினிது.

(ப - ரை) கற்றார் முன் - கற்றவர்களுக்கு முன்னே, கல்வி-(ஒருவன் தான் கற்ற) கல்வியை, உரைத்தல்-சொல்லி (அவர்கள்) ஏற்கச்செய்தல், மிக இனிது - மிகவும் இனிதாகும்; மிக்காரை - (கல்வி கேள்வி ஒழுக்கங்களாற்) சிறந்தவர்களை, சேர்தல் - சேர்ந்திருத்தல், மிக மாண - மிகவும் மாட்சிமைப்பட, முன் இனிது - மிகவும்இனிதாகும்; எத்துணையானும்-எள்ளளவானாலும்,இரவாது-(தான் பிறரிடம்) யாசிக்காமல், ஈதல்-(பிறர்க்குத் தன்னால் இயன்ற வற்றைக்) கொடுத்தல், எத்துணையும் - எவ்வகையாலும், ஆற்ற இனிது - மிகவும் இனிதாகும்.

(க - ரை) கற்றார் முன் ஒருவன் தான் கற்ற நூற் பொருள்களைச் சொல்லுதலும், பெரியோரைச் சேர்ந்திருத்தலும், தான் பிறரிடம் இரவாது தன்னிடம் வந்திரப்பவர்க்கு ஈதலும் இனியவாம்.

(வி - ரை) கல்வியின் திறத்தினை உண்மையி னுணர்ந்துவக்கும் ஆற்றல் கற்றாரிடத்தன்றிக் காணப்பெறாமையானும், கல்வியில்லார்முன் ஒருவன் தன்னைக் கற்றவனெனக் காட்டி அவர்களை வியப்பித்தல் கற்றவர்கள் கண்டு நகையாடுதற்கு இடமாம் ஆதலானும், "கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிது' என்றார். கல்வி கேள்வி ஒழுக்கங்களாற் சிறந்தோர் தம்மை அடைந்தார்க் குற்ற துன்பங்களைக் களைந்து மேலும் துன்பம் வாராமற் காப்பாராதலின் 'மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிது' என்றார். நுகர வேண்டுவனவின்றி நல்கூர்ந்தவழியும் பிறர்பாற்சென் றிரத்தலை உடம்படாத அகமதி, எல்லா உலகும் ஒருங்கியைந்தாலும் கொள்ளாத பெருமையை யுடைத்து ஆதலான் 'எட்டுணையானு மிரவாது' என்றார். வறியார்க்கு ஈதலும், இசைபட வாழ்தலுமன்றி மக்க

ளுயிர்க்குப் பயன் பிறிதில்லை யாகலான் 'ஈதல், எத்துணையுமாற்ற இனிது' என்றார். துணை - அளவு; 'எத்துணையும் ஈதல் ஆற்ற இனிது' என இயைத்துத் 'தன்னா லியன்றது எவ்வளவாயினுங் கொடுத்தல் மிகவும் இனிது' என்று பொருள் கூறுதலுமாம்.

18. மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழும் தவசிகண் மாண்பினிதே
எஞ்சா விழுச்சீ ரிருமுது மக்களைக்
கண்டொழுதல் காலை யினிது.

(ப - ரை) மன்றில் - சபையின்கண், முதுமக்கள்-(அறிவிற் சிறந்த) பெரியோர்கள், வாழும்-வாழ்கின்ற, பதி - ஊர், இனிது-இனிதாகும்; தந்திரத்தில் - (தத்தம்) நூற்களிற் சொல்லப்பட்ட வழியினால், வாழும்-வாழுகின்ற, தவசிகள் - தவசிகளுடைய, மாண்பு-மாட்சிமை, இனிது - இனிதாகும்; எஞ்சா - குறையாத, விழுச்சீர் - மேன்மையாகிய சிறப்பினையுடைய, இருமுதுமக்களை - இரண்டு முதுமக்களாகிய தாய்தந்தையர்களை, காலை - காலையில், கண்-(மனமாகிய) இடத்தில் (அமைத்து), தொழுதல் - வணங்குதல், இனிது-இனிதாகும்.

(க - ரை) சபையில் பெரியோர்கள் கூடி வாழும் பதியும், நூலின் வழியில் வாழும் தவசிகளின் மேன்மையும், பெற்றோரைக் காலைப்பொழுதில் வணங்குதலும் இனியவாம்.

(வி - ரை) தந்திரம்-நூல்; அது காரணவாகுபெயராய் நூலிற் சொல்லப்பட்ட நெறியை யுணர்த்தியது. முதுமக்கள் - முதுமையாகிய மக்கள்; இஃது ஈண்டுத் தாய்தந்தையரை யுணர்த்தியது. கண் என்பதைக் காலை என்பதனோடு கூட்டிக் 'காலைக்கண் தாய் தந்தையரைத் தொழுதல்' என்று பொருள் கூறுதலு முண்டு. அன்றி, காலை-காலையில், கண்-கண்ணினால் தரிசித்து, தொழுது-வணங்கு

தல்' என்றலுமாம். தவசி - தவஞ் செய்வோன்; கள் விகுதி சேர்ந்து அதனைப் பலர்பாலாக்கிற்று.

19. நட்டார் புறங்கூறான் வாழ்தல் நனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கால் மற்றது
தக்குழி யீதலே நன்று.

(ப - ரை) நட்டார் - (தன்னிடம்) நட்புக் கொண்டவர்களை புறங்கூறான்-பழிகூறாதவனாய், வாழ்தல்-வாழ்வது, நனி இனிது-மிகவும் இனிதாகும்; பட்டாங்கு-உண்மையாகிய வழியை, பேணி-விரும்பி, பணிந்து - வணக்க முடையவனாய், ஒழுகல் - நடத்தல், முன் இனிது-மிகவும் இனிதாகும்; முட்டு இல் - குறைதல் இல்லாத, பெரும் பொருள் - மிக்க பொருளை, ஆக்கியக்கால் - தேடினால், அது - அப் பொருளை, தக்க உழி - (கொடுக்கத்) தகுந்த இடத்தில், ஈதல்-கொடுத்தல், இனிது-இனிதாகும்.

(க - ரை) நண்பினர்மீது புறங்கூறாமையும், உண்மை நூற்பொருள்களை விரும்பிக் கற்று வணக்க முடையவனாய் நடத்தலும், பெருஞ்செல்வ முண்டானபோது தகுந்தவர்களுக்கு ஈதலும் இனியவாம்.

(வி - ரை) நட்டார் - வினையாலணையும் பெயர். புறங்கூறல்-பழிகூறல். பட்டாங்கு - உண்மை; அஃது இலக்கணையால் உண்மை நெறியை யுணர்த்தியது. மற்று - அசை. தக்க உழி என்னும் தொடர் நிலைமொழியின் ஈறு தொகுத்தலாய்த் தக்குழி என்றாயிற்று. தக்க உழியென்பது தகுந்த இடம்போன்றவர்களை உவமையாகுபெயராய் உணர்த்தியது; அவர்கள் கல்வி கேள்வி ஒழுக்கங்களாற் சிறந்தவர்களும் ஏழைகளும் ஆவர். கபடவேடம் பூண்டு திரிவோரும் சோம்பலால் முயற்சியின்றி இருப்பவர்களுமாகிய இவர்களுக்குக் கொடுத்தலாகாது என்பது கருத்து.

20. சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது.

(ப - ரை) சலவரை - வஞ்சகரை, சாரா - கூடாமல், விடுதல்-விட்டு நீங்குதல், இனிது - இனிதாகும்; புலவர்தம் - புலவர்களுடைய, வாய்மொழி-வாய்மொழிகளை, போற்றல்-காத்துக்கொள்ளுதல், இனிது-இனிதாகும்; மலர் தலை - பரந்த இடத்தையுடைய, ஞாலத்து-பூமியில், மன்-பொருந்திய, உயிர்க்கு எல்லாம் - எல்லா மக்களுயிர்க்கும், தகுதியால் - தகுதியாகிய வழியினால், வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும்.

(க - ரை) வஞ்சகரைச் சேராமல் நீங்குதலும், அறிவுடையார் சொல்லை விரும்பிக்கொண்டு அதன்படி நடத்தலும், ஒவ்வொருவரும் தத்தம் நிலைமைக் கேற்றபடி வாழ்தலும் இனியவாம்.

(வி - ரை) சலவர்-வஞ்சகர். சாராமல் என்னும் வினையெச்சம் ஈறு தொக்குச் சாரா என நின்றது. தகுதி என்பது இலக்கணையால் தகுதியாகிய வழியை யுணர்த்தியது. ஈண்டு உயிர் என்றது மக்களுயிரை; அது தகுதியால் வாழ்தல் என்றதனால் பெறப்படும்.

21. பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

(ப-ரை) பிறன்-பிறனுடைய, கைப்பொருள்-கைப்பொருளை, வெளவான் - அபகரியாதவனாய், வாழ்தல் - வாழ்வது, இனிது-

இனிதாகும்; அறம்-தருமத்தை, புரிந்து - செய்து, அல்லவை - பாவத்தை, நீக்கல் - நீக்குதல், இனிது - இனிதாகும்; மறந்தேயும் - மறந்தானாலும், மாணா - மாட்சிமைப்படாத, மயரிகள் - அறிவில்லாதவர்களை, சேரா-கூடாமல் இருத்தற்குரிய, திறம் - வகையை, தெரிந்து - அறிந்துகொண்டு, வாழ்தல்-வாழ்வது, இனிது-இனிதாகும்.

(க - ரை) பிறருடைய பொருளை அபகரியாமல் வாழ்தலும், புண்ணியத்தைச் செய்து பாவத்தை நீக்குதலும், அறிவில்லாதவர்களைச் சேராமல் வாழ்தலும் இனியவாம்.

(வி - ரை) மாணா, சேரா என்பன ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். வௌவான் - முற்றெச்சம். அறம் என்றதை அடுத்து அல்லவை என்பது கூறப்பட்டமையின் அதற்குப் பாவங்கள் என்று பொருள் கூறப்பட்டது. மயரி - மயக்கமுடையவன்; அதாவது தெளிவு இல்லாதவன்; அதனோடு கள் விகுதி சேர்ந்து அதனைப் பலர்பாலாக்கிற்று.

22. வருவா யறிந்து வழங்க லினிதே
ஒருவர்பங் காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த லினிது.

(ப - ரை) வருவாய் - (தனக்கு வரும்) வருவாயின் அளவை, அறிந்து - அறிந்துகொண்டு, வழங்கல் - (அதற்கேற்பச்) செலவு செய்தல், இனிது - இனிதாகும்; ஒருவர் பங்கு - ஒருவர் பக்கம், ஆகாத - சாராத, ஊக்கம் - மன எழுச்சி, இனிது - இனிதாகும்; பெட்டவை - (தாம்) விரும்பிய காரியங்களை, பெரு வகைத்து ஆயினும் - (அவற்றுள் ஒவ்வொன்றும்) பெரும்பயனைத் தரும் வகையினதானாலும், செய்யார் - ஆய்ந்தன்றிச் செய்யாதவராய்,

திரிபு இன்றி - (இயற்கையோடு) மாறுபடுத லில்லாமல், வாழ்தல்- வாழ்வது, இனிது - இனிதாகும்.

(க - ரை) ஒருவன் வருவாய்க்குத் தக்கபடி செலவிடுதலும், ஒருவர் பக்கஞ் சாராத ஊக்கமும், மிக்க பயன்தருங் காரியமாயினும் ஆராயாமல் செய்யாமலும் மாறுபாடு இல்லாமல் வாழ்தலும் இனியவாம்.

(வி - ரை) வருவாய் - (பொருள்) வரும் வழி; அஃது ஈண்டுக் காரணவாகுபெயராய் அவ் வழியான் வரும் பொருளை யுணர்த்த, அது பொருளாகுபெயராய் அதன் அளவை யுணர்த்தியது; வழங்கல் - கொடுத்தல்; ஈண்டது செலவிடுதலை யுணர்த்தியது; இஃது இலக்கணை. ஒருவர்பங்கு ஆகாமையாவது நடுவுநிலைமையாய் இருக்கவேண்டியதில் யாதேனும் பயன் கருதியேனும், உறவுடைமைமுதலியன கருதியேனும் ஒருவர் பக்கஞ் சாராமல் நடுவுநிலையாகவே இருத்தல். அவ் வகையில் மனஎழுச்சி யுடையவனாயிருத்தல் பிறர்க்கும் தனக்கும் நன்மை செய்வதா மாகலின் 'ஒருவர்பங் காகாத வூக்க மினிது' என்றார். செய்யார் - முற்றெச்சம். திரிபின்மை - (இயற்கையோடு) மாறுபடாமை; அதாவது, இயற்கையாக நடத்தல்.

23. காவோ டறக்குளந் தொட்டன் மிகவினிதே
ஆவோடு பொன்னீத லந்தணர்க்கு முன்னினிதே
பாவமு மஞ்சாராய்ப் பற்றுந் தொழின்மொழி
சூதரைச் சோர்த லினிது.

(ப - ரை) காவொடு - சோலை அமைப்பதோடு, அறம் - தருமத்திற்கு உதவும்படி, குளம் - குளத்தை, தொட்டல் - வெட்டுவைத்தல், மிக இனிது - மிகவும் இனிதாகும்; அந்தணர்க்கு—, ஆவோடு பொன் -(ஒடு)-பசுவையும் பொன்னையும், ஈதல்-கொடுத்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; பாவமும் அஞ்சாராய் - (உலகப்

பழியை யஞ்சாமையே யன்றிப்) பாவத்தையும் அஞ்சாதவராய், பற்றும் - (பொருளையே) பற்றிச் செல்லும், தொழில் - தொழில்களையும், மொழி - சொற்களையும் உடைய, சூதரை - வஞ்சகரை, சோர்தல் - விட்டு நீங்குதல், இனிது - இனிதாகும்.

(க - ரை) தருமத்தின் பொருட்டுச் சோலைகளையும் குளங்களையும் அமைத்தலும், அற முணர்ந்த அந்தணர்க்குப் பசுவும் பொன்னும் ஈதலும், பாவத்திற்கஞ்சாத சொல்லையுந் தொழிலையுமுடைய வஞ்சகரை நீங்குதலும் இனியவாம்.

(வி - ரை) அந்தணராவார் இன்னா ரென்பதனை,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

என்னுந் திருக்குறளா னறிக. 'காவோடு' என்ற இடத்து 'அமைத்து' என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. 'தொடுதல்' என்பதற்குத் 'தோண்டுதல்' என்பது பொருள். குளம் தோண்டுதலைக் குளம் வெட்டுதல் என்பராகலின், 'குளந் தொட்டல்' என்றதற்குக் 'குளம் வெட்டல்' என்று பொருள் கூறப்பட்டது. ஆவோடு பொன் என்னும் தொடரிலுள்ள 'ஓடு' எண்ணுப்பொருளது; ஆகலின் அதனைப் பொன் என்பதனோடு கூட்டி ஆவோடு பொன்னோடு என வைத்து ஆவையும் பொன்னையும் எனப் பொருள் கொள்க.

பாவமும் என்றதன் உம்மை 'உலகப் பழிக்கு அஞ்சாமையே யன்றிப் பாவத்திற்கும் அஞ்சாமை' என்னும் பொருளைத் தருதலால் எச்சப்பொருளது. சூது - வஞ்சனை; அதனை யுடையவர் சூதர். சோர்தல் - தளர்தல்; அஃதீண்டு 'விடுதல்' என்னும் பொருளதாயிற்று.

24. வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

(ப - ரை) வெல்வது - வெல்லுவதை, வேண்டி - விரும்பி, வெகுளாதான் - கோபிக்காதவனுடைய, நோன்பு - பொறுமை, இனிது - இனிதாகும்; ஒல்லும் துணையும் - (தன்னாற்) கூடிய அளவும், ஒன்று - (தான் செய்யத் தொடங்கிய) ஒரு காரியத்தை, உய்ப்பான் - நடத்துகின்றவனுடைய, பொறை - பொறுமை, இனிது - இனிதாகும்; இல்லது - (தமக்கு) இல்லாதது ஒன்று, காமுற்று - விரும்பி, இரங்கி - (அது கிடையாமையினால்) வருந்தி, இடர்ப்படார் - துன்பப்படாதவராய், செய்வது - செய்யத் தக்கதாகிய காரியத்தை, செய்தல் - செய்தல், இனிது - இனிதாகும்.

(க - ரை) வெற்றியை விரும்பிக் கோபியாமல் இருப்பவனது தவமும், தன்னால் செய்யக்கூடிய அளவும் தான் தொடங்கிய காரியத்தைச் செய்பவனது பொறுமையும், தனக்கில்லாத பொருளை விரும்பி அதற்காகத் துன்பப்படாமல் தான் செய்தற்குரிய காரியங்களைச் செய்தலும் இனியவாம்.

(வி - ரை) வெல்வது-காலங் காட்டுந் தொழிற்பெயர்; இதில் வகரமெய் எதிர்கால இடைநிலை; இஃது ஈண்டு முக்காலத்திற்கும் பொதுவாந் தன்மையை யுணர்த்திநின்றது. நோன்பு-பொறுமை. தவமாவது உண்டி சுருங்குதல் முதலியவற்றால் உள்வாந் துன்பங்களைப் பொறுத்துக்கொண் டிருப்பதாகலின் 'நோன்பு' என்பது 'தவம்' என்னும் பொருளையுந் தருவதாயிற்று. ஒல்லுந்துணை-கூடிய அளவு; இதிற் கூடிய உம்மை 'எவ்வளவு அவ்வளவும்' என்னும் பொருளைத் தருதலின் முற்றும்மை. காமுற்று என்பதில்

காமுறு-பகுதி; காமம் என்பது ஈற்று அம் கடைக்குறையாய்க் காம் என நின்று, உறு என்பதனோடு கூடிக் காமுறு என நின்று ஒரு சொல்லின் தன்மை யெய்திப் பகுதியாயிற்று. இடர்ப்படார்-முற்றெச்சம்.

25. ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினும் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்
புல்லா விடுத வினிது.

(ப - ரை) ஐவாய - ஐந்து பொறிகளாகிய வாயில்களை யுடையனவாகிய புலன்கள் ஐந்திற் செல்லும், வேட்கை - ஆசையையும், அவா - (மற்றவற்றிற் செல்லும்) ஆசையையும், அடக்கல்-அடக்குதல், முன் இனிது-மிகவும் இனிதாகும்; கைவாய்-(தன்) கையில், பொருள் பெறினும்-பொருள் பெற்றாலும், கல்லார்கள் - கல்லாதவர்களை, தீர்வு-(சேர்ந்திராமல்) நீங்குதல், இனிது-இனிதாகும்; நில்லாத காட்சி - நிலையில்லாத அறிவினை யுடையவர்களும், நிறை இல்-நிறை என்னும் குணமில்லாதவர்களுமாகிய, மனிதரை-மனிதர்களை, புல்லா - சேராமல், விடுதல் - நீங்குதல், இனிது-இனிதாகும்.

(க - ரை) ஐம்பொறிகளின் ஆசையை அடக்குதலும், பொருள் பெறுவதா யிருப்பினும் கல்வியறி வில்லாதவர்களைச் சேராமல் நீங்குதலும் இனியவாம்.

(வி - ரை) ஐந்துவாய என்பதில் ஐந்து என்பது,

"எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
......ஆறே ழல்ல வற்றின்
ஈற்றுயிர் மெய்......ஏகும்"

என்றதனால் ஐவ்வும்,

"ஐந்தனொற் றடைவது முனமுங் கேடும்."

என்றதில் 'கேடும்' என்றதனால் நகரவொற்றுங் கெட்டு, ஐ என நின்றது. ஈண்டு ஐந்து என்பது தொகைக் குறிப்புப்பெயராய் ஐந்து பொறிகளை யுணர்த்தியது, ஐந்து பொறிகளாவன:—மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. அவற்றை வாயில்களாக வுடைய ஐம்புலன்களாவன:—சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம் என்பன. வடமொழியாளர் பொறிகளை இந்திரியங்கள் எனவும், புலன்களை விஷயங்கள் எனவுங் கூறுவர். நிறையாவது காப்பன காத்துப் பொறுப்பன பொருக்குங் கம்பீர குணம்.

26. நச்சித் தற்சென்றார் நசைகொல்லா மாண்பினிதே
யுட்கில் வழிவாழா வூக்க மிகவினிதே
யெத்திறத் தானு மியைவ கரவாத
பற்றினிற் பாங்கினிய தில்.

(ப-ரை) தன் நச்சி - தன்னை விரும்பி, சென்றார் - அடைந்தவரது, நசை-ஆசையை, கொல்லா - கெடுக்காத, மாண்பு-மாட்சிமை, இனிது - இனிதாகும்; உட்கு - (நன்கு) மதிப்பு, இல்வழி-இல்லாத இடத்தில், வாழா-வாழாமைக்குக் காரணமாகிய, ஊக்கம்-மன எழுச்சி, மிக இனிது-மிகவும் இனிதாகும்; எத்திறத்தானும்-எவ்வகையினாலும், இயைவ - (தன்னால்) கொடுக்கக்கூடியவற்றை, கரவாத - ஒளிக்காத, பற்றினில் - அன்பினும், பாங்கு இனியது-மிகவும் இனியது, இல் - ஒன்று மில்லை.

(க - ரை) தன்னை விரும்பி அடைந்தவர்களுடைய ஆசையைக் கெடுக்காத மேன்மையும், பெருமை இல்லாத இடத்தில் வாழாத ஊக்கமும், இரப்பவர்க்குத் தன்னால் இயன்றதை ஒளியாது ஈதலும் இனியவாம்.

(வி - ரை) 'நச்சித்தன் சென்றார்' என்றதைத் 'தன்னச்சிச் சென்றார்' என இயைக்க. செல்லுதல் ஈண்டு அடைதல் என்னும் பொருளது. உட்கு - உள்ளத்து நினைத்தல், அதாவது மதித்தல் பற்று - அன்பு. பற்றினில் - வாழ்க்கையினும் என்று பொருள் கூறுதலுமாம்; இப் பொருளில் பற்று என்பது காரணவாகுபெயராய் அதனுலாகும் வாழ்க்கையை யுணர்த்திற்று. சென்றார். இயைவ - வினையாலணையும் பெயர்கள்.

27. தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
யூனங்கொண் டாடார் றுறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

(ப - ரை) தானம் கொடுப்பான் - தானங் கொடுப்பவனது, தகை ஆண்மை - மேன்மையாகிய ஆண்மைத்தன்மை, முன் இனிது - மிகவும் இனிதாகும்; மானம் படவரின் - மானங் கெட நேருமானல், வாழாமை-(உயிர்) வாழாதிருத்தல், முன் இனிதே-முற்பட இனிதாகும்; ஊனம் - (பிறருடைய) குற்றத்தை, கொண்டாடார்-பாராட்டாதவராய், உறுதி உடையவை - (அவரிடமுள்ள) நன்மையை உடையவற்றை, கோள் முறையால்-கொள்ளுதற்குரிய முறைமையினல், கோடல்-கொள்ளுதல், இனிது-இனிதாகும்.

(கு - ரை) தானஞ் செய்பவனது பேராண்மையும், மானங் கெட வருமிடத்து உயிர் வாழாமையும், ஒருவருடைய குற்றத்தைப் பாராட்டாமல் அவரிடம் உறுதிப் பொருள்களைக் கொள்ளு முறைமைப்படி கொள்ளுதலும் இனியவாம்.

(வி - ரை) தகைமை-மேன்மை. தகை ஆண்மை-மேன்மையாகிய ஆண்தன்மை. கொண்டாடார் - முற்றெச்சம்; இஃதீண்டு ஒருசொல்; இதில் கொண்டாடு - பகுதி. 'ஊனங் கொண்டாடார்'

என்றதற்கு 'ஊனம்-பிறருடைய குற்றத்தை, கொண்டு ஆடார்-எடுத்துச் சொல்லாதவராய்' என்று பொருள் கூறுதலுமாம். கோள் - கொள்ளுதல்; இது கொள் என்னு முதனிலை திரிந்த தொழிற்பெயர். கோண்முறை என்பது கொள்ளுதற்குரிய முறை என்றுதலின் நான்கனுருபும் பயனும் உடன்தொக்கதொகை.

28. ஆற்றானை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே
யாக்க மழியினு மல்லவை கூறுத
தேர்ச்சியிற் றேர்வினிய தில்.

(ப - ரை) ஆற்றானை - (ஒன்றைச்) செய்ய வியலாதவனை, ஆற்று என்று - (அதைச்) செய் என்று சொல்லி, அலையாமை - வருத்தாமை, முன் இனிது-மிகவும் இனிதாகும்; கூற்றம்-எமன், வரவு உண்மை - வருவதன் உண்மையை, சிந்தித்து - நினைத்து, வாழ்வு - வாழ்தல், இனிது - இனிதாகும்; ஆக்கம் - (தன்) செல்வம், அழியினும் - அழிந்தாலும், அல்லவை - கடுஞ்சொற்களை, கூறுத - சொல்லாத, தேர்ச்சியின் - தெளிவாகிய அறிவினும், தேர்வு இனியது - ஆராய்ந் தடைதற்குரிய இனிமையானது, இல் - ஒன்று மில்லை.

(க - ரை) ஒன்றைச் செய்யும் வன்மை இல்லாதவனைச் செய்யச் சொல்லி வருத்துதலும், எமன் வருதல் உண்மை என்பதைச் சிந்தித்து வாழ்தலும், செல்வம் அழிவதா யிருப்பினும் தீய சொற்களைச் சொல்லாமையும் இனியவாம்.

(வி - ரை) உண்மை-உண்மைத்தன்மை. அல்லவை-இனிமையல்லாதவை; அவை கடுமையானவை; இச் சொல் கூறுத என்றதனால் கடுஞ் சொற்கள் என்னும் பொருளைக் குறித்து நின்றது.

"அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்." எனவும்,

"இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

எனவும்,

திருவள்ளுவதேவர் கூறியவற்றையும் ஈண்டுக் கவனிக்க. அல்லவை என்பது அல்லாதனவாகிய சொற்கள் என்றுதலின் குறிப்பு வினையாலணையும் பெயர்.

29. கயவரைக் கையிகந்து வாழ்த லினிதே
யுயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
யெளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
யொளிபட வாழ்த லினிது.

(ப - ரை) கயவரை-கீழ்மக்களை, கையிகந்து-நீங்கி, வாழ்தல்-வாழ்வது, இனிது - இனிதாகும்; உயர்வு - மேன்மையாகிய செய்கைகளை, உள்ளி - கருதி, ஊக்கம் பிறத்தல் - (அவற்றைச் செய்வதில்) மன எழுச்சி உண்டாதல், இனிது - இனிதாகும்; இவர் - இவர்கள், எளியர் என்று - ஏழைகள் என்று கருதி, இகழ்ந்து உரையார் ஆகி - (அவர்களை) அவமதித்துப் பேசாதவர்களாய், ஒளி பட - புகழுண்டாகும்படி, வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும்.

(க - ரை) கீழ்மக்களை நீங்கி வாழ்தலும், மேன்மை அடைதலைக் கருதி ஊக்க முண்டாதலும், எளியரை இகழாமல் புகழ் உண்டாம்படி வாழ்தலும் இனியவாம்.

(வி - ரை) கயமை - கீழாகிய குணம்; அதனை யுடையார் கயவர். கையிகத்தல் என்பது ஒருசொல்; நீங்குதல் என்பது இதன் பொருள். உயர்வு - மேன்மை, ஒளி - பிரகாசம்; இவை ஈண்டு இலக்கணையால் முறையே மேன்மையாகிய காரியங்களையும், புகழையும் உணர்த்தி நின்றன.

30. நன்றிப் பயன்றூக்கி வாழ்த னனியினிதே
மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே
அன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில்.

(ப-ரை) நன்றி-(பிறர் செய்த) உதவியினது, பயன் தூக்கி-பயனை ஆய்ந்தறிந்து, வாழ்தல் - வாழ்வது, நனி இனிது - மிகவும் இனிதாகும்; மன்றம்-(நியாய) சபையின்கண், கொடும்பாடு-ஒரு தலையான சொற்களை, உரையாத-சொல்லாத, மாண்பு-மாட்சிமை, இனிது-இனிதாகும்; அன்று-(கொடுத்த) அன்று, யார் அறிவார்-யார் அறிவார்? (அறிந்தவர் எவரும் இல்லை,) என்று - என்று நினைந்து, அடைக்கலம்-(பிறர் தன்பால்) அடைக்கலமாக வைத்த பொருளை, வெளவாத-கவர்ந்துகொள்ளாத, நன்றியின்-நன்மையினும், நன்கு இனியது-மிகவும் இனியது, இல்-(ஒன்றும்) இல்லை.

(க-ரை) ஒருவர்செய்த உதவியின் பயனைக் கருதி வாழ்தலும், சபையில் ஒருபக்கஞ் சார்ந்து பேசாமையும், பிறர் தன்னிடம் அடைக்கலமாக வைத்த பொருளை அபகரியாமையும் இனியவாம்.

(வி-ரை) நன்றி-உதவி. ''காலத்தினுற் செய்த நன்றி'' அதன் பயனை நோக்கினுல் அது 'ஞாலத்தினு மாணப் பெரிது' ஆகும் ஆதலின், பிறர் செய்த உதவியின் அளவைக் கருதாது அதன் பயனை ஆய்ந்தறிதல் வேண்டும் என்பார், 'நன்றிப் பயன்றூக்கி' என்ருர். மன்றத்துக் கொடும்பாடு என வேண்டுவது அத்துச் சாரியை தொகுத்தலாய் 'மன்றக் கொடும்பாடு' என நின்றது. கொடும்பாடு என்பது கொடுமை+பாடு எனப் பிரிக்கப்படும், கொடுமை - வளைவு; இப் பொருளில் வருதலைக் கொடுங்கோல், கொடுவாள், கொடுந்தாளைக்கோடு என்பவற்ருனும் அறிக. பாடு - படுதல்; அதாவது பொருந்துதல்; இது படு என்னு முதனிலை

திரிந்த தொழிற்பெயர்; வளைவு பொருந்துதல் என்பது அ தொடரின் திரண்ட பொருள். நடுவுநிலைமையி னீங்கி ஒருபா சாய்தல் என்பது கருத்து; அஃது ஈண்டு இலக்கணையால் ஒருபா சாய்ந்து சொல்லும் சொற்களை யுணர்த்தியது. அடைக்கலம் அடைதற்குரிய இடம், கலம்-பாத்திரம்; அஃது ஈண்டு இட என்னும் பொருளில் நின்றது. அடைக்கலம் என்பது ஈண்டு இல க்கணையால், அடைக்கலமாக வைக்கும் பொருளை யுணர்த்தியது.

31. அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது.

31. (ப - ரை) அடைந்தார் - (தம்மை) அடைந்தவர்கள், துயர் கூரா - துன்பம் அடையாமைக்குக் காரணமான காரியங்களை, ஆற்றல் - செய்தல், இனிது - இனிதாகும்; கடம் கொண்டும் - கடன் வாங்கியானாலும், செய்வன - செய்யத்தகுவனவாகிய காரி யங்களை, செய்தல் - செய்வது, இனிது - இனிதாகும்; சிறந்து அமைந்த - சிறந்து பொருந்திய, கேள்வியார் ஆயினும்-கேள்வியை யுடையவர்க ளாஞலும், ஆராய்ந்து - (நன்கு) ஆய்ந்து, அறிந்து - (தகுவது இதுவெனத்) தெரிந்து, உரைத்தல் - (பிறகு) சொல்லு தல், ஆற்ற இனிது - மிகவும் இனிதாகும்.

(க-ரை) தன்னை அடைந்தவர் துன்ப முடையாதபடி செய்ய வல்ல வல்லமையும், கடன் கொண்டாயினுஞ் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தலும், மிகச் சிறந்த கல்வி கேள்விகளை உடை யராயினும் ஒன்றைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லலும் இனியவாம்.

(வி - ரை) அடைந்தார், கூரா என்பன வினையாலணையும் பெயர்கள். கூரா என்பன ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்ச

மாகக் கொண்டு, துயர் கூரா (த) - துன்படையாமைக்குக் காரண மான, ஆற்றல் - முயற்சி யுடையவர்களா யிருத்தல், இனிது என் றேனும், அதை ஈறு தொக்க எதிர்மறை வினையெச்சமாகக் கொண்டு, துயர் கூரா (மல்) - துன்பமடையாமல், ஆற்றல்-செய்தல், இனிது என்றேனுங் கூறுதலுமாம். 'சிறந்து அமைந்த' என்ற தற்கு 'மிக்குப் பொருந்திய' என்றேனும், 'சிறந்து நிறைந்த' என் றேனுங் கூறுதலுமாம். செய்யத் தகுவனவாவன-இருமுதுமக்க ளைப் பேணுதல், அவர் இறந்த பின் அவர்க்குச் செய்வன செய் தல், சுற்றந்தழுவல் முதலியன.

32. கற்றறிந்தார் கூறுங் கருமப்பொரு ளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றெனவு லின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பற்றிமையிற் பாங்கினிய தில்.

(ப - ரை) கற்று-(கற்கவேண்டிய நூற்களைக்) கற்று, அறிந் தார் - (அவற்றின் பொருளை) அறிந்தவர்கள், கூறும் - சொல்லு கின்ற, கருமப்பொருள் - காரியத்தினது பயன், இனிது - இனி தாகும்; பற்று அமையா - (குடிகளிடத்து) அன்பு வையாத, வேந் தன் கீழ் - அரசனது ஆளுகையின் கீழிருந்து, வாழாமை - வாழா திருத்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; தெற்றெனவு இன்றி - (வறுமையினால் மனத்தின்கண்) தெளிவு இல்லாமல், தெளிந்தாரை - (தம்மைத்) தேர்ந்து கொண்டவர்களை, தீங்கு ஊக்கா - தீமையிற் செலுத்தாத, பற்றிமையின் - அன்புடைமை யாகிய தன்மையினும், பாங்கு இனியது-மிகவும் இனியது, இல் - (ஒன்றும்) இல்லை.

(க-ரை) கற்றறிந்தார் கூறும் காரியத்தினது பயனும், குடிக ளிடத்து அன்பில்லாத அரசன்கீழிருந்து வாழாமையும், வறுமை

யால் சோர்ந்து அடைந்தவர்களுக்குத் தீமை செய்யாமையும் இனியவாம்.

(வி - ரை) கருமப்பொருள்-உறுதிப்பொருள் என்றலுமாம். பற்றிமை - அன்புடைமையாகிய தன்மை. தெற்றெனல் - தெளிதல். ஊக்கல் - செலுத்தல்.

33. ஊர்முனிவ செய்தொழுகா வூக்க மிகவினிதே
தானே மடிந்திராத் தாளாண்மை முன்னினிதே
வாண்மயங்கு மண்டமருண் மாறா மறமன்னர்
தானை தடுத்த லினிது.

(ப - ரை) ஊர் - ஊரிலுள்ளவர்கள், முனிவ - வெறுக்கத்தக்க காரியங்களை, செய்து—, ஒழுகா-(தீய வழியில்) நடக்காத, ஊக்கம்-(மன) உறுதி, மிக இனிது-மிகவும் இனிதாகும்; தானே-(வேறு தடையின்றித்) தானே, மடிந்து இரா - சோம்பி இராத, தாள் ஆண்மை - முயற்சியை ஆளுந்தன்மை, முன் இனிது - மிகவும் இனிதாகும்; வாள் - வாட்களானவை, மயங்கும் - (ஒன்றோடொன்று) நெருங்கிப் பொருந்துகின்ற, மண்டு அமருள் - மிக்க போரில், மாறா - திரும்பி ஓடாத, மறம் மன்னர் - வன்மையினையுடைய அரசர்களுடைய, தானை-சேனைகளை, தடுத்தல்-(ஒருவன் சென்று) விலக்குதல், இனிது - இனிதாகும்.

(க - ரை) ஊரார் வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்யாமையும், சோம்பலா யிராமல் முயற்சியோ டிருத்தலும், மன்னர்களுக்குள் உண்டான பகையைத் தணித்தலும் இனியவாம்.

(வி - ரை) ஊர் என்பது இடவாகுபெயராய் ஊரிலுள்ளாரை உணர்த்தியது. ஊக்கம் - மன உறுதி. மடிதல்-சோம்பியிருத்தல். மயங்குதல் - நெருங்கிப் பொருந்தல்.

ஒருவன் சென்று சேனைகளைத் தடுத்தலாவது மன்னரிரு வர் பகைகொண்டு போர் புரியும்போது அவரின் மிக்கானாகிய அரசன் சென்று அப் போரினை விலக்கல். புலமையிற் சிறந்து நன்கு மதிப்புடையாயினரும் அங்ஙனஞ் சென்று விலக்குவர்.

**34.** எல்லியம் போது வழங்காமை முன்னினிதே [தே
சொல்லுங்காற் சோர்வின்றி சொல்லுதன் மாண்பினி
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

(ப - ரை) எல்லியம்போது - இராக்காலத்தில், வழங்காமை - (வழியிற்) செல்லாதிருத்தல், முன் இனிது - மிகவும் இனிதாகும்; சொல்லுங்கால் - (ஒன்றைச்) சொல்லுங்காலத்தில், சோர்வு இன்றி - சோர்வு இல்லாமல், சொல்லுதல் - சொல்லுதலினது, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாகும்; புல்லிக்கொளினும் - (தாமே வலிய வந்து) தழுவி நட்புக்கொண்டாலும், பொருள் அல்லார் தம் - (ஒரு) பொருளாகக் கொள்ளுதற் குரியவராகாத கீழ்மக்களுடைய, கேண்மை - நட்பை, கொள்ளா - கொள்ளாமல், விடுதல் - நீக்குதல், இனிது - இனிதாகும்.

(க - ரை) இராக்காலத்தில் வழியில் நடவாமையும், ஒன்றைச் சொல்லுங்கால் மறப்பின்றிச் சொல்லுதலும், தாமே வந்து கூடிக்கொண்டாலும் கீழ்மக்களுடைய நட்பைக் கொள்ளாமல் விடுதலும் இனியவாம்.

(வி-ரை) 'சோர்வு இன்றி' என்றதற்குக் 'குற்ற மில்லாமல்' என்றேனும், 'மறதி இல்லாமல்' என்றேனுங் கூறுதலுமாம். எல்லி - இரவு. கொள்ளினும் என்பது ளகரவொற்றுத் தொகுத்தலாய்க் கொளினும் என நின்றது. கொள்ளாமல் என்பது ஈறு தொகுத்தலாய்க் கொள்ளா என நின்றது. கேண்மை - நட்பு.

35. ஒற்றினு லொற்றிப் பொருடெரியு மாண்பினிதே
முற்றுன் றெரிந்து முறைசெய் தன் முன்னினிதே
பற்றிலனுய்ப் பல்லுயிர்க்கும்பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தற் கினிது.

(ப - ரை) வெற்றி வேல்-வெற்றியையுடைய வேலை ஏந்திய, வேந்தற்கு - அரசனுக்கு, ஒற்றினல்-ஒற்றர்களால், ஒற்றி - ஒற்றியறிவித்து, பொருள் தெரியும்-(தம் நாட்டிலும், பிற நாடுகளினும் நடக்கும்) செய்திகளை அறிந்துகொள்ளுகின்ற, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாகும்; முன் - (ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குதற்கு) முன்னே, தெரிந்து - (அதைப்பற்றி) நன்ருக யோசித்து, முறை-(செய்யவேண்டிய) முறைப்படி, செய்தல்—, முன் இனிது-மிகவும் இனிதாகும்; பற்று இலன் ஆய்-(ஒருபால்) அன்புள்ளவனுயிராமல், பல் உயிர்க்கும் - பல உயிர்களிடத்திலும், பாத்து உற்று-அன்பு வைத்து, பாங்கு அறிதல்-(பிறர்பால் உற்ற) நன்மைகளை அறிந்துகொள்ளுதல், இனிது-இனிதாகும்.

(க-ரை) அரசர்கள் ஒற்றர்களாலே புறத்தே நிகழும் செய்தியை அறிதலும், முன்னுக எதையும் ஆராய்ந்து முறை செய்தலும், ஒரு பக்கஞ் சாராமல் எல்லாரையும் ஒப்ப நாடுதலும் இனியவாம்.

(வி - ரை) ஒற்றுதல் - ஒன்றியிருந்து அறிதல்; அதாவது, பிறர்க்குத் தெரியாமலிருந்து அங்கங்கு நிகழுஞ் சமாசாரங்களை அறிதல். ஒற்று - முதனிலைத் தொழிற்பெயர்; அது தொழிலாகு பெயராய் ஒற்றர்களை யுணர்த்தியது. பொருள் - செய்தி. தான் அசை. பத்து என்பது பாத்து என நீண்டது; அன்பு என்பது அதன் பொருள்; இஃது இப்பொருளுடையதாதலை,

(க-ம் பத்து, உ-ம் திருவாய்மொழி, முதற் பாசுரம்)

"பத்துடை யடியவர்க் கெளியவன்
பிறர்களுக் கரிய வித்தகன்."

என்றதனு லறிக. பாங்கு - நன்மை. வெற்றி - செயம்.

36. ஔவித் தழுக்கா றுரையாமை முன்னினிதே
செவ்வியராய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே
கவ்வித்தாங் கொண்டுதாங் கண்டது காமுற்று
வவ்வார் விடுத லினிது.

(ப - ரை) ஔவித்து - பொறாமையடைந்து, அழுக்காறு - பொறாமையினாலாகிய சொற்களை, உரையாமை - சொல்லாதிருத்தல், முன் இனிது-மிகவும் இனிதாகும்; செவ்வியர் ஆய் - (மனத்தின்கண்) செம்மை யுடையவராய், சினம்-கோபத்தை, செற்றுக் கடிந்து-கோபித்து நீக்கி, வாழ்வு-வாழ்தல், இனிது-இனிதாகும்; தாம்-தாங்கள், கண்டது - கண்ட பொருளை, காமுற்று - விரும்பி, கவ்விக்கொண்டு-(அதைப் பெறும் எண்ணத்தையே) உறுதியாகக் கொண்டு, வவ்வார் விடுதல்-அபகாரியாதவ ராய்விடுதல், இனிது-இனிதாகும்.

(க - ரை) பிறராக்கங் கண்டு பொறாமைச் சொற்களைப் பேசாமையும், மனச்செப்ப முடையவராய்க் கோபமின்றி வாழ்தலும், பிறர் பொருளை அபகரித்துக்கொள்ள விரும்பாமையும் இனியவாம்.

(வி - ரை) ஔவித்து என்பது ஔவியம் - பொறாமை என்னும் பெயரடியாகப் பிறந்த வினையெச்சம்; இது பொய்த்து என்பது போன்றது. 'ஔவித்து' என்பதற்கு 'மனக்கோட்டஞ் செய்து' என்றும் பொருள் கூறலாம். கவ்வித் தாங்கொண்டு என்பதில் தாம் - அசை. வவ்வார் - முற்றெச்சம்.

37. இளமையை மூப்பென் றுணர்த லினிதே
கிளைஞர்மாட் டச்சின்மை கேட்ட லினிதே
தடமென் பணைத்தோட் டளிரிய லாளை
விடமென் றுணர்த லினிது.

(ப - ரை) இளமையை - (தன்) இளமைப் பருவத்தை மூப்பு என்று - முதுமைப் பருவம் என்று, உணர்தல்-நினைத்தல், இனிது - இனிதாகும்; கிளைஞர்மாட்டு - சுற்றத்தவரிடத்திருந்து, அச்சு இன்மை - அச்சத்திற்குக் காரணமான துன்பம் இல்லாத செய்தியை, கேட்டல் - கேட்பது, இனிது - இனிதாகும்; தடம் - விசாலமான, மெல் - மேன்மையாகிய, பணை-மூங்கிலைப்போன்ற, தோள்-தோளையுடைய, தளிர் இயலாரை-தளிரைப்போலு மென்மைத்தன்மையை யுடையவர்களாகிய மாதரை, விடம் என்று - நஞ்சு என்று, உணர்தல் - நினைத்தல், இனிது - இனிதாகும்.

(க - ரை) ஒருவன் தனது இளமைப் பருவத்தை முதுமைப் பருவமாக நினைத்தலும், சுற்றத்தவர் சுகமாய் வாழ்தலைக் கேட்டலும், விலைமாதரை நஞ்சென்று கருதுதலும் இனியவாம்.

(வி - ரை) இளமையை இளமையாகக் கொண்டு அதன் வழிச் செல்வார்க்கு இடுக்கண் பல உண்டாகுமாதலால் 'இளமையை மூப்பென் றுணர்த லினிது' என்றார்; இளமை 'நீரிற் குமிழிபோல' விரைந்து நீங்குவதாதலால் அதை உறுதி யுடையதெனக் கருதாமல் மூப்பெய்தியதாகவே நினைந்து நல்வழிச் சேர வேண்டும் என்பார் அங்ஙனங் கூறினர் என்பதுமாம். கிளைஞர் மாட்டு அச்சத்திற்குக் காரணமான துன்பமில்லாத செய்தியைக் கேட்டலாவது அவர்கள் சுகமாயிருக்குஞ் செய்தியைக் கேட்டல். மூப்பு - முதிர்தல்; தொழிற்பெயர்; அது தொழிலாகுபெயராய் முதுமைப் பருவத்தை யுணர்த்தியது. அச்சு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அது காரியவாகுபெயராய் அதற்குக் காரண துன்பமான செய்தியை யுணர்த்தியது.

38. சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே

யெத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்று வுடையான் விருந்து.

(ப - ரை) சிற்றாள்-சிற்றாளை, உடையான் - உடையவனது, படைக்கலம் - ஆயுதம், மாண்பு - மாட்சிமைப்பட, இனிது-இனிதாகும்; நட்டார்-சிநேகிதர்களை, உடையான்-உடையவனது,பகை-(பகைவர்களோடு) பகைக்கும், ஆண்மை - ஆண்தன்மை, முன் இனிது-மிகவும் இனிதாகும்; பால் படும் - பால் சுரக்கும், கற்று உடையான் - கன்றை உடைய பசுவை உடையவனது, விருந்து - விருந்தானது, எத்துணையும் - எவ்வகையாலும், ஆற்றம் இனிது-மிகவும் இனிதாகும், என்ப-என்று அறிவுடையோயார் சொல்லுவர்.

(க-ரை) சிற்றாள் உடையவனது படைக்கல மாட்சிமையும், உறவினரை உடையவன் பகைவரை எதிர்க்கும் ஆண்மையும், கன்றையுடைய பசுவை உடையவன் இடும் விருந்தும் இனியவாம்.

(வி - ரை) சிற்றால் - சிறுமை + ஆள்; ஈண்டுச் சிறுமை என்பது பண்பாகுபெயராய்ச் சிறுமையாகிய தொழிலை யுணர்த்தியது; அது பிறர் ஏவுந் தாழ்வாகிய தொழில்; அதைச் செய்யும் ஆள் சிற்றாள் என்பது, ஆள்-முதனிலைத் தொழிற்பெயர்; ஆளுதல் என்பது பொருள்; அது தொழிலாகுபெயராய்ப் பிறரால் ஆளப் படும் மனிதனை யுணர்த்தியது.

39. பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சி விருந்து துயர்கூரா மாண்பினிதே
யுற்ற பேராசை கருதி யறனொரூஉ
மொற்க மிலாமை யினிது.

(ப - ரை) பிச்சை புக்கு - பிச்சைக்குச் சென்று (இரந்து); உண்பான் - உண்கின்றவன், பிளிறாமை - கோபியாமை, முன்

இனிது-மிகவும் இனிதாகும்; துச்சில்-ஒதுக்கிடத்தில், இருந்து (குடி) இருந்து, துயர் கூரா - துன்பமடையாத, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாகும்; உற்ற - உண்டான, பேர் ஆசை. மிகுதியாகிய ஆசையை, கருதி - நினைந்து, அறன் - தருமத்தை, ஒருஉம்-விடுகின்ற, ஒற்கம்-(மனத்) தளர்ச்சி, இலாமை - இல்லா திருத்தல், இனிது - இனிதாகும்.

(க - ரை) பிச்சையேற் றுண்பவன் கோபியாமையும், ஒதுக்கிடத்தில் குடி இருந்து துன்ப முறாமையும், பேராசையினால் மனந் தளர்ந்து தருமத்தைக் கைவிடாமையும் இனியவாம்.

(வி-ரை) பிச்சைபுக்கு என்கிற இடத்தில் இரந்து என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. துச்சில்-ஒதுக்கிடம்; துச்சில் இருந்து-துச்சிலில் இருந்து. 'உற்ற பேராசை கருதி அறனொரூஉம், ஒற்க மிலாமை யினிது' என்றதற்குப் 'பொருளில் உண்டான பேராசையினால் மன உறுதி கெட்டுத் தருமத்தை விடாமை' என்பது கருத்து. அறம் - அறன்; மகரத்துக்கு னகரம் போலி.

40. பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

(ப - ரை) பத்துக் கொடுத்தும் - பதின்மடங்கு அதிகமான வரியைக் கொடுத்தாயினும், பதி இருந்து-(தன்) ஊரில் இருந்து, வாழ்வு - வாழ்தல், இனிது - இனிதாகும்; வித்து - (பயிரிடற்கு) விதையாக வைத்துள்ள தானியங்களை, குற்று உண்ணா - குற்றி உண்ணாத, விழுப்பம் - மேன்மை, மிக இனிது - மிகவும் இனிதாகும்; பற்பல நாளும் - பற்பல நாட்களும், பழுது இன்றி-பழு

தில்லாமல், பாங்கு உடைய - தகுதியையுடைய நூற்களை, கற்றலின் - கற்றறிதலினாலும், காழ் - உறுதியான, - இனிது - இனியது, இல்-(ஒன்றும்) இல்லை.

(க - ரை) பத்துக் கொடுத்தாயினுந் தன்னூரில் இருந்து வாழ்தலும், விதைக்காக வைத்திருக்கும் நெல்லைக் குற்றி உண்ணாமையும், எப்பொழுதும் நல்ல நூற்களைக் கற்றலும் இனியவாம்.

(வி-ரை) குற்று என்பது இறந்தகால வினையெச்சம்; இதிற் குறு-பகுதி; இதில் றகர ஒற்று இரட்டி இறந்தகாலங் காட்டிற்று; அஃதிரட்டிய துணையானே அப் பகுதி இறந்தகால வினையெச்சமாயிற்று; புகு-புக்கு, விடு - விட்டு, நடு - நட்டு என்பனவும் இங்ஙனமாதல் காண்க; குற்றி என்பதில் குறு என்பது விரித்தல் விகாரமாக றகர ஒற்று இரட்டப்பெற்று வரும் குற்று என்பது பகுதி; இதனடியாகக் குற்றிய, குற்றி, குற்றினார் என வினை விகற்பங்கள் வருதல் காண்க. பற்பல நாளும் என்றது ஈண்டு எந் நாளும் என்னும் பொருளில் வந்தது.

இனிது நாற்பது மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

SECRETARY PRIMARY MUSLIM LEAGUE ABDUNNABIAR PATNAM ... P.O. ... DT.

FOURTH EDITION] [1000 COPIES

# இனிது நாற்பது

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அ | |
| அடைந்தார் | 40 |
| அதர்சென்று | 21 |
| அந்தண | 16 |
| ஆ | |
| ஆற்றுந்துணை | 14 |
| ஆற்றானை | 37 |
| இ | |
| இளமையை | 45 |
| உ | |
| உடையான் | 9 |
| ஊ | |
| ஊருங்கலிமா | 18 |
| ஊர்முனிவ | 42 |
| எ | |
| எல்லியம்போ | 43 |
| ஏ | |
| ஏவதுமாறு | 10 |
| ஐ | |
| ஐவாயவேட் | 34 |
| ஒ | |
| ஒற்றினா | 44 |
| ஔ | |
| ஔவித் | 45 |
| க | |
| கடமுண்டு | 20 |
| கண்மூன்று | 3 |
| கயவரை | 38 |
| கற்றார்முற் | 25 |
| கற்றறிந்தார் | 41 |
| கா | |
| காவோடறக் | 31 |
| கு | |
| குழவிதளர் | 23 |
| குழவிபிணி | 22 |
| கோ | |
| கொல்லாமை | 13 |
| ச | |
| சலவரை | 29 |
| சி | |
| சிற்றாளுடை | 46 |
| த | |
| தங்கணமர் | 19 |
| தா | |
| தானங்கொடு | 36 |
| ந | |
| நச்சித்தற் | 35 |
| நட்டார்புறங் | 28 |
| நன்றிப்பயன் | 39 |
| ப | |
| பத்துக்கொடுத் | 48 |
| பி | |
| பிச்சைபுக்காயி | 6 |
| பிச்சைபுக்குண் | 47 |
| பிறன்கை | 29 |
| பிறன்மனை | 25 |
| ம | |
| மன்றின்முது | 27 |
| மா | |
| மானமழிந்த | 23 |
| யா | |
| யானையுடைய | 12 |
| வ | |
| வருவாயறிந்து | 30 |
| வெ | |
| வெல்வது | 33 |


செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.

| | அ. | ப. |
|---|---|---|
| ஆத்திசூடி உரை | 0 | 9 |
| கொன்றைவேந்தன் உரை | 0 | 9 |
| வெற்றிவேற்கை உரை | 1 | 0 |
| வாக்குண்டாம் உரை | 1 | 3 |
| நல்வழி உரை ... | 1 | 6 |
| நன்னெறி உரை ... | 1 | 6 |
| ஷை நீதிநூற்கொத்துஉரை | 8 | 0 |
| ஷை 6 நூலின் மூலமும், நீதிநெறி விளக்க மூலமும், அவற்றின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும் அடங்கிய நீதிநூற்றிரட்டு ... | 8 | 0 |
| அறப்பளீசுர சதகம் ... | 3 | 0 |
| குமரேச சதகம் ... | 4 | 0 |
| திருவேங்கட சதகம் ... | 4 | 0 |
| தண்டலையார் சதகம் ... | 2 | 0 |
| கோவிந்த சதகம் ... | 0 | 9 |
| எம்பிரான் சதகம் ... | 1 | 0 |
| சிவசங்கர சதகம் ... | 0 | 9 |
| ஷை 7 சதகமும் அடங்கிய சதகத்திரட்டு1-ம்பாகம் | 12 | 0 |
| கைலாசநாதர் சதகம் ... | 2 | 0 |
| ஜெயங்கொண்டார் சதகம் | 4 | 0 |
| குருநாத சதகம் ... | 1 | 0 |
| அவையாம்பிகை சதகம் | 2 | 0 |
| அருணாசல சதகம் ... | 1 | 0 |
| அண்ணாமலைச் சதகம் ... | 4 | 0 |
| வடவேங்கடநாராயணசதக | 2 | 0 |
| தொண்டைமண்டலசதகம் | 2 | 0 |
| கோகுல சதகம் ... | 0 | 9 |
| திருத்தொண்டர் சதகம் | 2 | 0 |
| ஷை 10 சதகமும் அடங்கிய சதகத்திரட்டு2-ம்பாகம் ரூ | 1 | |

| | அ. | ப. |
|---|---|---|
| ஏசுவை நம்பினால் ரக்ஷிப்படையலாமா? ... | 0 | 6 |
| கிறிஸ்தவர் விடைமறுப்பு | 4 | 0 |
| விவிலிய குற்சிதம் ... | 2 | 0 |
| ஷை திக்கார கண்டனம் | 2 | 0 |
| சிவநாம விளக்கம் ... | 1 | 6 |
| ஏசுமனிதனே, கடவுளா? | 2 | 0 |
| விக்ரஹாராதனமுதலியன | 1 | 0 |
| பைபில் யார் எழுதியது? | 1 | 0 |
| சிவனுந் தேவனா என்னும் தீய நாவுக்கு ஆப்பு ... | 1 | 0 |
| கிறிஸ்தவர் ஞானோதய ஆபாச விளக்கம் ... | 0 | 6 |
| புரோடஸ்டாண்டு கிறிஸ்து மத கண்டனம் ... | 0 | 9 |
| வஜ்ஜிரடங்கம் ... | 1 | 0 |
| கிறிஸ்துமதத் திரியேகத்துவ ஆபாசம் ... | 0 | 6 |
| இந்துஜெய பேரிகை: 4 பாகமும் ... | 3 | 9 |
| பைபிலும் உலக சிருஷ்டியின் ஆபாசமும் ... | 0 | 9 |
| கிறிஸ்துமதத்தின் குருட்டு நம்பிக்கை ... | 0 | 3 |
| பாதிரிமார் ஸ்கூலில் பெண்கள் படிக்கலாமா? ... | 0 | 3 |
| ஆரியப்பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறைமை | 0 | 6 |
| ஷை 18 நூலும் சேர்ந்தது ரூ | $1\frac{1}{2}$ | |
| சைவ தூஷண பரிகாரம் | 4 | 0 |
| பிரசங்க பீடிகை, கிறிஸ்து மத கண்டன வஜ்ஜிர குடாரம் ... ... | 1 | 6 |

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை

உலகநாத பண்டிதர் இயற்றிய

# ஜாதி பேத விளக்கம்

புதிய பதிப்பு: விலை அணா 4

## இந்நூலில் அடங்கிய ஜாதிகளின் பெயர்

1. சபாநாதர் வணக்கம், 2. அவை யடக்கம், 3. ஆக்கியோன் பெயர், 4. பதிகம், 5. நூற் பயன், 6. ஜாதித் தொகை, 7. சைவ பேதம், 8. சைவர் தொழில், 9. ஆதி சைவர், 10. மஹா சைவர், 11. ஜாதித் தோற்றம், 12. அந்தணர், 13. அரசர், 14. வணிகர், 15. வேளாளர், 16 அனுலோமாதியர், 17. அலகர், 18 சூதர், 19. தூதர், 20. குண்டக கோளகர், 21. ஷையார் தொழில், 22. தெலுங்கப் பிராமணர், 23. காணியாளர், 24. அபிடேகர், 25. போசர், 26. சாமந்தர், 27. பூஞூற் கணக்கர், 28. மல்லர், 29. பண்டிதர், 30. கைக்கோளர், 31. குயவர், 32 மருத்துவர், 33. கோமுட்டி, 34. பொன் வாணிபர் 35. கவறைகள், 36 ஒச்சர், 37. கொந்தக வேளாளர், 38. சவள வேளாளர், 39. மாவுத்தர், 40. சேனைக் கடையார், 41. பரிக்குலத்தார், 42. சுருதிமான், 43. பாய்வாணிகர், 44. சாலியர், 45. யாழ்ப்பாணர், 46. தீக்ஷைக்கு உரியவர், 47. சிற்பர், 48. சாணியோர், 49. மீன் பள்ளியர், 50. பட்டணவர், 51. சேடர், 52. இடையர், 53. ஊசிச் சிற்பியர், 54. செக்கு வாணியர், 55, காவற் பள்ளியர், 56. ஈரங்கோலியர், 57. தட்டார், கொல்லர், கன்னார், தச்சர், 58. சான்றார், 59. களாயர், 60. மரவர், 61. பூமாலைக்காரர், 62. முச்சியர், 63. உறைகாரர், 64. அம்பட்டர், 65. கூத்தாடியர், 66. கரையார், 67. மாகுலவர், 68. வலையர், 69. வேடுவர், 70. செப்புக் கன்னார், 71. குன்றுவர், 72. சவணர், 73. நிலைத் தறியார், 74. காணிக்கர், 75. பரவர், 76. கடையர், 77, அநுலோமர்க்குத் துடக்கறுக்கிறவர், 78. அநுலோமர்க்கு வெளுக்கிறவர், 79. பிரதிலோமர்க்கு வெளுக்கிறவர், 80. நீல வண்ணார், 81. அரிப்பர், 82. இருளர், 83. கணியர், 84. ஒட்டர், 85. கடிகைப் புலவர், 86. பறையர், 87. இளமைகள், 88. சக்கிலியர், 89. தோட்டியர், 90. நக்கவாரிகள், 91. சோனக, 92 பரங்கர், 93. கருவர், 94. ஜாதி உயர்ச்சி, 95. ஜாதித் தாழ்ச்சி.

# இன்னா நாற்பது

## மூலமும் உரையும்

சிப்பன் பிரஸ், சென்னை]

[விலை அணா 3

உ

கடவுள் துணை

கபிலர் இயற்றிய

# இன்னா நாற்பது

## மூலமும்,

---

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்
தமிழ்ப் பண்டிதர்
**கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள்**
இயற்றிய

## உரையும்.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை.

---

விலை அணா 3

[All Rights Reserved]

The

The Of.

Y. Mr. Yoseen Unyatho to

Asasanagari

SECRETARY, PRIMARY MUSLIM
PATNAM,
TANJORE DT.

# முகவுரை

இனிது நாற்பதும், இன்னா நாற்பதும் சங்கத்துத் தொகை நூற்களுள், பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்தவை. பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள் பதினெட்டனுள், பன்னிரண்டு நூற்கள் நீதி நூற்களாகும். நீதி நூற்கள் நீதிகளை விதித்தல், விலக்குதல் என்னும் இருவகையினாற் கூறும். இனிது நாற்பது நீதிகளைப் பெரும்பான்மையும் விதித்தல் என்னும் வகையினாற் கூறுகின்றது; இஃது இனிது எனின், இதனைச் செய்க என்பதே அதன் கருத்தாதல் அறிக. இன்னா நாற்பது நீதிகளைப் பெரும்பான்மையும் விலக்குதல் என்னும் வகையினாற் கூறுகின்றது; இஃது இன்னா எனின், இதனைச் செய்யற்க என்பதே கருத்தாதல் அறிக. இவ்விரு நூற்களும், இள மாணவர்களும் இள மாணவிகளும் கற்றற்குரிய எளிய நடையில் அமைந்திருக்கின்றன. இவற்றைப்போல் எளிய நடையில் அமைந்த நூல் சங்கநூற்களிற் பிறிது இல்லை. ஆதலின், இவற்றிற்குப் பழைய உரைகளின் உதவியைக் கொண்டு என்னால்

இயன்றாங்கு உரை எழுதியுள்ளேன். இவற்றுள், இன்னு நாற்பதின் முப்பத்தாறுஞ் செய்யுளினுள்ள, 'குழலினினிய மரத்தோசை நன்கின்னு' என்பதற்கு, என் அருமை நண்பர், செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் ஓர் உரை கூறினர். அவ்வுரையே அதற்குப் பொருந்திய உரையெனத் தோன்றியமையின், யான் எழுதிய உரையை நீக்கி, அவர் கூறிய உரையை எழுதிச் சேர்த்துக் கொண்டேன். அவ் வுரையை அன்புடன் கூறிய அவருக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்:

கா. ர. கோவிந்தராஜ முதலியார்.

---

PRIMARY MUSLIM LEAGUE
ADIRAMPATTINAM
TANJORE DT.

ஸ்ரீ

கடவுள் துணை

# இன்னா நாற்பது

## மூலமும் உரையும்

இனிமை என்னும் பண்புப்பெயரின் ஈற்று மை விகுதியும் இகரச் சாரியையும் நீங்கி நின்ற 'இன்' என்பது அல் என்னும் எதிர்மறைவிகுதியோடு கூடி 'இன்னல்' என்றாய், அஃது 'இன்னா' என மருவிற்று; இஃது இன்னாங்கு எனவு மருவி வழங்கும்; 'துன்பம்' என்பது அதன் பொருள்; அதனை அனைத்து மொருபகுதி என வைத்து, இடத்துக் கேற்றபடி ஒன்றன்பால் விகுதியை யேனும் பலவின்பால் விகுதியையேனும் அதனோடு சேர்த்துக் கொள்க; அது காரியவாகுபெயராய்த் துன்பத்திற்குக் காரண மாகிய செய்தியை யுணர்த்தியது; நாற்பது என்பது எண்ணலள வை ஆகுபெயராய் நாற்பது செய்யுட்களை உணர்த்தியது. இங்ஙன மாகிய இவ் விரு சொற்களுங் கூடிய இத் தொடர் ஈண்டு இன்னா தாகிய செய்தியை உணர்த்தும் நாற்பது செய்யுட்களை உடைய நூல் என்றாதலின், இரண்டனுருபும் பயனும் உடன்தொக்க தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் இந் நூலுக் குக் காரணப்பெய ராயிற்று.

1. முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா;
பொற்பன வூர்தியை யுள்ளா தொழுகின்னா;
சக்கரத் தானை மறப்பின்னா(து); ஆங்கின்னா
சத்தியான் றாடொழா தார்க்கு.

(பதவுரை) முக்கண் பகவன்-மூன்று கண்களையுடைய பகவனாகிய சிவபிரானுடைய, அடி-திருவடிகளை, தொழாதார்க்கு-வணங்காதவர்களுக்கு, இன்னா-துன்ப முண்டாம்; பொற்பு - அழகாகிய, அன ஊர்தியை - அன்னமாகிய வாகனத்தை யுடையவராகிய பிரம்மாவை, உள்ளாது - நினையாமல், ஒழுகு - நடத்தல், இன்னா-துன்பமாகும்; சக்கரத்தானை - (வலக் கையிற்) சக்கரத்தை யேந்திய திருமாலை, மறப்பு - மறத்தல், இன்னா - துன்ப மாகும்; ஆங்கு - அவ்வாறே, சத்தியான் - வேற்படையையுடைய குமாரக் கடவுளினுடைய, தாள் - திருவடிகளை, தொழாதார்க்கு - வணங்காதவர்களுக்கு, இன்னா - துன்ப முண்டாகும்.

(கருத்துரை) சிவபெருமானையும், பிரம்மாவையும், விஷ்ணுவையும், சுப்பிரமணியரையும் வணங்காதவர்கள் துன்பத்தை அடைவார்கள்.

(விசேடவுரை) முக்கண்கள் - சோமசூரியாக்கினிகள். பகம்-ஆறு; ஈண்டு அஃது ஆறு குணங்களை யுணர்த்தியது; ஆறு குணங்களாவன: ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பன; அவற்றை யுடையவன் பகவன்; "பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்." என இப்பெயர் பலகடவுளர்க்கும் பொதுவாகக் கூறப்பட்டிருக்கின்றது; அஃது ஈண்டு முக்கண் என்கின்ற குறிப்பாற் சிவபிரானை யுணர்த்தியது. மறப்பு-மறத்தல். சத்தி - வேல்.

2. பந்தமில் லாத மனையின் வனப்பின்னா;
தந்தையில் லாத புதல்வ னழகின்னா;
அந்தண ரில்லிருந் தூணின்னா(து); ஆங்கின்னா
மந்திரம் வாயா விடின்.

(ப - ரை) பந்தம் இல்லாத - சுற்றத்தவர்கள் இல்லாத, மனையின் - வீட்டினது, வனப்பு - அழகானது, இன்னா - துன்பமான

தாகும்; தந்தை இல்லாத - பிதா இல்லாத, புதல்வன் - பிள்ளையி னது, அழகு - அழகானது, இன்னா - துன்பமானதாகும்; அந்த ணர் - பார்ப்பார்களுடைய, இல் இருந்து - வீட்டிலிருந்து, ஊண் - உண்ணுதல், இன்னா - துன்பமானதாகும்; ஆங்கு - அவ்வாறே, மந்திரம் - ஆலோசனை, வாயாவிடின் - (தக்கபடி) தோன்றாமற் போகுமானால், (அங்ஙனம் தோன்றாமற்போதல்) இன்னா-துன்ப மானதாகும்.

(க-ரை) சுற்ற மில்லாத மனையின் அழகும், தந்தை யில்லாத பிள்ளையின் அழகும், பார்ப்பா ரல்லாதவர்கள் பார்ப்பார் வீட்டில் உண்ணுதலும், ஆராயாமற் செய்யுங் காரியமுந் துன்பந் தருவன வாம்.

(வி - ரை) பந்தம்-கட்டு; அது தொழிற் பண்பாகுபெயராய் அதனை யுடைய சுற்றத்தவர்களை யுணர்த்தியது. செல்வந் தொலைந்து வறிய னுயபோதும் பழமை பாராட்டுதல் சுற்றத்தார்கண்ணே யுளவாம். ஆதலின், அச் சுற்றத்தவ ரில்லாத மனை வாழ்க்கை இன்பந்தரா தாகலின், 'பந்தமில் லாத மனையின் வனப்பின்னா,' என்றார்.

"ஆயவாழ் வற்றாருடன் போம்"

என்று ஔவையாரும்,

"அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று."

எனத் திருவள்ளுவதேவரும் கூறியருளியவற்றையும் ஈண்டுக் கவனிக்க. மந்திரம் - ஆலோசனை. ஊண்: உண் என்னு முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

3. பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா;
ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா;
பாத்தில் புடைவை யுடையின்னா(து); ஆங்கின்னா
காப்பாற்றா வேந்த னுலகு.

(ப - ரை) பார்ப்பார் - பார்ப்பாருடைய, இல் - வீடுகளில், கோழியும் நாயும்—, புகல் - நுழைதல், இன்னா - துன்பந் தருவதாகும்; ஆர்த்த - (தனக்கு வாழ்க்கைத் துணைவியாகக்) கலியாணஞ் செய்துகொண்ட, மனைவி - மனையாள், அடங்காமை - (கொழுநனுக்கு) அடங்கி நடவாமை, நன்கு இன்னா-மிகவுந் துன்பந் தருவதாகும்; பாத்து இல் - (மாறி மாறிக் கட்டுதற்கு வேறு புடவையின்) துணை யில்லாத, புடவை - (ஒரு) புடவையை, உடை - உடுத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, காப்பாற்றா - (குடிகளைக்) காவாத, வேந்தன் - அரசனுடைய, உலகு - நாடு, இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) பார்ப்பார் வீட்டுக்குள் நாயும் கோழியும் போதலும், மனைவி சொல்லுக் கடங்காமையும், மாற்றுப்புடவை யில்லாமல் ஒரே புடவையை உடுத்தலும், குடிகளைக் காப்பாற்றாத அரசனது நாட்டில் இருத்தலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) ஆர்த்தல்-கட்டுதல்; அஃது ஈண்டு ஒருவன் தன்னோடு பற்றிய தொடர்புண்டாகும்படி கலியாணஞ் செய்து கொள்ளுதலை யுணர்த்தியது. பாத்து - பகுப்பு; தொழிற்பெயர்; இதில் 'பகு' என்பதன் விகாரமாகிய பா-பகுதி. உடை என்பதும் தொழிற்பெயரே; இதில் உடு - பகுதி; உகரங் கெட்டது சந்தி, ஐ - தொழிற்பெயர் விகுதி.

4. கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா;
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா;
கடுமொழி யாளர் தொடர்பின்னா; இன்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

(ப - ரை) கொடுங் கோல் - கொடுமையாகிய ஆளுகையையுடைய, மறம் - பாவத் தொழிலைச் செய்யும், மன்னர் கீழ்-அரசர்

கீழிருந்து, வாழ்தல் - வாழ்வது, இன்னா - துன்பந் தருவ தாகும்; நெடு நீர் - மிக்க நீரில், புணை இன்றி - தெப்ப மில்லாமல், நீந்துதல்—, இன்னா - துன்பந் தருவதாகும்; கடு மொழியாளர் - வன்சொற்களைப் பேசுவோருடைய, தொடர்பு - நட்பு, இன்னா - துன்பந் தருவதாகும்; உயிர்க்கு - உயிர்களுக்கு, தடுமாறி - மனத் தடுமாற்ற மடைந்து, வாழ்தல் - வாழ்வது, இன்னா-துன்பந் தருவ தாகும்.

(க - ரை) நீதி யில்லாத அரசர்களின் கீழ் வாழ்தலும், பெரிய வெள்ளத்திலே தெப்ப மின்றி நீந்திச் செல்லுதலும், கொடுஞ் சொற்களைச் சொல்கின்றவர்களுடைய நட்பும், மனக் கலக்கத்தோடு வாழ்தலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) கொடுங்கோல் - கொடுமை + கோல்; கொடுமையாகிய ஆளுகை என்பது பொருள். மிக்க நீரிலே நீந்தினால் நீந்துவோனுக்குக் கை கால்கள் சோர்ந்து அபாயத்தை விளைக்கு மாதலின், 'நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா' என்றார். கடுமொழி-கடுமையாகிய சொல்; அது வன்சொல். தொடர்பு - சம்பந்தம்; அஃது ஈண்டு நட்பு என்னும் பொருளைத் தந்தது. தடுமாறுதல் - மனங் கலங்குதல்.

5. எருதி லுழவர்க்குப் போகீர மின்னா;
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா;
திருவுடை யாரைச் செறலின்னா; இன்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

(ப - ரை) எருது இல் - (உழவுக்குரிய) மாடு இல்லாத, உழவர்க்கு - உழவுத் தொழில் செய்வோர்க்கு, போகு ஈரம் - பருவங் கழிந்த (மழை) நீர், இன்னா-துன்பந் தருவதாகும்; கருவிகள்-(கையிற் பற்றிய) ஆயுதங்கள், மாறி-(தமது தொழிலினின்று) மாறும்

படி, புறம் கொடுத்தல் - (பகைவருக்கு) முதுகைக் காட்டுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; திரு உடையாரை - (மிக்க) செல்வ முடையவர்களை, செறல் - கோபித்தல், இன்னா- துன்பந் தருவதாகும்; பெரு வலியார்க்கு - மிக்க வன்மையை யுடையவர் களுக்கு, இன்னா செயல் - துன்பத்தை உண்டாக்கல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) எருதில்லாத உழவர்களுக்குப் பருவங் கழிந்து மழை நீர் பெருகுதலும், பகைவர்க்கு முதுகு காட்டி ஓடுத லும், செல்வ முடையவர்களைப் பகைத்துக்கொள்ளுதலும், மிகுந்த வலிமை உடையவர்களுக்குத் தீமை செய்தலும் துன்பந் தருவன வாம்.

(வி - ரை) போகு ஈரம் - பயிரிடுதற்குத் தகுதியாகிய பரு வங் கழிந்த பிறகு பெய்த மழை நீர். ஆயுதங்கள் தம் தொழிலினி ன்று மாறுதலாவது-பகைவர்கள் மீது சென்று அவர்களை அழித்த லாகிய தொழில் நீங்கியனவாதல். மாறி என்னுஞ் செய்தென னெச்சம் ஈண்டு மாற என்னும் செயவென்னெச்சப் பொருளில் வந்தது. செறுதல் - கோபித்தல். செல்வ முடையவர்களைக் கோ பித்தலும், தன்னினு மிக்க வன்மை யுடையார்க்குத் தீமை செய்த லும் மிகவும் துன்பந் தருவன வாகும்; ஆதலின், அவை 'இன்னா' என்றார்.

6. சிறையின் கரும்பினைக் காத்தோம்ப லின்னா;
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா;
முறையின்றி யாளு மரசின்னா; இன்னா
மறையின்றிச் செய்யும் வினை.

(ப - ரை) சிறை இல் - (வேலியாகிய) காவல் இல்லாத, கரும்பினை - கரும்புப் பயிரை, காத்து ஓம்பல் - பாதுகாத்தல்,

இன்னா - துன்பந் தருவதாகும்; புரை சேர் - (பல) துவாரங்கள் பொருந்திய, பழங் கூரை - பழமையாகிய கூரை வீட்டில், சேர்ந்து - பொருந்தி, ஒழுகல் - வாழ்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; முறை இன்றி - நீதி இல்லாமல், ஆளும்-ஆளுகின்ற, அரசு - அரசாட்சி, இன்னா-துன்பந் தருவதாகும்; மறை இன்றி - ஆலோசனை இல்லாமல், செய்யும் வினை - செய்கின்ற காரியங்கள், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) வேலி இல்லாத கரும்புப் பயிரைப் பாதுகாத்தலும், துவாரம் பொருந்திய கூரை வீட்டில் வசித்தலும், நீதி யில்லாமல் ஆளும் அரசாட்சியும், மறைவு இல்லாமற் செய்கின்ற காரியங்களும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) சிறை - காவல். காத்து ஓம்பல் - ஒருபொருட் பன்மொழி; இது செவிக்கின்பமாய் நிற்கும்படி அமைக்கப்படுவது; இங்ஙனமே, 'மீமிசை ஞாயிறு', 'புளிற்றிளங்கன்று', 'நாகிளங்கமுகு', 'இரும்பேரொக்கல்' என வேறிடங்களிலும் வருதல் காண்க. இதற்கு விதி,

(ந-பொ-இ-47)

"ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா."

என்பது. 'மறை இன்றி' என்பதற்கு 'இரகசிய மில்லாமல்' என்னும் பொருள் கூறலாம்.

7. அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா;
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா;
இடும்பை யுடையார் கொடையின்னா; இன்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல்.

(ப - ரை) அறம் மனத்தார் - தரும வழியிற் பொருந்திய மனத்தை யுடையவர்கள், கூறும் - சொல்லுகின்ற, கடு மொழி

யும் - கொடுஞ் சொல்லும், இன்னா - துன்பந் தருவதாகும்; மறம் மனத்தார் - வீரத் தன்மையையுடைய மன முடையவர்கள், ஞாட்பில் - போர்க்களத்தில், மடிந்து ஒழுகல் - சோம்பி இருத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; இடும்பை உடையார் - வறுமை உடையவர்களுடைய, கொடை - ஈகை, இன்னா - துன்பந் தருவதாகும்; கொடும்பாடு - கொடுமையை, உடையார் - உடையவர்களுடைய, வாய்ச்சொல் - வாய்ச்சொற்கள், இன்னா - துன்பந் தருவனவாகும்.

(க-ரை) தரும வழியிற் செல்லு மன முடையவர்கள் கொடுஞ் சொற்களைச் சொல்லுதலும், வீரர்கள் போர்க்களத்திற் சோம்பலாய் இருத்தலும், பொருள் இல்லாதவர்களின் ஈகையும், நடுநிலைமை யில்லாதவர்களுடைய சொல்லுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) அறநெறியிற் பொருந்திய மன முடையவர்கள் கடுஞ்சொற்களைச் சொல்லுதலால் பிறர்க்குத் துன்பமும் தமக்குப் பாவமும் விளையு மாதலின், 'அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா,' என்றார்; இதில் உம்மை எச்சப்பொருளது; இஃது ஈண்டுக் கடுமொழி; மற நெறியில் நிற்பவர்களுக்குத் தீமை மாத்திர மன்றி அற நெறியில் நிற்பவர்களுக்குந் தீமை பயக்கும் என்னும் பொருளைத் தந்தது. ஞாட்பு-போர்க்களம். மடிந்தொழுகல் - சோம்பி இருத்தல். இடும்பை - வறுமை. கொடும்பாடு - கொடுமை படுதல்; அதாவது, கொடுமை பொருந்துதல்; இஃதீண்டு ஒரு சொல்லாய் நின்று கொடுமை என்னும் பொருளைத் தந்தது. வாய்ச் சொல் - வாயினின்று வருஞ் சொல்,

8. ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா;
நாற்ற மிலாத மலரி னழகின்னா;
தேற்ற மிலாதான் றுணிபின்னா; ஆங்கின்னா
மாற்ற மறியா னுரை.

(ப - ரை) ஆற்றல் - (பகைவர் மீது செல்லுதற் குரிய) வல்லமை, இலாதான் - இல்லாதவன், பிடித்த - (கையிற்) பற்றிய, படை-ஆயுதம், இன்னா-துன்பந் தருவதாகும்; நாற்றம் - வாசனை, இலாத - இல்லாத, மலரின் அழகு - பூவினுடைய அழகு, இன்னா துன்பந் தருவதாகும்; தேற்றம் இலாதான் - தெளிவில்லாதவன், துணிபு - (ஒரு காரியத்தைச் செய்யத்) துணிதல், இன்னா - துன்பந் தருவதாகும்; மாற்றம் - பேசுதற்குரிய முறையை, அறியான்- அறியாதவனுடைய, உரை - சொற்கள், இன்னா-துன்பந் தருவன வாகும்.

(க - ரை) பகைவரை எதிர்க்கும் வலி இல்லாதவன் ஆயுதங்களைக் கையில் எடுத்தலும், வாசனை யில்லாத பூவின் அழகும், தெளிவு இல்லாதவன் ஒரு காரியஞ் செய்யத் துணிதலும், பேசத் தெரியாதவன் பேசும் பேச்சும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) 'ஆற்றல் இலாதான்' என்பதற்கு 'வீர மில்லாதவன்' என்று பொருள் கூறுதலுமாம். 'தேற்ற மிலாதான் துணிபு' என்றதில் 'துணிபு' என்பதற்கு, 'ஒன்றற்கு, இதுதான் பொருள் எனத் துணிந்துரைத்தல்' என்று கூறுதலு மமையும். 'மாற்ற மறியானுரை' என்பதற்கு, 'மாற்றம் - (பிறர் சொல்லுஞ்) சொல்லின் கருத்தை, அறியான் - அறிந்துகொள்ள மாட்டாதவனுடைய, உரை-பேச்சு' என்றுரைத்தலு மாகும்; மாற்றம் - சொல்; இது முற்பொருளில் பேசுதற்குரிய முறையையும், பிற்பொருளில் சொல்லின் கருத்தையும் உணர்த்தியது.

9. பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா;
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா;
இகலி னெழுந்தவ ரோட்டின்னா; இன்னா
நயமின் மனத்தவர் நட்பு.

(ப - ரை) பகல்போலும் - பகற்பொழுதைப் போன்ற, நெஞ்சத்தார் - கபடமற்ற மன முடையவர்கள், பண்பு இன்மை - (நல்ல) குணம் இல்லாதவர்களா யிருத்தல், இன்னா-துன்பந் தருவ தாகும்; நகை ஆய - நகுதல் பொருந்திய, நண்பினர் - நண்பர் கள், நார் இன்மை - (மனத்தில்) அன்பில்லாதவர்களாயிருத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; இகலின் - போர் செய்தற் பொரு ட்டு, எழுந்தவர் - புறப்பட்டுச் சென்றோர், ஓட்டு - (பகைவர்க்குப் புறங் காட்டி) ஓடுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; நயம் இல்-நன்மை இல்லாத, மனத்தவர் - மனத்தை உடையவர்களுடைய, நட்பு - சிநேகம், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) களங்க மில்லாத மன முடையவர்கள் நற்குண மில்லாதிருத்தலும், நண்பர்களானவர்கள் அன்பில்லாதவர்களா யிருத்தலும், போர் செய்ய எழுந்தவர்கள் முதுகு காட்டி ஓடுதலும், கடுமையான மன முடையவர்களது நட்புந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) பகல்போலும் நெஞ்சத்தவர் - கபட மில்லாத மனமுடையவர்கள் என்பது; அத்தகையவர் தீக்குண முடையவர் களா யிருப்பின், அஃது அவர்களின் இயல்புக்கு மாறாய் மிக்க தீமையை விளைக்கு மாதலின் 'பகல்போலு நெஞ்சத்தார் பண் பின்மை இன்னா' என்றார். ஓட்டு என்பது ஓடு என்னு முதனிலை திரிந்த தொழிற்பெயர்; ஓடுதல் என்பது பொருள்.

10. கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா;
வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா;
வண்மை யிலாளர் வனப்பின்னா; ஆங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

(ப - ரை) களிகட்கு - குடியர்களுக்கு, கள் இல்லா - கள் இல்லாத, மூதூர் - பழமையாகிய ஊர், நன்கு இன்னா - மிகவுந்

துன்பந் தருவதாகும்; வள்ளல்கள் - ஈகைக்குண முடையோர், இன்மை - இல்லாதிருத்தல், பரிசிலர்க்கு - (பரிசில் பெறும்) இரவலர்க்கு, முன் இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; வண்மை இலாளர் - ஈகைக்குண மில்லாதவர்களுடைய, வனப்பு - அழகு, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, பண் இல் - கல்லணை யில்லாத, புரவி - குதிரை, பரிப்பு - (தன்மீது மனிதரைத்) தாங்குதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) குடியர்களுக்குக் கள் அகப்படாத ஊரும், இரப்பவர்களுக்குக் கொடுப்பவர்கள் இல்லாமற்போதலும், ஈகைக்குணம் இல்லாதவர்களது அழகும், கல்லணை இல்லாத குதிரை ஒருவரைத் தாங்கிச் செல்லுதலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) களிகள் - குடியர்கள் (கட்குடித்துக் களிப்பவர்கள்); குடியருக்குக் கள்ளில்லாமை பெரிதுந் துன்பமாய்த் தோன்றுமாகலின், 'கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா,' என்றார். மூதூர் - முதுமை+ஊர்; பழைமையாகிய ஊர். பரிசில் - ஈகை; இஃது ஈண்டு ஈயும் பொருளை யுணர்த்தியது; பரிசிலர் - (அவ் வீகைப்பொருளைப் பெறும்) இரவலர். ஈகைக்குண மில்லாதவர்கள் எவ்வளவு சிறந்த அழகுடையவர்களா யிருப்பினும் அவ் வழகின் காரணமாக உண்டாகக்கூடிய உவப்பு உண்டாகாமல் அவர்களிடத்தில் யாவருக்கும் அருவருப்பே தோன்று மாகலின் 'வண்மை யிலாளர் வனப்பின்னா' என்றார்.

11. பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா;
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னா;
அருளில்லார் தங்கட் செலவின்னா; இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

(ப - ரை) பொருள் உணர்வார் - (பாட்டின்) பொருளை அறியும் அறிவுடையவர்கள், இல் வழி - இல்லாத இடத்தில்,

பாட்டு உரைத்தல் - பாட்டைச் சொல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; இருள் கூர்-இருள் மிகுந்த, சிறு நெறி-சிறிய வழியிலே, தனிப் போக்கு-தனியாகப் போகுதல், இன்னா-துன்பந் தருவதாகும்; அருள் இல்லார்தங்கண்-கருணை இல்லாதவர்களிடத்தில், செலவு-(இரப்போர்) செல்லுதல், இன்னா-துன்பந் தருவதாகும்; பொருள் இல்லார் - பொருள் இல்லாதவர்கள், வண்மை புரிவு - (எளியவர்களுக்கு) ஈதலை விரும்புதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) பொருளை அறிகின்றவர்கள் இல்லாத இடத்திற் பாட்டைச் சொல்லுதலும், இருள் மிகுந்த காலத்தில் வழியில் நடத்தலும், இரக்க மில்லாதவர்களிடத்திற் போதலும், பொருளில்லாதவன் தருமஞ் செய்தலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) தாம் - அசை. தம் - சாரியை. பாட்டு என்பது பாடு என்னு முதனிலை திரிந்த தொழிற்பெயர். போக்கு - போதல்; போ - பகுதி, கு - சாரியை; போகு - அனைத்து மொரு பகுதி; இங்ஙனமாகிய இம் முதனிலை போக்கு எனத் திரிந்து தொழிற்பெயராயிற்று. செலவு - செல்லுதல்; புரிவு-விரும்புதல்; இவை விகுதிபெற்ற தொழிற்பெயர்கள். பொருளில்லார் பிறர்க்கு ஈதலை விரும்பின் அது முட்டின்றி நடைபெறுமற்போவதோடு தாமும் வருந்தும்படி நேரு மாகலின் 'பொருளிள்ளார் வண்மை புரிவு இன்னா' என்றார்.

12. உடம்பா டிலாத மனைவிதோ ளின்னா;
இடனில் சிறியாரோ டியாத்தநண் பின்னா;
விடங்களி யாளர் தொடர்பின்னா; இன்னா
கடனுடையார் காணப் புகல்.

(ப - ரை) உடம்பாடு - (தன் கருத்துக்கு) இசைதல் இல்லாத, மனைவி - மனைவியினுடைய, தோள் - தோளைச் சேர்தல்,

இன்னா - துன்பந் தருவதாகும்; இடன் இல் - (அறிவின்) விரிவு இல்லாத, சிறியாரோடு - சிற்றறிவினரோடு, யாத்த - கொண்ட, நண்பு - சிநேகம், இன்னா - துன்பந் தருவதாகும்; விடம் - விஷத்தைப்போன்ற, களி ஆளர்-கட் குடித்துக் களித்தலை யுடையவர்களுடைய, தொடர்பு - சேர்க்கை, இன்னா-துன்பந் தருவதாகும், கடன் உடையார் - கடன் கொடுத்தவர்கள், காண - பார்க்கும்படி, புகல்-கடன் பட்டோர் அவர்களுக் கெதிரே செல்லுதல், இன்னா-துன்பந் தருவதாகும்.

(க - ரை) மனப்பொருத்த மில்லாத மனைவியைச் சேர்தலும், விரிந்த அறிவு இல்லாதவர்களோடும் குடியர்களோடும் நட்புக் கொள்ளுதலும், கடன் கொடுத்தவர்களுக் கெதிரே செல்லுதலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) உடம்பாடு - உடம்படுதல் (மன மிசைதல்). தோள் என்பது இலக்கணையால் தோளைச்சேர்தலை யுணர்த்தியது, மனைவி தோள் சேர்தல் என்றது இடக்காடக்கல். இடன் என்பது விரிவு என்னும் பொருளைத் தந்ததும் இலக்கணையே. சிறியாரோடு + யாத்த என்னுந் தொடரில் நிலைமொழியின் ஈற்றுக் குற்றுகரத்துக்கு முன் யகரம் வர அவ் வுகரம் இகரமாகத் திரிந்தது; இந்த இகரம் குற்றிய லிகரம். களி - முதனிலைத் தொழிற்பெயர்; களித்தல் என்பது பொருள். களியாளர்-கட் குடித்துக் களித்தலை யுடையவர்கள்.

13. தலைதண்ட மாகச் சுரம்போத லின்னா;
வலைசுமந் துண்பான் பெருமித மின்னா;
புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா; இன்னா
முலையில்லாள் பெண்மை விழைவு.

(ப - ரை) தலை தண்டம் ஆக-(வழி பறிக்காரரால்) தலை அறுபடும்படி, சுரம் போதல் - பாலை நிலத்திற் செல்லுதல், இன்னா -

துன்பந் தருவதாகும்; வலை சுமந்து - வலையைச் சுமந்து எடுத்துக் கொண்டு, உண்பான் - (அதனால் உயிர்களைப்பற்றி) உண்கின்றவனுடைய, பெருமிதம் - செருக்கு, இன்னா - துன்பந் தருவதாகும்; புலை - புலால் உண்ணுதலை, உள்ளி - விரும்பி, வாழ்தல்-வாழ்வது, உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, இன்னா - துன்பந் தருவதாகும்; முலை இல்லாள் - முலை இல்லாதவள், பெண்மை - பெண் தன்மையை, விழைவு - விரும்புதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க-ரை) பாலை நிலத்திற் செல்லுதலும், வலை சுமந்து பிழைப்பவன் செருக்குற்றிருத்தலும், புலால் உணவை விரும்பி வாழ்தலும், தன மில்லாதவள் பெண்தன்மையை விரும்புதலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) மனிதர் செல்லுத லில்லாத பாலை வனத்திலே சென்றால் அங்குள்ள வழிபறிக்காரர்கள், பொருள் பறித்தற் பொருட்டுக் கொன்றுவிடுவ ராதலின் 'தலைதண்ட மாகச் சுரம் போத லின்னா' என்றார். புலை - புலா லுண்ணுதல். பெண்மை விழைவு - பெண் தன்மையை விரும்புதல்; அதாவது, பெண்கள் அநுபவித்தற்குரிய இன்பத்தை அநுபவிக்க விரும்புதல். தன மில்லாத மகளிரை ஆடவர் விரும்பா ராதலின் 'முலையில்லாள் பெண்மை விழைவு இன்னா' என்றார்.

"கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று."

என்ற திருக்குறளானும் இதனை யறிக.

14. மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா;
துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா;
பணியாத மன்னர்ப் பணிவின்னா; இன்னா
பிணியன்னார் வாழு மனை.

(ப - ரை) வேந்து - அரசன், மணி இலா -(ஓசையினால் தன் வருகையைப் பிறர்க்கு அறிவிக்கும்) மணியை அணியப்பெறாத, குஞ்சரம் - யானையை, ஊர்தல் - ஏறிச் செலுத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; துணிவு இல்லார்-(மனத்) துணிவு இல்லாதவர்கள், சொல்லும் - சொல்லுகின்ற, தறுகண்மை - (பிறர்க்குக் காட்டும்) வீரச் சொற்கள், இன்னா - துன்பந் தருவனவாகும்; பணியாத -(தம் பகைவர்க்கு எப்பொழுதும்) வணங்குத லில்லாத, மன்னர் - அரசர்களுடைய, பணிவு - வணக்கம், இன்னா - (அவ்வரசர்களின் பகைவர்களுக்குத்) துன்பந் தருவதாகும்; பிணி அன்னார் -(தங் கணவர் முதலாயினார்க்கு) நோயைப்போலத் துன்பமுண்டாக்கு மகளிர், வாழும் - வாழ்கின்ற, மனை - வீடானது, இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) (வருகையை முன்னாகத் தெரிவிக்கும் மணி ஓசையை உடையதாயிராத) யானையின்மீது அரசன் ஏறிச் செல்லுதலும், தைரிய மில்லாதவர்கள் சொல்லும் வீரச்சொற்களும், பிறர்க்கு வணங்காத அரசர்களது வணக்கமும், நோய்போலப் பிறர்க்குத் துன்பஞ் செய்பவர்கள் வாழும் வீடுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) மனத் துணிவு இல்லாதவர்கள் பிறர்க்கு அஞ்சாமையைக் காட்டும் வீரச் சொற்களைச் சொல்லுதல் அவமானத்தையும் துன்பத்தையும் விளைக்கு மாகலின், 'துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா' என்றார். தறுகண்மை - அஞ்சாமை; அஃது ஈண்டு அஞ்சாமையைக் காட்டும் வீரச் சொற்களை யுணர்த்தியது, பிறர்க்கு வணங்காத அரசர்கள் வணங்குதல் அவர்களின் பகைவர்களுச்குத் தீமை விளைதற்கு ஏதுவாகலின் 'பணியாத மன்னர்ப் பணிவின்னா' என்றார்.

15. வணரொலியைம் பாலார் வஞ்சித்த லின்னா;
துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா;

புணர்பாவை யன்னார் பிரிவின்னா; இன்னா
வுணர்வா ருணராக் கடை.

(ப-ரை) வணர்-குழற்சியையும், ஒளி-ஒளியினையும் உடைய, ஐம்பாலார்-ஐந்து வகையாக அமைக்கப்படுவதாகிய கூந்தலையுடைய மாதர்கள், வஞ்சித்தல்-(தங்கள் கொழுநர்களை) வஞ்சித்தல், இன்னா துன்பந் தருவதாகும்; துணர் - (காய்களும் பழங்களும்) கொத்தாக, தூங்கும் - தொங்குகின்ற, மாவின் - மாமரத்திலிருந்து, படு - கீழே விழுந்த, பழம் - பழமானது, இன்னா - துன்பந் தருவதாகும்; புணர் - (அன்பு) பொருந்திய, பாவை அன்னார் - பதுமையைப் போலும் அழகினை யுடையவர்களாகிய மாதர்களுடைய, பிரிவு - பிரிவானது, இன்னா - துன்பந் தருவதாகும்; உணர்வார்-(எதையும் எளிதில்) உணர வல்லவர்கள், உணராக்கடை - (ஒருவர் சொன்னதை) உணராவிடின், இன்னா - (அது) துன்பந் தருவதாகும்.

(க - ரை) பெண்கள் தங்கள் கணவர்களை வஞ்சித்தலும், தரையில் வீழ்ந்த கனிந்த மாம்பழ முண்ணுதலும், அழகிய மாதரது பிரிவும், அறிவுடையோர் ஒன்றை அறியாமற்போதலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) ஐம்பால் - குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி என்னும் ஐந்து பகுப்பினால் அமைக்கப்படுவதாகிய கூந்தல்; இது ஐந்தாகிய பகுப்புகளை யுடையது என்றுதலின் பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். அவ் வைவகையுள் குழல் என்பது மயிரைச் சுருட்டி முடிப்பது; கொண்டை என்பது முடித்து ஒரு பக்கத்திற் செருகி வைப்பது; சுருள் என்பது பின் செருகுவது; பனிச்சை என்பது பின்னிவிடுவது; முடி என்பது உச்சியிற் சேர்த்து முடிப்பது.

இக்காலத்துக் கேற்பப் பின்னிச் சுருட்டிக் கட்டுதலைச் சுருள் எனக் கூறலாம்போலும். இக்காலத்து மாதர் இன்னும் பல வகையாயும் கூந்தலை அமைக்கின்றார்கள். அவற்றுள் இங்குக் கூறியவற்றுள் அடங்குவனவற்றை அறிந்து அடக்கிக்கொள்க. சிக்க முதலியவற்றால் இறக்கப்படாமல் மரத்தினின்று தானாய் விழுந்த மாம்பழம் பலவகையாகச் சிதைந்துபோகு மாதலின் 'மாவின் படுபழ மின்னா' என்றார். 'துணர் தூங்கு' என்றது காய்களும், பழங்களும் மாமரத்தில் அமைந்துள்ள இயல்பைக் குறித்தது; புணர் என்பதற்கு (த் தம்மைக்) கூடிய என்றும் பொருள் கூறலாம். அன்பும் அழகும் அமைந்த மாதர்களின் பிரிவு ஆடவர்க்குப் பெரிதுந் துன்பம் விளைப்பதா மாகலின் 'புணர்பாவை யன்னார் பிரிவின்னா' என்றார். உணராக்கடை - எதிர்மறை வினையெச்சம்; உணராவிடின் என்பது பொருள்; இதில் உணர் - பகுதி, ஆ-எதிர்மறை விகுதி, க் - சந்தி, கடை - விகுதி, உணரா என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு 'உணராத கடை' என வைத்து, 'உணராதபோது' என்று பொருள் கூறுவாரு முண்டு.

16· புல்வார் புரவி மணிபின்றி யூர்வின்னா;
கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா;
இல்லாதார் நல்ல விருப்பின்னா; ஆங்கின்னா
பல்லாரு ணாணப் படல்.

(ப - ரை) புல் - புல்லை, ஆர் - உண்கின்ற, புரவி - குதிரையை, மணி இன்றி-மணி இல்லாமல், ஊர்வு- ஏறிச் செலுத்துதல், இன்னா - துன்பந் தருவதாகும்; கல்லார் - (கற்பன) கற்றுணராதவர்கள், உரைக்கும் - சொல்லுகின்ற, கருமப் பொருள் - காரியத்தின் பயன், இன்னா - துன்பந் தருவதாகும்; இல்லாதார்-செல்வமில்லாதவர்கள், நல்ல - சிறந்த பொருள்களை, விரும்பு - விரும்பு

தல், இன்னா - துன்பம் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, பல்லார் உள் - பலர்க்கு நடுவில், நாணப்படல் - (கற்றூர் ஒன்றைப்பற்றிப் பேச) வெட்கப்படுதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) ஓசைமணி இன்றிக் குதிரையின்மீது ஏறிச் செல்லுதலும், கல்வி அறிவில்லாதவர்கள் சொல்லுங் காரியத்தின் பயனும், பொருள் இல்லாதவர்கள் சிறந்த பொருள்களை விரும்புதலும், பலருள்ள இடத்தில் கற்றூர் பேச வெட்கப்படுதலும், துன்பம் தருவனவாம்.

(வி - ரை) 'நல்ல விருப்பு' என்பதற்கு 'நல்லனவாகிய தருமங்களை விரும்புதல்' என்று கூறுதலுமாம். 'பல்லாருள் நாணப்படல்' என்பதற்குப் 'பலர்க்கு நடுவில் நாண மடையும்படி அவமானப்படல்' என்று பொருளுரைத்தலுமாம். ஊர்வு - தொழிற்பெயர்; 'ஏறிச் செலுத்துதல்' என்பது பொருள். பொருள் - பயன். கல்லார், இல்லாதார் - எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயர்கள். இல்லாதார் என்பதில் 'து' சாரியை; இச் சாரியை இன்றேல் இல்லார் என வரும்.

17. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா;
கண்ணி லொருவன் வனப்பின்னா; ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

(ப - ரை) உண்ணாது - அநுபவியாமல், பெரும் பொருள் - பெரும் பொருளை, வைக்கும் - (சேர்த்து) வைக்கின்ற, வைப்பு - வைத்தலானது, இன்னா - துன்பந் தருவதாகும்; நண்ணா-(மனம்) பொருந்தாத, பகைவர் - பகைவர்களுடைய, புணர்ச்சி - சேர்க்கை, நனி - மிகவும், இன்னா - துன்பந் தருவதாகும்; கண் இல் - கண்கள் இல்லாத, ஒருவன் - ஒரு மனிதனுடைய, வனப்பு -

அழகு, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, எண் இலான் - ஆலோசனை இல்லாதவன், செய்யும் கணக்கு - செய்கின்ற காரியமானது, இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) ஒருவன் தான் அனுபவியாமற் பெரும் பொருளைச் சேர்த்து வைத்தலும், பகைவர்களோடு நட்புக் கொள்ளுதலும், கண் இல்லாதவனது அழகும், ஆலோசனை இல்லாதவன் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) 'எண்ணிலான் செய்யுங் கணக்கு இன்னா' என்றதற்கு 'ஆலோசனைத் திற மில்லாதவன் அமைக்குங் கணக்கு இன்னா' என்றும் பொருள் கூறலாம். பொருளை அநுபவியாமற் சேர்த்து வைப்பவர்கள் பொருளால் அடையவேண்டிய பயனை அடையாமற் போதலால், 'உண்ணாது வைக்கும் பெரும் பொருள் வைப்பு இன்னா' என்றார். பொருள் வைப்பு என்னாது பெரும் பொருள் வைப்பு என்றதனால் வேண்டிய அளவாக உள்ள பொருளை அநுபவியாமல் மேலு மேலுஞ் சேர்த்து வைத்தல் என்பது அதன் கருத்தாமெனக் கொள்க.

18. ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா;
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா;
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா; ஆங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல்.

(ப - ரை) ஆன்று - (கல்வி கேள்விகள்) சிறந்து, அவிந்த - (மனம்) அடங்கிய, சான்றோர் உள் - பெரியோர்களுக்கு இடையில், பேதை - அறிவில்லாதவன், புகல் - செல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; மான்று - (பார்ப்போர்) மயங்கும்படி, இருண்ட போழ்தின் - இருண்டுள்ள காலத்தில், வழங்கல் - (வழியில்) நடத்தல், பெரிது இன்னா - மிகவும் துன்பந் தருவதாகும்; நோ

ன்று - (துன்பங்களைப்) பொறுத்து, அவிந்து - (மனம்) அடங்கி, வாழாதார் - வாழமாட்டாதவர்கள், நோன்பு - நோற்றல், இன்னா- துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, ஈன்றாளை - பெற்ற தாயை, ஓம்பா - காப்பாற்றாமல், விடல் - விட்டுவிடுதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) சிறந்த அறிவினை உடையோர்க்கு நடுவே அறிவில்லாதவன் செல்லுதலும், இருட்டிலே வழியில் நடத்தலும், துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு அடங்கி வாழமாட்டாதவர்கள் ஏற்கும் விரதமும், தாயைக் காப்பாற்றாமற்போதலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) ஆன்று என்பதில் ஆல் - பகுதி; மிகுதி என்பது பொருள். மால என்னுஞ் செயவென் எச்சம், மான்று எனச் செய்தென் எச்சமாகத் திரிந்து நின்றது. மான்று என்பதில் மயக்கம் என்னும் பொருளதாகிய 'மால்' என்னும் பண்புப்பெயர் பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, பகுதியின் லகரவொற்று றகரவொற்றானது சந்தி, அது னகரவொற்றானது மெலித்தல் விகாரம், உ - விகுதி; ஆன்று என்பதற்கும் இங்ஙனமே கொள்க; இதன் பகுதியாகிய 'ஆல்' உரிச்சொல். நோன்ற என்பதில் நோன் - பகுதி; நோனல் - பொறுத்தல்.

19. ஊனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா;
மறனுடை யாளுடையான் மார்பார்த்த லின்னா;
சுரமரிய கானஞ் செலலின்னா; இன்னா
மனவறி யாளர் தொடர்பு.

(ப - ரை) ஊன் உடையான் - அறிவுடையான், உள்ளம் - மனத்தின்கண், மடிந்து இருத்தல் - சோம்பி இருத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; மறன் உடை-வீரத்தை உடைய, ஆள் உடை

யான்-ஆட்களை உடையவன், மார்பு ஆர்த்தல் - (தானே போர் செய்ய) மார்பைத் தட்டுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; அரிய - செல்லுதற்கரிய, சுரம் - பாலை நிலத்திலும், கானம் - காட்டிலும், செலவு - செல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; மனம் - மனத்தின்கண், வறியாளர் - (செல்வம் போன்ற உயர்ந்த எண்ணங்கள் இன்றி) வறுமையைப் போன்ற அற்ப எண்ணங்களை யுடையவர்களுடைய, தொடர்பு - சேர்க்கை, இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) அறிவுடையவன் மனஞ் சோர்ந்திருத்தலும், வீரரை உடையவன் போருக்குத் தான் தன் மார்பைத் தட்டிக் கொண்டு போதலும், பாலை நிலத்திலும் காட்டிலுஞ் செல்லுதலும், அற்பத் தன்மையான மனம் உடையவர்களது நட்புந் துன்பந் தருவனவாம்.

(வி-ரை) அறிவுடையவன் சோம்பலின்றிச் செய்வன செய்யின் அவை பிறர்க்குந் தனக்கும் பெரும் பயனை விளைப்பனவாகும்; அத்தகையான் சோம்பி யிருப்பின் அப் பயன்கள் வீணாய்ப் போதலின், 'ஊனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா' என்றார். வீரர் பலரைத் தன் வசத்தி லுடையவன் அவ் வீரர்களைப் போருக்கனுப்பித் தான் அவர்களுக்குச் செய்வன செய்யாமல் தானே போகப் புறப்படல் பலவகைத் துன்பங்களுக்கு இடனாதலின், 'மறனுடை ஆளுடையான் மார்பார்த்த லின்னா' என்றார். 'சுரமரிய கானம்' என்றதற்குச் 'செல்லுதற்கரிய சுரமாகிய காட்டில்' என்று பொருள் கூறுதலுமாம்; இப் பொருளில் 'சுரம்' என்பதற்கும் 'காடு' என்பதே பொருள்; இப் பொருளில் சுரம் கானம் என்பன ஒருபொருட் பன்மொழிகள். 'வறியாளர்' என்னாது 'மனவறியாளர்' என்றதனால், 'மனத்தின்கண் (செல்வம் போன்ற உயர்ந்த எண்ணங்க ளின்றி) வறுமையைப் போன்ற அற்ப எண்ணங்களை

யுடையவர்கள்' என்று பொருள் கூறப்பட்டது; அன்றி 'அதன் கண் சந்தோஷம் சிறிதும் இல்லாதவர்கள்' என்று பொருள் கூறுதலுமாம்.

20. குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா;
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா;
நலத்தகையார் நாணாமை யின்னா; ஆங்கின்னா
கலத்தல் குலமில் வழி.

(ப-ரை) குலத்துப் பிறந்தவன் - (நல்ல) குடியிற் பிறந்தவன், கல்லாமை - படியாமல் இருத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; நிலத்து இட்ட - பூமியில் விதைத்த, நல் வித்து - நல்ல விதைகள், நாறாமை - முளையாமற்போதல், இன்னா - துன்பந் தருவதாகும்; நலம் தகையார் - நன்மையைச் செய்யும் அற நெறியில் ஒழுகும் தன்மையை யுடையவர்கள், நாணாமை - (தகாதன செய்தலில்) நாணங் கொள்ளாமை, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, குலம் இல் வழி-நற்குடிப் பிறப்பில்லாத வழியிலே, கலத்தல்-சேர்தல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க-ரை) நற்குடியிற் பிறந்தவன் கல்லாதிருத்தலும், விதைத்த விதை முளையாமற்போதலும், அறநெறியில் ஒழுகுகின்றவர்கள் தகாதன செய்தலில் நாணாமல் இருத்தலும், நற்குடியினர் அல்லாதவர்களோடு கலத்தலுந் துன்பந் தருவனவாம்.

(வி-ரை) பல சிறந்த குடிகளில் அடிஅடியாகத் தோன்றி வந்தவர்களின் குழூஉக்களையே பிறகு பிறப்புப்பற்றிய குலமெனக் கொண்டனராகலின், 'குலம்' என்றதற்கு 'நல்ல குடி' எனப் பொருள் கூறப்பட்டது; இதுபற்றியன்றே, திருவள்ளுவதேவர் திருக்குறளில், குடிமை என்னும் அதிகாரத்தில்,

"சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்."

என்னுந் திருக்குறளில் குடியைக் குலமென்று கூறுவாராயினர். பரிமேலழகரும் இதிலுள்ள குலமென்னும் சொற்குக் குடியென்றே பொருள் கூறியிருத்தலையுங் கவனிக்க. மேற்படி அதிகாரத்தில்,

"நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்."

என வருந் திருக்குறளிலுள்ள 'குலம்' என்பதற்குக் 'குலம்' என்றே பொருள் கூறினாராயினும், அதிகாரம் குடிமை என்பதாகலான் அதற்குங் குடி என்பதே பொருளாமெனக் கொள்க. நல்ல குடியிற் பிறந்தவன் கல்லாதிருத்தல் அக் குடியின் மாண்பு கெடுதற்குக் காரணமாம் ஆதலின், 'குலத்துப் பிறந்தவன் கல்லாமையின்னா' என்றார். நலம் - நன்மை; அது காரியவாகுபெயராய் நலத்தினைச் செய்யும் அறநெறியை யுணர்த்தியது.

21. மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா;
ஈரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா; ஆங்கின்னா
மூரி யெருத்தா லுழவு.

(ப - ரை) மாரி நாள் - மழைகாலத்தில், கூவும்-கூவுகின்ற, குயிலின் குரல் - குயிலினது குரலோசை, இன்னா-துன்பந் தருவதாகும்; ஈரம் இலாளர் - அன்பில்லாதவர்களுடைய, கடு மொழி - கடுமையாகிய சொற்களின், கூற்று - கூறுபாடுகள், இன்னா-துன்பந் தருவனவாகும்; மாரி - மேகமானது, வளம் பொய்ப்பின் - (தான் மழையைச் சொரிதலாகிய) வளத்தில் பொய்த்துப்போகுமானால், ஊர்க்கு - ஊரிலுள்ள பிராணிகளுக்கு, இன்னா - துன்ப

முண்டாகும்; ஆங்கு - அவ்வாறே, மூரி எருத்தால் - (வயது) முதிர்ச்சியையுடைய எருதைக்கொண்டு, உழவு-(நிலத்தை) உழுதல், இன்னா-துன்பந் தருவதாகும்.

(க - ரை) மழை காலத்திற் கூவுங் குயிலின் குரலும், அன்பில்லாதவர்களின் கடுஞ் சொல்லும், ஊர்க்கு மழைபெய்யாதிருத்தலும், கிழமாட்டைக் கட்டி உழுதலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) மேகமானது தான் மழை பொழிதலாகிய வளத்தில் பொய்த்தலாவது, மழைபெய்யாமற் போதல்; மழை பெய்யாவிடின் பசியானது உலகத் துயிர்களை வருத்து மாகலின், 'மாரி வளம் பொய்ப்பி னூர்க்கின்னா' என்றார். அதனை,

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி."

என்றதனு லறிக.

22. ஈத்த வகையா னுவவர்தார்க் கீப்பின்னா;
பாத்துண வில்லா ருழைச்சென் றுணவின்னா;
மூத்த விடத்துப் பிணியின்னா; ஆங்கின்னா
வோத்திலாப் பார்ப்பா னுரை.

(ப - ரை) ஈத்த வகையால் - கொடுத்த அளவினால், உவவா தார்க்கு - களிக்காதவர்களுக்கு, ஈப்பு - கொடுத்தல், இன்னா-துன்பந் தருவதாகும்; பாத்து உணவு - பகுத்து உண்ணுதல், இல்லார் உழை - இல்லாதவர்களிடத்தில், சென்று - போய், உணவு - உண்ணுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; மூத்த இடத்து - (வயது) முதிர்ந்த காலத்தில், பிணி - நோய் உண்டாதல், இன்னா-துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, ஓத்து இலா - வேதத்தை ஓதுதல் இல்லாத, பார்ப்பான் உரை - பார்ப்பானுடைய சொற்களானவை, இன்னா - துன்பந் தருவனவாகும்.

(க-ரை) கொடுத்ததைக் கொண்டு சந்தோஷிக்காதவர்களுக்குக் கொடுத்தலும், பகுத்து உண்ணுதல் இல்லாதவர்களிடத்திற் போய் உண்ணுதலும், கிழ வயதில் நோயுண்டாதலும், வேதத்தை அறியாத பார்ப்பான் சொல்லும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) 'ஈந்த' என்பது 'ஈத்த' என வலித்தல் விகாரம் பெற்று நின்றது. உவவாதார் - தெரிநிலை எதிர்மறை வினையாலணையும் பெயர். ஒத்து - வேதம். பகுத்துண்ணுதலாவது தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்றிவர்களுக்குப் பகுத்திட்டுப் பிறகு உண்ணுதல். இதனை,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

என்றதனா லறிக.

23. யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா;
ஊனைத்தின் றூனைப் பெருக்குதன் முன்னின்னா;
தேனெய் புளிப்பிற் சுவையின்னா; இன்னா
கான்யா றிடையிட்ட வூர்.

(ப-ரை) யானை இல் - யானைப்படை இல்லாத, மன்னரை - அரசர்களை, காண்டல் - பார்த்தல், நனி இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; ஊனைத் தின்று-(பிறிதோர் உயிரின்) ஊனை உண்டு, ஊனை - (தன்) ஊனை, பெருக்குதல் - வளர்த்தல், முன் இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; தேன் நெய் - தேனும் நெய்யும், புளிப்பின் - புளித்துப் போகுமானால், சுவை-(அவற்றின்) சுவை, இன்னா - துன்பந் தருவதாகும்; கான் யாறு - காட்டாற்றின், இடை இட்ட-இடையிலே உண்டாக்கிய, ஊர்-ஊரானது, இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) யானைச் சேனை இல்லாத அரசர்களைப் பார்த்தலும், மாமிசத்தைத் தின்று அதனால் தன் உடலை வளர்த்தலும், புளித்துப்போன தேனும் நெய்யுமாகிய இவற்றின் சுவையும், காட்டாற்றின் நடுவில் அமைந்த ஊருந் துன்பந் தருவனவாம்.

(க-ரை) ஊன் - மாமிசம். ஆற்றின் வெள்ளம் வரும்போது அபாயத்துக்கு இடமானதாம்; ஆதலால், 'கான்யா றிடையிட்ட ஊர் இன்னா' என்றார்; இதற்குக் 'கான்யாறு இடையிலே செல்லும் ஊர் இன்னா' என்றுரைப்பினுமாம்.

24. சிறையில்லா மூதூரின் வாயில்காப் பின்னா;
துறையிருந் தாடை கழுவுத லின்னா;
அறைபறை யாயவர் சொல்லின்னா; இன்னா
நிறையில்லான் கொண்ட தவம்.

(ப - ரை) சிறை இல் - மதில் இல்லாத, மூதூரின் - பழமையாகிய ஊரினது, வாயில் காப்பு-வாயிலைக் காத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; துறை இருந்து - (குளமுதலியவற்றின்) துறைகளில் இருந்து, ஆடை கழுவுதல் - ஆடையைத் தோய்த்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; அறை - சப்திக்கின்ற, பறை ஆயவர் - பறையைப்போல இரைந்து பேசுகின்றவர்களுடைய, சொல் - சொற்கள், இன்னா - துன்பந் தருவதாகும்; நிறை இல்லான் - (பொறிகளைத் தடுத்து) நிறுத்துந் தன்மை இல்லாதவன், கொண்ட - மேற்கொண்ட, தவம் - தவமானது, இன்னா—.

(க - ரை) மதி லில்லாத ஊரின் வாயிலைக் காத்தலும், நீர்த்துறைகளில் ஆடையைத் தோய்த்தலும், பேரிகையைப்போல் இரைபவர்களின் சொற்களும், ஐம்பொறிகளை அடக்காதவன் கொண்ட தவமுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) சிறை - மதில். மூதூர் - (முதுமை + ஊர்) பழைமையாகிய ஊர். கழுவுதல் என்பது ஈண்டுத் தோய்த்தல் என்னும் பொருளில் வந்தது. 'அறைபறை ஆயவர்' என்பதற்கு, 'விஷயங்களை அறைந்து தெரிவிக்கும் பறையைப்போல மறைவான விஷயங்களைப் பலாறியச் சொல்லும் இயல்புடையவர்கள்' என்று பொருள் கூறுதலுமாம். பொறிகளாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன; அவற்றைத் தடுத்து நிறுத்துதலாவது: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்களின் மேற் செல்லாமற் செய்து தம் வழியில் நிறுத்தல்.

25. ஏமமில் மூதா ரிருத்தன் மிகவின்னா;
தீமை யுடையா ரயலிருத்த னன்கின்னா;
காம முதிரி னுயிர்க்கின்னா; ஆங்கின்னா
யாமென் பவரோடு நட்பு.

(ப - ரை) ஏமம் இல் - காவல் இல்லாத, மூதூர் - பழைய ஊரிலே, இருத்தல் - வசித்தல், மிக இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; தீமை உடையார் - தீமையாகிய செய்கை யுடையவரது, அயல் இருத்தல் - பக்கத்திலே இருத்தல், நன்கு இன்னா - மிகவும் துன்பந் தருவதாகும்; காமம் முதிரின் - காமம் மிகுந்தால், உயிர்க்கு - ஆன்மாவுக்கு, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, யாம் என்பவரோடு - (சிறப்புடையேம்) யாங்கள் என்று செருக்கி இருப்பவர்களோடு (கொள்ளும்), நட்பு - சிநேகம், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) காவல் இல்லாத ஊரிலே வாழ்தலும், தீமை செய்கின்றவர்களின் பக்கத்திருத்தலும், மிக்க காமமும், செருக்குடையவர்களோடு நட்புக் கொள்ளுதலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) தீமை என்பது ஈண்டுத் தீமையாகிய செயலை யுணர்த்தியது. காமம் மிகுவதானது உடல் பொருள் முதலியவற்

றிற்குக் கேட்டைத் தருவதோடு பாவம் மிகுதலால் உயிருக்கும் கேட்டை விளைத்தலால் 'சாம முதிரின் உயிர்க்கின்னா' என்றார்.

26. நட்டா ரிடுக்கண்கள் காண்டல் நனியின்னா;
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா;
கட்டில்லா மூதா ருறையின்னா ஆங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது.

(ப - ரை) நட்டார் - நட்புக்கொண்டவர்களுடைய, இடுக்கண்கள் - துன்பங்களை, காண்டல் - பார்த்தல், நனி இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; ஒட்டார் - பகைவர்களது, பெருமிதம் - செருக்கை, காண்டல் - பார்த்தல், பெரிது இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; கட்டு இல்லா - (ஒற்றுமையோடு கூடிய) கட்டுப்பாடு இல்லாத, மூதூர் - பழைய ஊரிலே, உறை - வசித்தல், இன்னா-துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, நட்ட - நடப்பட்டுள்ள, கவற்றினால் - கவற்றைக்கொண்டு ஆடுகின்ற, சூது - சூதாட்டம், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) நண்பர்களின் துன்பத்தைக் காணுதலும், பகைவர்களின் செருக்கைப் பார்த்தலும், கட்டுப்பாடு இல்லாத ஊரில் வாழ்தலும், சூதாடுதலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) தமது அன்புக் குரியவர்களாகிய நண்பர்கள் துன்பமுற்றிருத்தலைக் காணுதலால் உண்டாகுந் துன்பம் மற்றெல்லாத் துன்பங்களினு மிக்கதாயிருக்கு மாதலால், 'நட்டா ரிடுக்கண்கள் காண்டல் நனி இன்னா' என்றார். சூதாட்டம் ஒரு மனிதனுக்குள்ள மேன்மைகள் எல்லாவற்றையுங் கெடுப்பதா மாகலின் 'நட்ட கவற்றினாற் சூது இன்னா' என்றார்.

27. பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா;
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா;
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா; இன்னா
பெரியார்க்குத் தீய செயல்.

(ப - ரை) பெரியாரோடு - பெரியவர்களுடன், யாத்த - கொண்ட, தொடர் - தொடர்ச்சியை, விடுதல் - விடுவது, இன்னா - துன்பந் தருவதாகும்; அரியவை - செய்தற்கரிய காரியங்களை, செய்தும்-செய்து முடிப்போம், என உரைத்தல்-என்று சொல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; பரியார்க்கு - (தம்மிடத்தில்) அன்பு கொள்ளாதவர்களுக்கு, தாம் உற்ற - தாம் அடைந்த துன்பங்களை, கூற்று - சொல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; பெரியார்க்கு - (கல்வி கேள்விகளாற் சிறந்த) பெரியோர்களுக்கு, தீய செயல் - தீமையான காரியங்களைச் செய்தல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) பெரியார்களிடங் கொண்ட நட்பினை விடுதலும், செய்ய முடியாத காரியங்களைச் செய்து முடிப்போம் என்று சொல்லுதலும், தம்மிடம் அன்பு கொள்ளாதவர்களிடத்தில் தம்முடைய துன்பங்களைச் சொல்லுதலும், பெரியோர்களுக்குத் தீமை செய்தலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) (பெரியாரோடு+யாத்த - பெரியாரோடியாத்த) இதில் குற்றியல் உகரத்தின் முன் யகரம் வர அந்தக் குற்றியலுகரந் திரிந்து இகரமாயிற்று; இதற்கு விதி "உக்குறள் யவ்வரி னிய்யாம்" என்பது. யாத்தல் - கட்டுதல்; இஃது ஈண்டுக் கொள்ளுதல் என்னும் பொருளில் வந்தது. தொடர் - முதனிலைத் தொழிற்பெயர். செய்தும் - தன்மைப் பன்மை வினைமுற்று; இதில், தும்விகுதி, பரிதல் - அன்பு செய்தல். இரங்குதல் என்பதுமாம். தீயலவின் படர்க்கைக் குறிப்பு வினையாலணையும் பெயர்.

28. பெருமை யுடையாரைப் பீடழித்த லின்னா;
கிழமை யுடையார்க் களைந்திடுத லின்னா;
வளமை யிலாளர் வனப்பின்னா; இன்னா
இளமையுண் மூப்புப் புகல்.

(ப - ரை) பெருமை உடையாரை-பெருமை யுடையவர்களை, பீடு அழித்தல் - பெருமை கெடச் செய்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; கிழமை உடையார் - (தம்மோடு) உரிமை யுடைய வர்களை, களைந்திடுதல் - நீக்கிவிடுதல், இன்னா - துன்பந் தருவ தாகும்; வளமை - செல்வம், இலாளர் - இல்லாதவர்களுடைய, வனப்பு - அழகு, இன்னா - துன்பந் தருவதாகும்; இளமையில் - இளம்பருவத்தில், மூப்பு - முதுமைப்பருவத்துக்குரிய தன்மை கள், புகல் - உண்டாதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) மேன்மை உடையவர்களை அம் மேன்மை அழியும்படி செய்தலும், உரிமை உடையவர்களை நீக்கிவிடுதலும், செல்வம் இல்லாதவர்களின் அழகும், இளமைப் பருவத்தில் முதுமைப் பருவத்துக் குரிய உடம்பின் தன்மைகள் உண்டாதலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) பீடு - பெருமை. கிழமை - உரிமை (சொந்தம்). வளமை - செல்வம். வனப்பு - அழகு. இளம்பருவத்தில் முதுமைப் பருவத்திற் குரிய தன்மைகள் உண்டாதலாவது - கலவி இன்பந் துய்த்தற்குரிய வன்மை கெடுதல், நரைத்தல் முதலியனவாகும்.

29. கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா;
வல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா;
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா; ஆங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

(ப - ரை) கல்லாதான் - (நடத்தவேண்டிய முறைகளைக்) கற்காதவன், ஊரும் - ஏறிச் செலுத்தும், கலி - கனைத்தலையுடைய, மா - குதிரை, பரிப்பு - (அவனைச்) சுமந்து செல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; வல்லாதான் - (நூற்களைக்) கற்றறியாதவன், சொல்லும் - சொல்லுகின்ற, உரையின் பயன் - சொல்லினது பொருள், இன்னா - துன்பந் தருவதாகும்; இல்லார் - (செல்வம்) இல்லாதவர்களுடைய, வாய்ச் சொல்லின் - வாயிலிருந்து வரும் சொல்லினது, நயம் - நயமானது, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, கல்லாதான் - (கற்கவேண்டிய நூற்களைக்) கற்காதவன், கோட்டி கொளல் - (கற்றவர்கள் கூடியுள்ள) சபையிற் சென்றிருத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) செலுத்தும் வகையை அறியாதவன் ஏறிச் செலுத்தும் குதிரையின் செலவும், நூற்களைக் கற்றறியாதவன் சொல்லும் சொற்களின் பொருளும், பொருள் இல்லாதவர்கள் சொல்லின் நயமும், கல்வியறிவில்லாதவன் சபையிற் சென்றிருத்தலுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) 'இல்லார் வாய்ச்சொல்லின் நயம்' என்ற இடத்துக் 'கல்லார் வாய்ச்சொல்லின் நயம்' எனவும் பாட முண்டு. 'கோட்டி கொளல்' என்றதற்குச் 'சபையில் ஒன்றைச் சொல்ல மேற்கொள்ளுதல்' என்று பொரு ளுரைத்தலுமாம்.

30\. குறியறியான் மாநாக மாட்டுவித்த லின்னா(து);
அறிவறியா னீரின்கட் பாய்ந்தாட லின்னா;
அறிவறியா மக்கட் பெறலின்னா; இன்னா
செறிவிலான் கேட்ட மறை.

(ப - ரை) குறி அறியான் - (பாம்பாட்டுதற்குரிய மந்திர முதலியவற்றின்) முறைகளை அறியாதவன், மா நாகம் - பெரிய

பாம்புகளை, ஆட்டுவித்தல் - ஆடச் செய்தல், இன்னாது - துன்பந் தருவதாகும்; அறிவு - (நீரில் நீந்த) அறிதற்குரியனவற்றை, அறியான் - அறியாதவன், நீரின்கண் - நீரில் (குளமுதலியவற்றில்), பாய்ந்து ஆடல் - குதித்து விளையாடுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; அறிவு - (மாந்தர்களின் வாழ்க்கைக்கு) அறிதற் குரியனவற்றை, அறியா - அறியமாட்டாத, மக்கள்-பிள்ளைகளை, பெறல்-பெறுதல், இன்னா-துன்பந் தருவதாகும்; செறிவு இலான் - (நா) அடக்கம் இல்லாதவன், கேட்ட மறை-கேட்ட இரகசியச் செய்திகள், இன்னா-(அவனுக்கும் பிறர்க்கும்) துன்பந் தருவனவாகும்.

(க - ரை) அடக்கும் வகை யறியாதவன் பாம்பைப் பிடித்தாட்டுதலும், நீந்தத் தெரியாதவன் நீரிற் பாய்ந்து விளையாடுதலும், அறிய வேண்டுவனவற்றை அறியாத மக்களைப் பெறுதலும், அடக்கம் இல்லாதவன் கேட்ட ரகசியமும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) மந்திர முதலியவற்றை அறியாதவன் பாம்பை ஆட்டுதல் அவனுக்கு இறப்பை யுண்டாக்குவதா மாகலின், 'குறியறியான் மாநாகம் ஆட்டுதல் இன்னா' என்றார். செறிவு - அடக்கம்; நா அடக்க மில்லாதவன், கேட்ட இரகசியங்களை வெளிப்படுத்தித் தனக்கும் பிறர்க்கும் கேடுறச்செய்வா னாதலால், 'செறிவு இலான் கேட்ட மறை இன்னா' என்றார்.

31. நெடுமர நீள்கோட் டுயர்பாய்த லின்னா;
கடுஞ்சின வேழத் தெதிர்சேற லின்னா;
ஒடுங்கி யரவுறையு மில்லின்னா; இன்னா
கடும்புலி வாழு மதர்.

(ப - ரை) நெடு மரம் - நெடிய மரத்தினது, நீள் கோட்டு - நீண்ட கிளையின், உயர்-உயரத்திலிருந்து, பாய்தல் - கீழே குதித்

தல், இன்னா - துன்பந் தருவதாகும்; கடும் சினம் - மிக்க கோபத்தினையுடைய, வேழத்து எதிர் - யானைக்கு எதிரில், சேறல் - செல்லுதல், இன்னா - துன்பந் தருவதாம்; அரவு - பாம்பு, ஒடுங்கி உறையும் - பதுங்கி வசிக்கின்ற, இல் - வீடானது, இன்னா - துன்பந் தருவதாம்; கடும் புலி - கொடிய புலிகள், வாழும் அதர் - வசிக்கும் வழியானது, இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) பெரிய மரத்தின் நீண்ட கிளையிலிருந்து நிலத்திற் குதித்தலும், கடுங்கோபத்தையுடைய யானைக்கு எதிர் செல்லுதலும், பாம்பு வசிக்கும் வீட்டில் வாழ்தலும், கொடிய புலிகள் வாழும் வழியுந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) உயர் - முதனிலைத் தொழிற்பெயர்; உயர்தல் என்பது பொருள்; அது தொழிலாகுபெயராய் உயர்ந்த இடத்தை உணர்த்தியது. சேறல் - செல்லுதல்; தொழிற்பெயர்.

32. பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா;
எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா;
மண்ணின் முழவி னொலியின்னா; ஆங்கின்னா
தண்மை யிலாளர் பகை.

(ப - ரை) பண் அமையா - சுருதி கூடாத, யாழின் கீழ் - யாழின் கீழிருந்து, பாடல் - பாடுதல், பெரிது இன்னா - மிகவும் துன்பந் தருவதாகும்; எண் அறியா - கணக்கினை அறியாத, மாந்தர் - மனிதர்கள், ஒழுக்கு - நடத்துகின்ற, நாள் கூற்று - நாட்களின் கூறுபாடுகள், இன்னா - துன்பந் தருவனவாம்; மண் இல் - (மார்ச்சனை) மண் இல்லாத, முழவின் - மத்தளத்தினது, ஒலி - ஓசை, இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, தண்மை இலாளர் - தண்ணிய குணம் இல்லாதவர்களுடைய, பகை - பகையானது, இன்னா - துன்பந் தருவதாகும்

(க-ரை) சுருதி பொருந்தாத யாழின் கீழிருந்து பாடுத லும், கணக்கறியாத மனிதர் நாட்செலவும், மார்ச்சனைமண் இல்லாத மத்தளத்தின் ஓசையும், நற்குணம் இல்லாதாரது பகையுந் துன்பஞ் செய்வனவாம்.

(வி-ரை) பண்-இசை; அஃது ஈண்டு இலக்கணையால் சுருதி கூட்டுதலை யுணர்த்தியது. எண்-கணக்கு; கணக்கறியாதவர்கள் ஒவ்வொரு நாளையும் பகுத்துக்கொண்டு அந்த அந்தக் காலத்தில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யமாட்டார்க ளாகையால், 'எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா' என்றார்.

33. தன்னைத்தான் போற்றா தொழுகுத னன்கின்னா;
முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா;
நன்மையி லாளர் தொடர்பின்னா; ஆங்கின்னா
தொன்மை யுடையார் கெடல்.

(ப-ரை) தன்னைத்தான்-(ஒருவன்) தன்னைத்தானே, போற்றாது - காத்துக்கொள்ளாது, ஒழுகுதல்-நடத்தல், நன்கு இன்னா-மிகவுந் துன்பந் தருவதாகும்; முன்னை உரையார் - (ஒருவர்க்கு) முன்னே சொல்லாமல், புறமொழிக் கூற்று - (அவரைப்பற்றி அவர்க்குப் பின்னே சொல்லும்) சொல்லினது கூறுபாடு, இன்னா-துன்பந் தருவதாகும்; நன்மை இலாளர் - நற்குண மில்லாதவர்களுடைய, தொடர்பு-நட்பு, இன்னா-துன்பந் தருவதாகும்; ஆங்கு-அவ்வாறே, தொன்மை உடையார் - பழமையாகிய செல்வர்கள், கெடல்-(அச் செல்வம்) கெடுதல், இன்னா-துன்பந் தருவதாகும்.

(க-ரை) ஒருவன் தன்னைத்தான் காத்துக்கொள்ளாமல் நடத்தலும், ஒருவர் போன பின்பு அவர்மீது பழிச் சொற்களைச் சொல்லுதலும், நற்குணம் இல்லாதவர்களுடைய நட்பும், பழமையாகிய செல்வர்கள் அச் செல்வங் கெடுதலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) ஒருவன் தன்னை நல்லொழுக்கத்தினும், பொருளினாலாம் நிலைமையினும் தன்னைத்தானே காவாவிடின் பெரிதுந் துன்பமெய்துமாகலின், 'தன்னைத்தான் போற்றா தொழுகின்னா' என்றார். நன்மை என்பது ஈண்டுக் காரியவாகுபெயராய் நன்மைக்குக் காரணமான நற்குணங்களை யுணர்த்தியது.

34. கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா;
முள்ளுடைக் காட்டி னடத்த னனியின்னா;
வெள்ளம் படுமாக் கொலையின்னா; ஆங்கின்னா
கள்ள மனத்தார் தொடர்பு.

(ப - ரை) கள் உண்பான்-கள்ளைக் குடிப்பவன் (கட்குடியன்), கூறும் - சொல்லுகின்ற, கருமப்பொருள் - காரியத்தினது பயன், இன்னா - துன்பந் தருவதாகும்; முள் உடை - முள்ளை உடைய, காட்டில் நடத்தல் - காட்டிலே நடத்தல், நனி இன்னா - மிகவுந் துன்பந் தருவதாகும்; வெள்ளம் படு - வெள்ளத்தில் அகப்பட்ட, மா - மிருகத்தை, கொலை - கொல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, கள்ளம் மனத்தார் - வஞ்சனையையுடைய மனத்தை யுடையவர்களது, தொடர்பு - நட்பு, இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) கட்குடியன் கூறுங் காரியத்தின் பயனும், முட்களை உடைய காட்டில் நடத்தலும், வெள்ளத்தில் அகப்பட்டு வருந்தும் மிருகத்தைக் கொல்லுதலும், வஞ்சனையான மனமுடையவர்களது நட்பும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) பொருள் - பயன். வெள்ளம்படு - ஏழன் தொகை. வஞ்சகர்களோடு நட்புக்கொண்டால் அவர்கள் சமயம் நோக்கிக் கெடுத்துவிடுவார்களாதலால், 'கள்ள மனத்தார் தொடர்பு இன்னா' என்றார்.

35. ஒழுக்க மிலாளர்க் குறவுரைத்த லின்னா;
இழித்தகு நூலும் விழையாதார்க் கின்னா;
விழித்த தொழிலவர் நட்பின்னா; இன்னா
கழிப்புலாய் மண்டிலங் கொட்பு.

(ப - ரை) ஒழுக்கம் இலாளர்க்கு - நல்லொழுக்கம் இல்லாதவர்களுக்கு, உறவு-(அவர்களோடு தமக்குற்ற) தொடர்பை, உரைத்தல் - சொல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; இழித்தகு நூலும் - இழித்தற்கேற்ற (தகுதி யல்லாத பொருள்களையுடைய) நூற்களும், விழையாதார்க்கு - விரும்பாதவர்களுக்கு, இன்னா - துன்பந் தருவதாகும்; இழித்த தொழிலவர் - இழிந்த தொழிலையுடையவர்களுடைய, நட்பு - சிநேகம், இன்னா - துன்பந் தருவதாகும்; மண்டிலம் - குதிரை, கழிப்பு உலாய் - வெறுத்தற்குரிய விதமாக உலவி, கொட்பு - சுழலுதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) நல்லொழுக்க மில்லாதார்க்குத் தமது உறவினைச் சொல்லுதலும், சிறு நூலாயினும் விரும்பாதவர்களுக்குச் சொல்லுதலும், இழிவாகிய தொழிலை உடையவர்களது நட்பும், குதிரை சுழன்றோடுதலுந் துன்பந் தருவனவாம்.

(வி-ரை) இழிந்த என்பது இழித்த என வலித்தல் விகாரம் பெற்றது. உலாய் என்னும் வினையெச்சம் கொட்பு என்னுந் தொழிற்பெயரைக் கொண்டு முடிந்தது. கழிப்பு - தொழிற்பெயர். கழிப்பு உலாய் என்றவிடத்து நான்கன் உருபும் உரிய விதமாக என்பதும் இசையெச்சமாக வருவிக்கப்பட்டன; அது நான்கனுருபும் பயனும் தொக்க தொகை யன்று.

36. எழிலி யுறைநீங்கி னீண்டையார்க் கின்னா;
குழலி னினிய மரத்தோசை நன்கின்னா;
குழவிக ளுற்ற பிணியின்னா; இன்னா
வழக்குடையான் பேதை யெனல்.

(ப - ரை) எழிலி - மேகமானது, உறை நீங்கின் - மழையைச் சொரிதலை நீங்குமானால், ஈண்டையார்க்கு - இவ்வுலகத்தி லுள்ளவர்களுக்கு, இன்னா - (அது) துன்பந் தருவதாகும்; குழலின் - குழல்வடிவின், இனிய - (ஓசையில்) இனிமையுடைய, மரத்து - (மூங்கில்) மரத்தினது, ஓசையானது, நன்கு இன்னா - மிகவும் துன்பந் தருவதாகும்; குழவிகள் உற்ற - குழந்தைகளை அடைந்த, பிணி - நோயானது, இன்னா - துன்பந் தருவதாகும்; அழகு உடையான் - அழகினை உடையவன், பேதை எனல் - (கல்வி) அறிவில்லாதவன் என்று சொல்லப்படுதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) மழை பெய்யாதொழிதலும், பெரிய மரங்களின் ஓசையும், குழந்தைகளுக்கு நோயுண்டாதலும், அழகுடையவன் கல்வி அறிவு இல்லாதவனாய் இருத்தலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) உறை - (மழை) நீர்; ஈண்டு பொருளாகுபெயராய் நீரைச் சொரிதலை உணர்த்தியது; இது நீரை விடாமல், நீர் சொரிதலையும் உணர்த்தினமையின் விடாத ஆகுபெயர். ஈண்டையார்க்கு என உயர்திணையைக் கூறினாரேனும், "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே." என்னும் உபலக்கணத்தால் மற்றை அஃறிணை உயிர்களையுங் கொள்க.

37· பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா;
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா;
வருமனை பார்த்திருந் தூணின்னா; இன்னா
கெடுமிடங் கைவிடுவார் நட்பு.

(ப - ரை) பொருள் இலான் - செல்வ மில்லாதவன், வேளாண்மை - (பிறர்க்கு) உதவி புரிதலை, காமுறுதல் - விரும்புதல், இன்னா - துன்பந் தருவதாகும்; நெடு மாடம் - பெரிய மாடங்களையுடைய, நீள் நகர் - பெரிய நகரத்திலே, கைத்து இன்மை - கையிலே பொருள் இல்லாமல் இருத்தல், இன்னா - துன்பந்

தருவதாகும்; வரு - (தாம் விருந்தினராக) வந்த, மனை - வீட்டி லிருப்பவர்களை, பார்த்திருந்த - (எப்போதும் எதிர்) பார்த்துக் கொண்டிருந்து, ஊண் - உண்ணுதல், இன்னா - துன்பந் தருவ தாகும்; கெடும் இடம் - (பொருள்) அழிந்த இடத்து, கைவிடு வார் - விட்டு நீங்குகின்றவர்களுடைய, நட்பு - சிநேகம், இன்னா - துன்பந் தருவதாகும்.

(கூ-ரை) பொருள் இல்லாதவன் உபகாரஞ் செய்ய விரும்புத லும், பெரிய நகரிற் பொருள்இன்றி இருத்தலும், தான் விருந்தின னாக வந்த வீட்டினரைப் பல்காலும் எதிர்பார்த்திருந்து உண்ணுத லும், கெடும்போது விட்டுநீங்குவாரது நட்புந் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) வேளாண்மை - உதவி. காமம் உறுதல் என்ப தில் நிலைமொழியின் ஈறு தொக்குக் காமுறுதல் என்றாயிற்று. மிகுந்த செலவுக்கு இடமாகிய பெரிய பட்டணங்களில் பொரு ளின்றி இருத்தல் மிக்க கஷ்டத்திற்கு இடமாம்; ஆதலால், 'நெடு மாட நீணகர்க் கைத்தின்மை இன்னா,' என்றார்.

38. நறிய மலர்பெரிது நாறாமை யின்னா;
துறையறியா னீரிழிந்து போகுத லின்னா;
அறியான் வினாப்படுத லின்னா; ஆங்கின்னா
சிறியார்மேற் செற்றங் கொளல்.

(ப - ரை) நறிய மலர் - நல்ல பூ, பெரிது நாறாமை - மிகவும் மணம் வீசாதிருத்தல், இன்னா - துன்பந் தருவதாம்; துறை அறி யான் - (இறங்கவேண்டிய) துறையை அறியாதவன், நீர் இழிந்து போகுதல் - நீரில் இறங்கிச் செல்லுதல், இன்னா - துன்பந் தருவ தாகும்; அறியான் - (நூற் பொருள்களை) அறியாதவன், வினாப் படுத்தல் (கல்வியறி வுடையவர்களால்) கேள்வி கேட்கப்படுதல், இன்னா-துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, சிறியார்மேல்- சிறியவர்கள்மீது, செற்றம் கொளல் - கோபங் கொள்ளுதல், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) நல்ல பூ மணம் இல்லாதிருத்தலும், இறங்குந் துறை இன்னதென அறியாதவன் நீரில் இறங்கிச் செல்லுதலும், அறிவில்லாதவன் பிறராற் கேள்வி கேட்கப்படுதலும், சிறியவர் கள்மீது கோபங் கொள்ளுதலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) சிறியார் - வயதிற் சிறியவர்கள் (இளைஞர்கள்); அன்றிப் பொருளிற் சிறியவர்கள் (ஏழைகள்) என்றேனும், அறிவிற் சிறியவர்கள் என்றேனுங் கொள்ளுதலுமாம். செற்றம் - கோபம்.

39. பிறன்மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா;
மறமிலா மன்னர் செருப்புகுத லின்னா;
வெறும்புறம் வெம்புரவி யேற்றின்னா; இன்னா
திறனிலான் செய்யும் வினை.

(ப - ரை) பிறன் மனையாள் - பிறனுடைய மனைவியை, பின் நோக்கும் - (முன் செல்ல ஆவலோடு) பின்னே பார்க்கின்ற, பேதைமை - அறிவின்மை, இன்னா - துன்பந் தருவதாகும்; மறம் இலா-(போர்புரிதற்குரிய) வண்மை இல்லாத, மன்னர்-அரசர்கள், செருப் புகுதல்-போர்க்களத்திற் செல்லுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; வெம் புரவி - வேகத்தையுடைய குதிரையினது, வெறும் புறம் - (கல்லணைமுதலிய) ஒன்றும் இல்லாத முதுகில், ஏற்று - ஏறுதல், இன்னா - துன்பந் தருவதாகும்; திறன் இலான் - (புத்தி வன்மை இல்லாதவன், செய்யும் வினை - செய்கின்ற காரியம், இன்னா - துன்பந் தருவதாகும்.

(க - ரை) பிறர் மனைவியரைப் பின்னோக்கிப் பார்த்தலும், வீரம் இல்லாத அரசர்கள் போருக்குச் செல்லுதலும், முதுகில் கல்லணை இடப்பெறாத குதிரையின்மீது ஏறிச் செல்லுதலும், செய்யும் வகை அறியாதவன் செய்யுங் காரியமும் துன்பந் தருவனவாம்.

(வி-ரை) பிறன் மனையாள் பின்னோக்கு என்பதற்குப் பிறனுடைய மனைவியின் பின்னிடத்தைப் பார்த்தல் என்று கூறுதலுமுண்டு. ஏற்று என்பது ஏறு என்று முதனிலை திரிந்த தொழிற்பெயர்; ஏறுதல் என்பது பொருள்.

40. கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா;
கடித்தமைந்த பாக்கினுட் கற்படுத லின்னா;
கொடுத்து விடாமை கவிக்கின்னா; இன்னா
மடுத்துழிப் பாடா விடல்.

(ப - ரை) கொடுக்கும் - (பிறர்க்குக்) கொடுத்தற்குரிய, பொருள் இல்லான் - பொருள் இல்லாதவனுடைய, வள்ளன்மை - ஈகை, இன்னா-துன்பந் தருவதாகும்; கடித்து அமைந்த-வெட்டப்பட்டுள்ள, பாக்கினுள் - பாக்கில், கல் படுதல் - கல் இருத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; கொடுத்து - (தனக்குப் பரிசாகக் கொடுத்தற்குரிய பொருளைக்) கொடுத்தும், விடாமை - (கொடுத்தோரை) விடாமல் மேன்மேலும் பொருள் கேட்டல், கவிக்கு-கவி பாடும் புலவனுக்கு, இன்னா - துன்பந் தருவதாகும்; மடுத்துழி - (தாம்) உண்ட இடத்தை (தனக்கு உணவு கொடுத்துக் காப்பாற்றியவர்களை), பாடா விடல் - பாடாமல், விடுதல், இன்னா-துன்பந் தருவதாகும்.

(க-ரை) பொருள் இல்லாதவனது ஈகையும், வெட்டப்பட்ட பாக்கிற் கல் இருத்தலும், கவிஞர் தக்க பரிசில் பெற்றுங் (கொடுத்தோரை விடாமல் மேன்மேலுங் கேட்டலும், தமக்கு உபகாரஞ் செய்தவர்களைப் பாடாமற்போதலும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) 'கொடுத்து விடாமை கவிக்கின்னா' என்பதற்கு, 'கவிக்கு - (கவிபாடும்) புலவனுக்கு, கொடுத்துவிடாமை - (பரிசில்) கொடுத்தனுப்பாமை' என்று பொருள் கூறுதலுமாம்.

41. அடக்க முடையவன் மீளிமை யின்னா;
துடக்க மிலாதவன் றற்செருக் கின்னா;
அடைக்கலம் வவ்வுத லின்னா; ஆங்கின்னா
அடக்க வடங்காதார் சொல்.

(ப - ரை) அடக்கம் உடையவன்-(ஐம்பொறிகளின்) அடக்கத்தையுடைய தவசியினது, மீளிமை - வீரம், இன்னா - துன்பந் தருவதாகும்; துடக்கம் இல்லாதவன்-(செய்யவேண்டிய காரியங்களைச் செய்யத்) தொடங்குதல் இல்லாதவன், தற்செருக்கு-தனக்குள் தானே களித்திருத்தல், இன்னா - துன்பந் தருவதாகும்; அடைக்கலம் - (பிறர் தன்னிடம்) அடைக்கலமாக வைத்த பொருளை, வவ்வுதல்-அபகரித்தல், இன்னா-துன்பந் தருவதாகும்; ஆங்கு - அவ்வாறே, அடக்க - (பிறர் தம்மை) அடக்கவும், அடங்காதார் சொல் - அடங்காதவர்களுடைய சொல்லானது, இன்னா-துன்பந் தருவதாகும்.

(க - ரை) அடக்க முடையவன் வீரத்திறங் காட்டுதலும், ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்காதவன் செருக்கடைதலும், அடைக்கலப் பொருளை அபகரித்தலும், அடக்க அடங்காதவர்களின் சொற்களும் துன்பந் தருவனவாம்.

(வி - ரை) ஐம்பொறிகளையும் அடக்கியுள்ள தவசி வீரத்தைக் காட்டப் புகுந்தால் தவங்கெடு மாதலால், 'அடக்க முடையவன் மீளிமை இன்னா' என்றார். 'தற்செருக்கு' என்பது 'தனக்குத் தானே கெர்வித்திருத்தல்.'

## இன்னா நாற்பது மூலமும் உரையும்
முற்றுப்பெற்றன.

இன்னா நாற்பது

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அ | | கள்ளுண்பான் | 35 | பா | |
| அடக்கமுடை | 41 | கு | | பார்ப்பாரிற் | 3 |
| அறமனத்தார் | 7 | குலத்துப் | 22 | பி | |
| ஆ | | குறியறியான் | 31 | பிறன்மனையாள் | 39 |
| ஆற்றலிலாதான் | 8 | கொ | | பு | |
| ஆன்றவிந்த | 19 | கொடுக்கும் | 40 | புல்லார்புரவி | 17 |
| ஈ | | கொடுங்கோண் | 4 | பெ | |
| ஈத்தவகையா | 24 | சி | | பெரியாரோ | 29 |
| உ | | சிறையில்கரு | 6 | பெருமையுடை | 30 |
| உடம்பாடிலாத | 12 | சிறையில்லா | 26 | பொ | |
| உண்ணாது | 18 | த | | பொருளிலான் | 37 |
| உரனுடையா | 20 | தலைதண்டமாக | 13 | பொருளுணர்வா | 11 |
| எ | | தன்னைத்தான் | 34 | ம | |
| எருதிலுழவர்க் | 5 | ந | | மணியிலாக்குஞ்ச | 14 |
| எழிலி | 36 | நட்டாரிடுக்கண் | 28 | மா | |
| ஏ | | நறியமலர் | 38 | மாரிநாட்கூவும் | 23 |
| ஏமமில்மூதூர் | 27 | நெ | | மு | |
| ஒ | | நெடுமரநீள்கோட் | 32 | முக்கட்பகவ | 1 |
| ஒழுக்க | 36 | ப | | யா | |
| க | | பகல்போலு | 9 | யானையின் மன்ன | 25 |
| கல்லாதானூருங் | 30 | பண்ணமையா | 33 | வ | |
| கள்ளில்லா | 10 | பந்தமில்லாத | 2 | வணரொளியைம் | 15 |


செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.


FOURTH EDITION] 1928 [1000 Copies.

| | அ. | ப. |
|---|---|---|
| ஆத்திசூடி உரை | 0 | 9 |
| கொன்றைவேந்தன் உரை | 0 | 9 |
| வெற்றிவேற்கை உரை | 1 | 0 |
| வாக்குண்டாம் உரை | 1 | 3 |
| நல்வழி உரை ... | 1 | 6 |
| நன்னெறி உரை ... | 1 | 6 |
| ஷடி நீதிநூற்கொத்துஉரை | 8 | 0 |
| ஷடி 6 நூலின் மூலமும், நீதிநெறி விளக்க மூலமும், அவற்றின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும் அடங்கிய நீதிநூற்றிரட்டு ... | 8 | 0 |
| அறப்பளீசுர சதகம் ... | 3 | 0 |
| குமரேச சதகம் ... | 4 | 0 |
| திருவேங்கட சதகம் ... | 4 | 0 |
| தண்டலையார் சதகம் ... | 2 | 0 |
| கோவிந்த சதகம் ... | 0 | 9 |
| எம்பிரான் சதகம் ... | 1 | 0 |
| சிவசங்கர சதகம் ... | 0 | 9 |
| ஷடி 7 சதகமும் அடங்கிய சதகத்திரட்டு1-ம்பாகம் | 12 | 0 |
| கைலாசநாதர் சதகம் ... | 2 | 0 |
| ஜெயங்கொண்டார் சதகம் | 4 | 0 |
| குருநாத சதகம் ... | 1 | 0 |
| அவையாம்பிகை சதகம் | 2 | 0 |
| அருணாசல சதகம் ... | 1 | 0 |
| அண்ணாமலைச் சதகம் ... | 4 | 0 |
| வடவேங்கடநாராயணசதக | 2 | 0 |
| தொண்டைமண்டலசதகம் | 2 | 0 |
| கோகுல சதகம் ... | 0 | 9 |
| திருத்தொண்டர் சதகம் | 2 | 0 |
| ஷடி 10 சதகமும் அடங்கிய சதகத் திரட்டு2-ம்பாகம் ரூ. | 1 | |

| | அ. | ப. |
|---|---|---|
| ஏசுவை நம்பினால் ரக்ஷிப்படையலாமா? ... | 0 | 6 |
| கிறிஸ்தவர் விடை மறுப்பு | 4 | 0 |
| விவிலிய குற்சிதம் ... | 2 | 0 |
| ஷடி திக்கார கண்டனம் | 2 | 0 |
| சிவநாம விளக்கம் ... | 1 | 6 |
| ஏசுமனிதனே, கடவுளா? | 2 | 0 |
| விக்ரஹாராதனமுதலியன | 1 | 0 |
| பைபில் யார் எழுதியது? | 1 | 0 |
| சிவனுந் தேவனா என்னும் தீய நாவுக்கு ஆப்பு ... | 1 | 0 |
| கிறிஸ்தவர் ஞானோதய ஆபாச விளக்கம் ... | 0 | 6 |
| புரோடஸ்டாண்டு கிறிஸ்துமத கண்டனம் ... | 0 | 9 |
| வஜ்ஜிரடங்கம் ... | 1 | 0 |
| கிறிஸ்துமதத் திரியேகத்துவ ஆபாசம் ... | 0 | 6 |
| இந்துஜெய பேரிகை: 4 பாகமும் ... | 3 | 9 |
| பைபிளும் உலக சிருஷ்டியின் ஆபாசமும் ... | 0 | 9 |
| கிறிஸ்துமதத்தின் குருட்டு நம்பிக்கை ... | 0 | 3 |
| பாதிரிமார் ஸ்கூலில் பெண்கள் படிக்கலாமா? ... | 0 | 3 |
| ஆரியப்பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறைமை | 0 | 6 |
| ஷடி 18 நூலும் சேர்ந்தது ரூ. | 1½ | |
| சைவதூஷண பரிகாரம் | 4 | 0 |
| பிரசங்க பீடிகை, கிறிஸ்துமத கண்டன வஜ்ஜிர குடாரம் ... ... | 1 | 6 |

சிப்ஸ் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி. சென்னை

உலகநாத பண்டிதர் இயற்றிய

# ஜாதி பேத விளக்கம்

புதிய பதிப்பு: விலை அணு 4

இந்நூலில் அடங்கிய ஜாதிகளின் பெயர்

1. சபாநாதர் வணக்கம், 2. அவை யடக்கம், 3. ஆக்கியோன் பெயர், 4. பதிகம், 5. நூற் பயன், 6. ஜாதித் தொகை, 7. னசவ பேதம், 8. சைவர் தொழில், 9. ஆதி சைவர், 10. மஹா சைவர், 11. ஜாதித் தோற்றம், 12. அந்தணர், 13. அரசர், 14. வணிகர், 15. வேளாளர், 16 அநுலோமாதியர், 17. அலகர், 18 சூதர், 19. தூதர், 20. குண்டக கோளகர், 21. ஷியார் தொழில், 22. தெலுங்கப் பிராமணர், 23. காணியாளர், 24. அபிடேகர், 25. போசர், 26. சாமந்தர், 27. பூணூற் கணக்கர், 28. மல்லர், 29. பண்டிதர், 30. கைக்கோளர், 31. சூயவர், 32 மருத்துவர், 33. கோமுட்டி., 34 பொன் வாணிபர் 35. கவறைகள், 36 ஓச்சர், 37. கொந்தக வேளாளர், 38. சவள வேளாளர், 39. மாவுத்தர், 40. சேனைக் கடையார், 41. பரிக்குலத்தார், 42. சுருதிமான், 43. பாய்வாணிகர், 44. சாலியர், 45. யாழ்ப்பாணர், 46. திசைக்கு உரியவர், 47. சிற்பர், 48. சாணியோர், 49. மீன் பள்ளியர், 50. பட்டணவர், 51. சேடர், 52. இடையர், 53. ஊசிச் சிற்பியர், 54. செக்கு வாணியர், 55, காவற் பள்ளியர், 56. ஈரங்கொலியர், 57. தட்டார், கொல்லர், கன்னார், தச்சர், 58. சான்றார், 59. களாயர், 60. மரவர், 61. பூமாலைக்காரர், 62. முச்சியர், 63. உறைகாரர், 64. அம்பட்டர், 65. கூத்தாடியர், 66. கரையார், 67. மாகுலவர், 68. வலையர், 69. வேடுவர், 70. செப்புக் கன்னார், 71. குன்றுவர், 72. சவணர், 73. நிலைத் ?றியார், 74. காணிக்கர், 75. பரவர், 76. கடைய'ர், 77, அநுலோமர்க்குத் தொடக்கறுக்கிறவர், 78. அநுலோமர்க்கு வெளுக்கிறவர், 79. பிரதிலோமர்க்கு வெளுக்கிறவர், 80. நீல வண்ணார், 81. அரிப்பர், 82. இருளர், 83. கணியர், 84. ஒட்டர், 85. கடிகைப் புலவர், 86. பறையர், 87. இளமைகள், 88. சக்கிலியர், 89. தோட்டியர், 90. நக்கவாரிகள், 91. சோனக, 92 பரங்கர், 93. கருவர், 94. ஜாதி உயர்ச்சி, 95. ஜாதித் தாழ்ச்சி